# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 12 புதன்கிழமை (29-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:335


# 245 தமிழர்கள் கைதாகி காணாமற் போனதற்கு இராணுவமே பொறுப்பு:
## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.29

வடக்கில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுக்கு இராணுவத் தரப்பிலிருந்து உரிய ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை.

- இவ்வாறு விசனம் தெரிவித்திருக்கின்றது விசாரணைக் குழு.

1990 இற்கும் 1998 இற்கும் இடையில யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்வதற்காக மூவர்கொண்ட குழு ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்திருந்தது. அதன் அறிக்கை தயாராகியுள்ளது.

அந்த அறிக்கையின் சாராம்சம் நேற்று கொழும்பில் ஊடகத்துறையினர், மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு விளக்கப்பட்டது.

பின்னர், அந்த அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராணுவத் தளபதி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை இராணுவத்தினரின் போக்குக் குறித்து விசாரணைக் குழுவின் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த விசாரணை அறிக்கையில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள்

(15ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவருடன் படைகள் தொடர்பு வைக்கமாட்டா!

## ஜனாதிபதியின் உத்தரவு முழு அளவில் பின்பற்றப்படும் கூட்டுப்படைத் தலைமை அலுவலர் பலகல்ல தெரிவிப்பு

கொழும்பு,ஒக்ரோபர்29

**கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்ஸனுடன் முப்படையினரோ, பொலீஸாரோ இனிமேல் எந்தத் தொடர்பும் வைக்கமாட்டார்கள். இது விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்துள்ள உத்தரவு முழு அளவில் பின்பற்றப்படும்.**

**கூட்டுப்படைகளின் தலைமை அலுவலரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார்.**

நேற்று உதயனுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டு மிகப் பாரதூரமானது. எந்தப் படையோ அல்லது படை அதிகாரியும் அத்தகைய நடவடிக்கையைப் பொறுத்துக்கொள்ள முடி

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கிளிநொச்சி வந்திருந்த இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானை வரவேற்கும் சு.ப.தமிழ்செல்வன். *(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)*

தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் உள்ளே ☛

### கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரச்சினை:

## பாதுகாப்பு அமைச்சர் இன்று அமைச்சரவைக்கு அறிக்கை

கொழும்பு,ஒக்.29

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத தலைவர் ரெலிவ்சன் பற்றிய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்காணிப்புக் குழுத் தலைவர் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் குழு லண்டனில் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஒக்.29

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான அரசமைப்பு விவகாரக் குழுவினர் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை லண்டனில் நேற்றுச் சந்தித்தனர்.

லண்டனிலுள்ள வெளிவிவகார, பொதுநலவாய அமைப்பின் காரியாலயத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளால் எதிர்வரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் மீது துப்பாக்கிச் சூடு! மூதூரில் மீண்டும் பதற்றம்!!

திருகோணமலை.ஒக்.29

மூதூர், கட்டைபறிச்சான் பிரதேசத்தில் புளியடிச்சந்தை இடிமண் துறையில் குளிக்கச்சென்ற வயோதிபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவத்தை அடுத்து மூதூரில் நேற்று பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ளது.

அச்சு முஹம்மது குட்டி (வயது 74) என்பவரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்த நிலையில் படகு மூலம் கொண்டு செல்லப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசு – புலிகள் பேச்சு நடத்தி தீர்வுகாண இ.தொ.கா. பூரண ஒத்துழைப்பு வழங்கும்!

### தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின் அமைச்சர் தொண்டமான் உறுதி

கிளிநொச்சி,ஒக்.29

அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சை தொடர்ந்து நடத்தி தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இ.தொ.கா. பூரண ஒத்துழைப்பை வழங்கும். விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பான பேச்சுக்களுக்கும் உதவுவோம். சமாதானத்துக்காக எந்த உதவிகளையும் வழங்குவோம்.

இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான், நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதையடுத்து செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11.45 மணிக்கு ஆரம்பமான பேச்சுகள் ஒன்றரை மணி

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் பிரதிநிதிகளுடன் விரைவில் பேச்சு என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி.ஒக்.29

இடைக்கால நிர்வாகம் தொடர்பான எமது திட்டவரைவு 31ஆம் திகதி நோர்வேத் தரப்பிடம் கையளிக்கப்படும். அதன் பின்னர் - விரைவில் - முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் உள்ள தமது சமாதானச் செயலகத்தில் இ.தொ.கா. பிரதிநிதிகளுடனான பேச்சுக்களை முடித்துக்கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கு தமிழ்ச்செல்வன் அளித்த பதில்களும் வருமாறு:-

*கேள்வி:* புலிகளின் திட்டவரைவு, என்ற பெயரில் கடந்த சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளியான தகவல்கள் சரியானவையா?

*பதில்:* அதுபற்றிய கருத்தை இப்போது கூறவிரும்பவில்லை. எல்லோரும் ஊகங்களை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். உண்மைகளை அறிய

(16ஆம் பக்கம் பார்க்க)


சிறுக சிறுக

பிள்ளைகளுக்காக

குடும்பத்துக்காக

நாட்டுக்காக

நமக்காக

சில்லறைகளானாலும்

சேமிப்போம்.



ஒக்டோபர் மாதம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு மாதமாகும். இன்றே சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பித்து ஒவ்வொரு சதத்தையும் சேமிக்க பழகுங்கள். இத்தினத்தில் எமது வங்கி க.பொ.த. உயர்தரத்தில் சிறப்பாகச் சித்தி எய்திய 200 வசதி குறைந்த மாணவர்களுக்கு பணப் பரிசுகளை வழங்கவுள்ளது. மாவட்ட அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியிலும் பயிலும் (விஞ்ஞானம்/கணிதம்/கலை/வர்த்தகம்) இருவருக்கு இப் பரிசுகள் வழங்கப்படும். இது தேசத்தின் நலனுக்கான எமது பங்களிப்பாகும்.

NSB



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார். அச்சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# சட்டவிரோத மின் பாவனை சிறுவன் உயிரைப் பறித்தது!

## அராலி மேற்கில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

சட்ட விரோத மின்சாரப் பாவனை சிறுவன் ஒருவனின் உயிரைப் பறித்த சம்பவம் நேற்றுக் காலை வட்டுக் கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பற்குணராசா தவரஞ்சன் (வயது 14) என்ற சிறுவனே இச்சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச்சிறுவனின் வீட்டுக்கு அயலில் உள்ள நபர் ஒருவர், மின்சார வயரை இரவலாகப் பெற்றுள்ளதாகவும் - அந்த வயரைப் பயன்படுத்தி அந்த நபர் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றதாகவும் - கூறப்படுகிறது.

இரவல் கொடுத்த மின்சார வயரை திரும்பப் பெற நேற்றுக் காலை இச்சிறுவன் சென்றுள்ளார். மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டதாக் கருதிய சிறுவன் மின்சார வயரை சுற்றி எடுக்க முயற்சித்துள்ளார். ஆனால், சட்ட விரோதமாக ஏற்படுத்தப்பட்டிருந்த மின் இணைப்பு துண்டிக்கப்படாததால் வயரில் மின்கசிவு ஏற்பட்டு சிறுவனைத் தாக்கியது. இதனால் சிறுவன் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்பற்ற ஒரு காணியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. அதனால் சிறுவனை மின்சாரம் தாக்கிய சம்பவம் சுமார் அரை மணி நேரத்தின் பின்னரே பிறருக்குத் தெரிய வந்துள்ளது.

இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற அராலி மேற்கு கிராம அலுவலர் வ.தில்லைநடராஜா வட்டுக் கோட்டைப் பொலீஸாருடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அராலி மேற்குப் பகுதியில் சட்ட விரோத மின்சார பாவனை அதிகரித்துள்ளதாகவும் -

இதனைத் தடுப்பதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் - கிராம அலுவலர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## வியட்நாமிய பிரதி அமைச்சர் இன்று வருகிறார்

வியட்நாமின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையும், வியட்நாமும் மேற்கொண்டுள்ள வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகக் கலந்தாலோசிக்கும் முகமாகவே இவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

## கிளிநொச்சி ஆசிரியர்களும் போராட்டத்தில்!

திருகோணமலையில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னால் கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுடன் நேற்று கிளிநொச்சி மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இணைந்து கொண்டுள்ளனர். நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட ஆசிரியர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

# மாணவிகளிடம் சேஷ்டை புரிந்த மூவருக்கு புலிகள் எச்சரிக்கை!

திருகோணமலை,ஒக்.29

யுவதிகளிடம் சேஷ்டைகள் புரிந்த மூன்று இளைஞர்களைக் கைதுசெய்த விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்து விடுவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அன்புவழிபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரத்தியேக வகுப்புக்குச் சென்று வந்த மாணவிகளிடம் இளைஞர்கள் மூவர் அன்புவழிபுரத்தில் வைத்து சேஷ்டை புரிந்துள்ளனர். அம்மூவரையும் புலிகள் கைது செய்தனர். எச்சரிக்கப்பட்ட இளைஞர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. (ஒ)

## மிதிவெடியில் சிக்கி இரு சிறார்கள் படுகாயம்

மட்டக்களப்பு,ஒக்.29

வெல்லாவெளியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மிதிவெடியில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறார்கள் படுகாயமடைந்தனர்.

அருளானந்தம் டிலோசன், அருளானந்தம் டிலோஜினி ஆகிய இருவருமே இவ்வாறே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களில் அருளானந்தம் டிலோசனுக்கு ஒரு கை கழற்றப்பட்டுள்ளதாகவும் டிலோஜினி படுகாயமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த போது பிற்பகல் 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறார்கள் இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ)

# குடத்தனையில் மணல் அகழ பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

## இதனால் விநியோகம் இடைநிறுத்தம்

வடமராட்சி,ஒக்.29

வடமராட்சி கிழக்கு, குடத்தனை பகுதியில் மணல் அகழ்வதற்கு அப்பகுதிப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் மணல் அகழ்வதற்கு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத்துக்கு யாழ். அரச அதிபரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கனிமவள ஆராய்ச்சி மையத்தால் மணல் அகழ அடையாளமிடப்பட்ட பகுதிகளில் மேற்படி நிறுவனம் மணல் அகழ்ந்து வந்தது.

இந்நிலையில் நேற்று மணல் அகழ வாகனங்களுடன் சென்றவர்களை அப்பகுதி மக்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தித் தடுத்தனர். குடத்தனைப் பகுதியில் மணல் அகழ அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் அப்பகுதியில் மணல் அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் -

அதனால், மணல் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் -

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னர் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மணல் விநியோகம் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென மேற்படி நிறுவனம் அறிவித்திருந்ததும் -

ஆனால், நேற்று பொதுமக்கள் எதிர்ப்புக் காரணமாக மணல் விநியோகம் மீண்டும் பிற்போடப்பட்டமையும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ-173)

# முதலமைச்சர் வேட்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள்!

## நிறுத்துவதற்கு ஜே.வி.பி. தீர்மானம்

ஏழு மாகாண சபைகளுக்கும் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களை முதலமைச்சர் வேட்பாளர்களாக நிறுத்த ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

ஆறு மாகாண சபையின் பதவிக் காலம் 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது. வட மேல் மாகாண சபையின் பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முடிவடையும்.

மாகாண சபைகள் அனைத்துக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்த ஜனாதிபதி திட்டமிட்டிருப்பது தெரிந்ததே.

வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் கூட்டத்திலேயே முதலமைச்சர் வேட்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களை நிறுத்துவதென ஜே.வி.பி தீர்மானித்திருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மாவீரரின் பெற்றோர்களுக்கு அரசியல்துறை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஒக்.29

மாவீரர் தினத்தன்று துயிலுமில்லங்களுக்குச் செல்லவுள்ள மாவீரர்களின் பெற்றோர்களை அண்மையில் உள்ள அரசியல்துறை பணிமனைகளுடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் மாவீரர் தினத்தன்று யாழ். மாவட்டத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களில் பிற மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு செல்ல உள்ளோரை அழைத்துச் செல்ல விசேட ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இதன்படி முள்ளியவளை, வன்னிவிளாங்குளம், ஆலங்குளம், விசுவமடு, முழங்காவில், ஆட்காட்டிவெளி, வவுனியா, கிளிநொச்சி, அளம்பில், பன்றிவிரிச்சான் ஆகிய இடங்களில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு மாவீரர்களின் பெற்றோரை அழைத்துச்செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே, இந்தத் துயிலுமில்லங்களுக்குச் செல்லவுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் தமது கோட்ட, பிரதேச, மாவட்ட அரசியல்துறைப் பணிமனைகளில் ஏதாவது ஒன்றில் தமது பெயர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை வேண்டிக்கொள்கிறது.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# வவுனியாவில் மோதலில் ஈடுபட்டோரை புலிகள் பிடித்து பொலீஸில் ஒப்படைப்பு

வவுனியா,ஒக்.29

வவுனியாவில் கோஷ்டி மோதலில ஈடுபட்டவர்களில் 5 பேரை விடுதலைப் புலிகள் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

வவுனியா கிடாய்ச்சூரி மற்றும் மறவன் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இரு குழுவினர் தமக்கிடையே நேற்றுமுன்தினம் இரவும், நேற்றுக் காலையும் மோதிக்கொண்டனர். இந்த மோதல்களில் காயமடைந்த 5 பேர் வவுனியா பொது மருத்துவமனையில சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்கள் மோதல் இடம்பெற்ற இடத்துக்கு நேற்று நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்தனர். பின்னர் மோதலுக்கு காரணமானவர்கள் என்று கருதப்படும் 5 பேரை அவர்கள் பிடித்து வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

மறவன்குளம் கிராமம் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-164)

# சுங்க அதிகாரிகள் சிலர் இப்படியும் 'ஓவர்டைம்'

கொழும்பு,ஒக்.29

சுங்கத் திணைக்களத்தில் சில அதிகாரிகள் தினமும் 24 மணி நேரமும் மேலதிக நேர வேலை செய்கின்றனர். அதுமட்டுமல்ல, வாரத்தில் ஏழு நாள்களும் அவ்வாறே தொடர்ந்து மேலதிக நேர வேலையில் (ஓவர் டைம்) ஈடுபடுகின்றனர்.

கணக்காய்வு அதிபதி திணைக்கள உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இது தெரியவந்திருக்கிறது.

இவ்வாறு ஒருவர் தொடர்ந்து வேலை செய்வது யதார்த்தமற்றதாகும் எனவும் கணக்காய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிக நேர வேலை கொடுப்பனவு வழங்க செலவாகும் பணம், அத்திணைக்களத்தின் மொத்த ஊழியர்களுக்கும் செலவாகும் சம்பளப் பணத்தை விட சுமார் 1.5 சதவீதம் அதிகமாகும் எனவும் கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றிலிருந்து

# 2 கொலை, பாலியல் வல்லுறவு வழக்குகள் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு மாற்றம்

தெல்லிப்பழை,ஒக்.29

கொலை மற்றும் பாலியல் வல்லுறவு என்பவற்றுடன் தொடர்புபட்ட மூன்று வழக்கு விசாரணைகள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் யாழ். மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தூர் மேற்கில், கசிப்பு உற்பத்தி தொடர்பான தகவல் வழங்கியதற்காக கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் இராசரத்தினம் உதயகுமார் என்ற 19 வயது இளைஞனின் வழக்கில் சந்தேகநபர்களான பூதத்தம்பி முருகானந்தம், பூதத்தம்பி மகேந்திரம் ஆகிய சகோதரர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு உறுதி செய்யும் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து மேற்படி நபர்களுக்கெதிரான மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

அதேபோல் சுதுமலை தெற்கு, மானிப்பாய் பகுதியில் 22 வயது யுவதி ஒருவரை (நல்லையா கஜேந்தினி - 22) இரவு நேரம் வீட்டிற்குள் புகுந்து அச்சுறுத்தி பாலியல் வல்லுறவு கொண்டதோடு அவரது தங்கச் சங்கிலியையும் அபகரித்துச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஜோசப் தேவகரன் என்ற நபர் மீதும் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் தொடர்பான வழக்கும் மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

மனைவியைத் தூக்கி கொலை செய்தார் எனும் குற்றச்சாட்டின் பேரில மல்லாகம் நீதிமன்றில் மானிப்பாய்ப் பொலீஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சுழிபுரத்தைச் சேர்ந்த முருகேசு ஆனந்தராஜா என்பவர் தொடர்பான வழக்கு கடந்த எட்டாம் மாதம் மேல்நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

மேற்படி நபர் சார்பாக அவரது வழக்கறிஞர் செய்த பிணை மனுவை ஏற்று அவரை 15 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் விடுவிக்க மேல்நீதிமன்று அனுமதியை வழங்கியுள்ளது. (ம-150)

# பக்தாத்தில் நடந்த தொடர் குண்டுத் தாக்குதல்கள்

# வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் கைவரிசையே!

பக்தாத்,ஒக்.29

சிரியாவிலிருந்து ஈராக்கிற்குள் நுழைந்த தீவிரவாதிகளே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரைக் குறிவைத்து குண்டுத்தாக்குதல் நடத்தினர் என்று தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பக்தாத்தில் தீவிரவாதிகள் நான்கு தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைமையகம், பொலிஸ் நிலையங்கள் ஆகியன தாக்கப்பட்டன.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்களில் நாற்பதிற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; இருநூற்று முப்பது பேர் காயமடைந்தனர்.

மேற்படிக் குண்டுத்தாக்குதல்களை நடத்திய குழுவினரின் ஒருவரை ஈராக்கியப் பொலிஸார் பிடித்துள்ளனர். அவர் சிரியாவைச் சேர்ந்தவரென்று தெரிய வந்துள்ளது. சிரியாவில் பெற்ற கடவுச்சீட்டு அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

இதன்மூலம், மேற்படிக் குண்டுத் தாக்குதல்களுக்கும் வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஜனாதிபதி புஷ் இது குறித்துக் கூறுகையில் -

ஈராக்கில் நடைபெறும் தொடர்த் தாக்குதல்களைக் கண்டு அமெரிக்கா ஒருபோதும் மிரளாது. அங்கிருந்து படைகள் பின்வாங்கவும் மாட்டா.

தீவிரவாதத்திற்கு எதிரான போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இதுவே தீவிரவாதிகளை மூர்க்கமான தாக்குதல்கள் நடத்தத் தூண்டியுள்ளது - என்றார்.

ஜனாதிபதி புஷ்ஷுக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஹேவார்டின் என்பவர் தெரிவிக்கையில் -

புஷ்ஷின் வாதத்தை என்னால் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. ஈராக்கில் வன்முறைகளும், படுகொலைகளும் அதிகரித்துள்ளன. ஆனால், எல்லாம் நன்றாகவே நடக்கிறது என்று புஷ் கூறுகிறார். எனது அறிவுக்கு எட்டிய வகையில் ஈராக்கில் நிலைமை மோசமடைந்து விட்டது - என்று அவர் கூறியுள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலை ஐநா. செயலர் நாயகம் கோபி அனான் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

நூற்றிநாற்பது வருட வரலாற்றில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இவ்வாறான மோசமான தாக்குதலுக்கு முகம்கொடுத்ததில்லை. இந்த அமைப்புக்கு எதிரான தாக்குதல் மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல் - என்று அவர் கூறியுள்ளார்.

ரமழான் நோன்பு நேற்றுமுன்தினமே ஆரம்பித்தது. அன்றைய தினத்தில் ஈராக்கில் அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. இது ஈராக்கியர்களை ஆத்திரமடைய வைத்திருக்கிறது.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஈராக்கியர்கள் என்பதால் அவர்களின் ஆத்திரம் மேலும் பல மடங்கு அதிகரித்திருக்கிறது.



ஈராக்கில் நேற்றுமுன்தினம் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான செஞ்சிலுவைச் சர்வதேச அலுவலகக் கட்டடம். இதே வேளை நேற்றுமுன்தினம் ஈராக்கின் பலூஜா நகரில் இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் பாடசாலைச் சிறுவர்களும் அடங்குவர். இதில் மேலும் பலர் காயமடைந்தனர்.



ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன. இத்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஈராக்கியர் ஒருவரின் குழந்தையும், மனைவியும் இறுதிச் சடங்கின் போது கதறியழும் காட்சி.

### ஆறு மாதங்களுக்கு முன் விண்வெளிக்கு கிளம்பிய

# 'சோயுஸ்' விண்கலம் வெற்றிகரமாக பயணத்தை முடித்துத் திரும்பியது!

ஆறுமாதங்களுக்கு முன் மூன்று விண்வெளி வீரர்களுடன் விண்வெளிக்குச் சென்ற 'சோயுஸ்' விண்கலம் நேற்று பூமியை வந்தடைந்தது.

கசகஸ்தானில் உள்ள புற்தரை ஒன்றில் 'சோயுஸ்' விணகலம் நேற்றுக் காலை தரையிறங்கியது. அதில் பயணித்த மூன்று வீரர்களும் உற்சாகத்துடனும், ஆரோக்கியத்துடனும் காணப்பட்டனர்.

ஆறு மாதங்களுக்கு முன் அமெரிக்கரான எட்வேட்லூ, ஸ்பானியரான ஸ்பான்டர், ரஷ்யரான மெலன் சென்கோ ஆகிய மூவரையும் ஏற்றிக் கொண்டு கசகஸ்தான் ஏவுதளத்திலிருந்து ரஷ்யா தயாரித்த 'சோயுஸ்' விண்கலம் புறப்பட்டது.

நேற்றுக்காலை அது திட்டமிட்டபடி மீண்டும் பூமியை வந்தடைந்தது. 'சோயுஸ்' பூமியை வந்தடைந்த செய்தியை ரஷ்ய கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்தது.

விண்கலத்திலிருந்து தரையிறங்கிய மூன்று விண்வெளி வீரர்களும் உற்சாகத்துடன் காணப்பட்டனர். அவர்களுக்கு உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. அப்பிள பழங்களும், தேநீரும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அமெரிக்கரான எட்வேட்லூ இந்த முறையுடன் இரண்டு தடவைகள் விண்வெளிக்குச் சென்று திரும்பியிருக்கின்றார்.

விண்வெளியில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் ஆறுமாதங்கள் தங்கியிருந்த இவர்கள் இக்காலப்பகுதியில் அந்த நிலையத்தின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டனர்.

'சோயுஸ்' விண்கலம் விண்வெளியிலிருந்து பூமிக்குத் திரும்புவதற்கு சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் எடுத்தது.

கடந்த மே மாதம் ரஷ்யாவின் மற்றொரு 'சோயுஸ்' விண்கலம் பூமிக்குத் திரும்பியபோது தரையிறங்குவதற்குத திட்டமிட்ட இடத்திலிருந்து விலகியிருந்தது. ஆனால், நேற்றுத் தரையிறங்கிய விண்கலம் திட்டமிட்டபடி சரியான இடத்தில் தரையிறங்கியது.

ரஷ்ய வீரர் மெமன் ஷென்கோ கடந்த ஜூன் மாதம் விண்வெளியில் இருந்தபடியே திருமணம் செய்து கொண்டார். அமெரிக்காவைச் சேர்ந்த எக்கரெறினா என்பவரை இவர் திருமணம் செய்தார். மணமகள் பூமியிலிருக்க மணமகன் விண்வெளியிலிருக்க இவர்கள் இருவருக்கும் அமெரிக்காவில் பதிவு திருமணம் நடந்தது.

மணப்பெண் தனது கணவரை எதிர்பார்த்து கசகஸ்தான் ஏவுதளத்துக்கு வந்திருந்தார். அங்கு இருவரும் கட்டியணைத்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் காதலித்து திருமணம் முடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# லெபனான் எல்லைக் கிராமங்களில் இஸ்ரேல் விமானங்கள் குண்டு மாரி!

லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலிய எல்லையை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக இஸ்ரேல், லெபனானின் மலைப்பிரதேச எல்லைக் கிராமங்களில விமானக் குண்டு வீச்சு நடத்துகிறது.

இஸ்ரேல் - லெபனான் எல்லையில் உள்ள ஷேர்பா பண்ணையை சொந்தம் கொண்டாடுவதில் இரு தரப்பும் சண்டையிட்டுவருகின்றன. இப்பகுதியை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

நேற்று ஹிஸ்புல்லாத் தீவிரவாதிகள் அந்தப் பண்ணைப் பகுதியை நோக்கி பீரங்கித்தாக்குதல் நடத்தினர் 155 மி.மீ ஆட்லறி பீரங்கிகளைப் பயன்படுத்தி அவர்கள் கடுந்தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பதிலடியாகவே இஸ்ரேலிய விமானங்கள் லெபனான் எல்லைக் கிராமங்களில் கடும் விமானக் குண்டு வீச்சை நடத்துகிறது.

விமானக் குண்டுவீச்சை லெபனான் ஜனாதிபதி எமிலி லாஹூர் வன்மையாக் கண்டித்திருக்கிறார்.

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை சிரியாவும், லெபனானும் குழப்புகின்றன என்று தெரிவித்தே இஸ்ரேல் குண்டுமாரி பொழிகிறது - என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த பதினெட்டு வருடங்களாக ஹிஸ்புல்லா தீவிரவாதிகளைக் குறிவைத்து ரமழான் நோன்புக் காலத்திலேயே இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

### நெவோடா மலைப்பகுதியில் வைத்து

# கடத்திய சுற்றுலாப் பயணிகளை விடுவிக்க கொலம்பிய கிளர்ச்சியாளர்கள் இணக்கம்!

கொலம்பிய இடதுசாரி கிளர்ச்சியாளர்கள் கடந்த மாதம் கடத்திய வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எட்டுப் பேரையும் விடுவிக்க இணங்கியுள்ளனர்.

கடத்தப்பட்ட ஒவ்வொருவரும் தனித்தனியாக விடுவிக்கப்படவுள்ளனர். முதலில் ஸ்பானியர் ஒருவர் விடுவிக்கப்படுவார் என்று கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் நெவோடா மலைப் பகுதியில் வைத்து இவர்கள் எட்டுப் பேரும் கடத்தப்பட்டனர். இவர்களில் பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் இருவாரங்களுக்கு முன்னர் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து தப்பினார்.

இந்நிலையில், சுற்றுலாப்பயணிகளை விடுவிப்பதற்குப் பதிலாக சிறையில் இருக்கும் கிளர்ச்சியாளர்களின் தலைவர்களை விடுவிக்க இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

கொலம்பிய ஜனாதிபதி அல்வரோ ஊரிப் இந்த இணக்கத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே, சுற்றுலாப்பயணிகளை விடுவிக்க கிளர்ச்சியாளர்கள் இணங்கியுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுக்கும் இடையில் சமரசப் பேச்சு நடத்திய [illegible] இத்தகவலைத் தெரிவித்தார்.

கத்தோலிக்க தேவாலயத்தினர், ஐநா.உறுப்பினர் ஒருவர், கிளர்ச்சியாளர்களின் தலைவர்கள் இருவர் ஆகியோர் முன்னிலையில் கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளைக் கிளர்ச்சியாளர்கள் கடத்தியதை சர்வதேச விவகாரமாக மாற்றாமல் பார்த்துக் கொள்வதாக ஜனாதிபதி ஊரிப் உறுதியளித்திருக்கிறார்.

# அரபாத்தைக் கொல்ல மாட்டோம்; இஸ்ரேலிய பிரதமர் திடீர் அறிவிப்பு!

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் இஸ்ரேலுக்கு இல்லை என்று பிரதமர் ஏரியல் ஷெரோன் அறிவித்திருக்கிறார்.

ஆயிரக்கணக்கான யூதர்களின் படுகொலைக்கு அரபாத் காரணமாக இருந்தபோதும், அவரைக் கொலை செய்ய இஸ்ரேல் முன்வரவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கடந்த மாதம் அரபாத்தைக் கொல்வதற்கு இஸ்ரேல் சதித்திட்டம் திட்டியிருந்தது. இது பகிரங்கமாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது பிரதமர் ஏரியல் ஷேரோன் இந்த விடயத்தில் 'பல்டி' அடித்திருக்கிறார்.

அரபாத்தைக் கொல்வதென இஸ்ரேல் கடந்தமாதம் அறிவித்ததையடுத்து, பலஸ்தீனத்திற்கு ஆதரவாக லெபனானில் முகாம் அமைத்துச் செயற்படும் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பு இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை அதிகரித்தது.

இந்தத் தாக்குதல்கள் அனைவரும் காலமாக வன்முறையாகவும் வெடித்துள்ளன. இந்நிலையிலேயே பிரதமர் ஷெரோன், அரபாத்தைக் கொல்லும் திட்டம் இஸ்ரேலுக்கு இல்லை என்று அறிவித்திருக்கிறார்.

'பலஸ்தீனர்கள் கவலைப்படத் தேவையில்லை. அரபாத் சுறுசுறுப்பாக இருக்கிறார். அத்துடன், அவர் யூதர்களைப் படுகொலை செய்வதற்கு ஆதரவு தெரிவித்து, அதனை ஆர்வமுடன் கவனித்துக் கொண்டும் இருக்கிறார்' - என்றும் பிரதமர் ஷெரோன் மேலும் கூறியிருக்கிறார்.

உலக அரங்கில்

## இளவரசர் சார்ள்ஸ் இந்தியா வருகை



பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் ஒன்பது நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியாவிற்கு வந்தார்.

1992ஆம் ஆண்டு இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த இவர், அதன் பின்னர் தற்போதே இந்தியா வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி அப்துல் கலாம், துணை ஜனாதிபதி ஷேகவாக் மற்றும் பல தலைவர்களை அவர் சந்திப்பார்.

புதுடில்லியில் மூன்று நாள்களும், ராஜஸ்தானில் நான்கு நாள்களும், மும்பையில் இரண்டு நாள்களும் அவர் தங்கியிருப்பார்.

இக்காலத்தில் இந்தியாவில் உள்ள வரலாற்றுச் சின்னங்களை அவர் பார்வையிடுவார். அத்துடன் இந்திய - பிரிட்டிஷ் உறவை மேம்படுத்தும் கருத்தரங்கு ஒன்றிலும் அவர் கலந்து கொள்வார்.

# நாயின் வயிற்றைக் கிழித்து பணத்தை மீட்ட சீன விவசாயி!

பீஜிங்,ஒக்.29

கஷ்டப்பட்டு சேமித்த பணத்தை நாய் விழுங்கிவிட்டதால், அந்த நாயைக் கொன்று அதன் வயிற்றுக்குள் இருந்து பணத்தை எடுத்திருக்கிறார் சீன விவசாயி ஒருவர்.

மத்திய சீனாவில் இந்தச் சம்பவம் நடந்தது. மேற்படி நபர் வீட்டைப் பூட்டிவிட்டு தோட்டத்திற்குச் சென்றார், அப்போது, வீட்டினுள் இருந்த நாய் முப்பதாயிரம் ரூபா பணக்கட்டை அப்படியே விழுங்கிவிட்டது.

வீட்டுக்கு திரும்பிவந்த அவர் பணக்கட்டைத் தேடினார். ஆனால், அங்கு துண்டுத் துண்டுகளாகக் கிழிந்த நிலையில் சில பணத்தாள்கள் மட்டுமே கிடந்தன.

இதனால், நாய்தான் பணக்கட்டை விழுங்கியது என அவர் தெரிந்து கொண்டார். உடனடியாக செல்லப்பிராணியென்று கூடப் பார்க்காமல் நாயைக் கொன்று அதன் வயிற்றில் இருந்து பணத்தை எடுத்தார்.

முப்பதாயிரம் ரூபா பணக்கட்டில் பதினையாயிரம் ரூபாவை மட்டுமே அவரால் எடுக்க முடிந்தது. மிகுதிப்பணம் பாவனைக்குதவாத வகையில் சிதைந்து கூழாகிவிட்டது.

பணத்தின் ஒரு பகுதியைத் தன்னும் மீட்டுவிட்ட சந்தோஷம் அவரிடத்தில் காணப்பட்டாலும், நாயைக்கொன்ற துயரமும் அவரிடத்தில் காணப்படுகிறது.

# பின்லேடன் எங்குதான் இருக்கிறார்?



**பின்லேடனை உயிருடனோ, பிணமாகவோ கைப்பற்ற அமெரிக்கா எடுக்காத முயற்சிகள் இல்லை. ஆனால், அவர தலைமறைவு வாழ்க்கை மேற்கொள்வது தொடர்பான செய்திகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. அவரது தலைமறைவு வாழ்க்கை குறித்து அண்மையில் கிடைத்த தகவல்களின் தொகுப்பை இங்கு தருகிறோம்.**





ஒஸாமா பின்லேடனைப் பிடிக்கச் சென்ற, அமெரிக்க இராணுவத்தின் பேச்சாளரான ரொட்னி டேவிஸ் என்னும் கேணல், அது கைகூடாது போய், இன்னமும் ஆப்கானிஸ்தானிலேயே தங்கியுள்ளார். சர்வதேச சஞ்சிகையான 'நியூஸ் வீக்'கின் (NEWS WEEK) சார்பாக பணிபுரிந்த செய்தியாளர் ஒருவர், அமெரிக்க இராணுவத்திற்குப் பின்லேடன் எங்குள்ளாரெனத் தெரியுமா என்று காபூலில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கேணலிடம் வினவிய போது, பின்லேடன் எங்குள்ளாரென்பது, எங்களுக்குத் தெரியாது என அவர் கூறியுள்ளார்.

இதே கேள்வியை சர்வதேச சஞ்சிகையான 'ரைம்' (TIME) சஞ்சிகையின் செய்தியாளர் ஒருவர் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடம் கேட்டுள்ளார். ஐக்கிய நாடுகளின் பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி முஷாரப் நியூயோர்க்கிலிருந்து அக்கேள்விக்கு சரியான பதிலை அளிக்கவில்லை.

"பின்லேடன் ஒரே இடத்தில் இருக்கும் நபர் அல்ல. அவர் சில நேரங்களில் பாகிஸ்தானின் சில பகுதிகளில் உலாவக்கூடும், சிலவேளை ஆப்கானிஸ்தானுக்குள் இருக்கக் கூடும். என்னால் இதைத்தான் கூற முடியும்" என்பதே அவரது பதிலாக இருந்தது.

ஜனாதிபதி முஷாரப்பின் கூற்றுக்கு அமைய, ஒரு சமயம் பாகிஸ்தானுக்கும், பிறிதொருசமயம் ஆப்கானிஸ்தானுக்கும் இலகுவாகச் சென்றுவரக்கூடுமாயின் பின்லேடன் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே தங்கியிருக்க வாய்ப்புக்கள் உள்ளன. பதிலாக இந்த இருநாடுகளில் ஏதோ ஒரு நாட்டில் தங்கியிருக்கும் வாய்ப்புகள் அரிது.

அதுதான் உண்மையுமாகும். பின்லேடனின் வசிப்பிடங்களைப் பற்றி நிலவும் பல தகவல்களை ஆராய்ந்து, அவை பற்றி 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ள சாமி யுசெப்ஸாய் மற்றும் ரொன் மொரேயோ ஆகிய இரு பத்திரிகையாளர்களும் பின்லேடன் தற்போது ஆப்கானிஸ்தானின் குணார் பிரதேசத்திலேயே இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் எல்லையிலேயே குணார் பிரதேசம் உள்ளது.

இப்பிரதேசம், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில், காபூல் நகரின் வடகிழக்கில் பாயும் பெக் நதிக்கரைகளை ஆக்கிரமித்தவாறு, பெரும் மலைகளையும், மலைச் சிகரங்களையும் அடர்ந்து வளர்ந்துள்ள காடுகளைக் கொண்ட பரந்த இடமாகும்.

இந்தக் காட்டுப் பிரதேசத்தில் சில கிராமங்களில் மண் குடிசைகளில் ஆப்கானின் பழங்குடி மக்களான இஸ்லாமியர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடையே வசித்து வரும் கான் காக்கா என்றழைக்கப்படும் முதியவர், பெக் நதித்தீரத்தில் வசிக்கும் சகலராலும் மதிக்கப்படும் ஒருவராவார். அவரது மருமகனான ஹம்சா அலி ஜசீரி, ஓஸாமா பின்லேடனின் தனிப்பட்ட பாதுகாவலர்களில் ஒருவராக பணியாற்றுவதே அவர் அவ்வாறு மதிக்கப்படுவதற்குக் காரணமாகும். திடீரென மலைகளை ஊடறுத்து, காட்டுக்குள்ளிருந்து தோன்றும் ஹம்சா அல் ஜசீரி, தனது தலைவனைப் பற்றிப் பல கதைகளைக் கூறுவார். தனது குழந்தை குட்டிகளையும் பார்த்த பின்னர், காட்டுக்குள் மாயமாக மறைந்து விடுவார்.

ஹம்சா அல் ஜசீரி தனது மாமனான கான் காக்காவிடம் தெரிவித்த தகவல்களின் படி, பின்லேடன் குணார் மலையடிவாரங்களில் தனது மூன்று புதல்வர்களுடனும், குடும்ப உதவியாள்களுடனும் வசித்து வருவதாகத் தெரிகிறது. ஆயினும், இந்தக் காட்டு வாழ்க்கை அவர்களுக்கு அசௌகரியங்கள் நிறைந்ததாகவே உள்ளது. ஏனெனில், அண்மையில் பின்லேடனின் மருமகள் ஒருத்தி மகப்பேற்றின்போது அங்கு உயிரிழந்துள்ளார். இம்மரணத்திற்கு அமெரிக்காவே பதிலளிக்கவேண்டுமெனப் பின்லேடன் கூறியுள்ளதாக, ஹம்சா அல் ஜசீரி தனது வீட்டுக்கு வந்த போது கூறியுள்ளார்.

பின்லேடனைப் பற்றிய உண்மைத் தகவல்களைத் தேடிச் சென்ற "நியூஸ் வீக்" (NEWS WEEK) சஞ்சிகையின் பத்திரிகைச் செய்தியாளர்களுக்கு கடந்த ஜூன் மாதத்தில், பின்லேடனைச் சந்திப்பதற்காகச் சென்ற ஓர் இளைஞனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு உள்ளாகி, டோறா போரா மலைப் பகுதியில் இருந்த, பின்லேடனைப் பாதுகாப்பாக சைகொத்கரைப் பகுதிக்கு இட்டுச் சென்றவனும், பின்லேடனின் நமபிக்கையைப் பெற்றுள்ளவனுமான ஹரூன் என்னும் இளைஞனே அவன்.

தனக்கு பின்லேடனைச் சந்திக்க வேண்டியுள்ளது என அவன் கடந்த மே மாதத்தில் ஒரு தகவலை அனுப்பி வைத்திருந்தான். தற்போது பின்லேடன் தகவல்தொழில்நுட்ப சாதனங்கள் எதனையும் பயன்படுத்துவதைத் தவிர்த்துள்ளதால், அத்தகவலை அவன் ஒரு கடிதமாகவே அனுப்பி வைத்தான். அது பின்லேடனுக்குப் போய்ச் சேரவேண்டுமாயின், யாரிடம் கையளிக்கப்பட வேண்டுமென்பதை ஹரூன் தெரிந்தேயிருந்தான்.

அக்கடிதத்திற்கு, ஒரு மாதத்தின் பின்னர் ஹரூனுக்குப் பதில் கிடைத்தது. அது பின்லேடனின் கையெழுத்துத்தான் என்பதை அவன் நிச்சயப்படுத்திக் கொண்டான். அதைத் தொடர்ந்து, ஹரூன் வசித்து வரும் பக்தியா பகுதியிலிருந்து அவனைப் பிறிதோர் இடத்துக்குக் கூட்டிச் செல்ல தூதுவர் ஒருவர் வந்திருந்தார்.

ஆயினும், அந்தத் தூதுவருக்கு பின்லேடனின் இருப்பிடம் தெரிந்திருக்கவில்லை. அவர், தனக்கிடப்பட்டுள்ள கட்டளையின்படி, ஹரூனை யாரிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதை மாத்திரமே தெரிந்துவைத்திருந்தார். ஹரூன் சரியான இடத்தில் ஒப்படைக்கப்படுவதை நிச்சயப்படுத்துக் கொள்வதற்கானப் பரிமாறப்படும் சங்கேத வார்த்தையொன்று (PASS WORD) அவர்களால் பரிமாறப்பட்டது. இவ்வாறு ஒருவர் மற்றொருவரின் காதுகளில் இரகசியமாக சங்கேத வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம், ஹரூன் மூன்று தினங்களாகப் பலரிடம் கையளிக்கப்பட்டு இறுதியில் அராபியர்கள் அடங்கிய குழுவொன்றிடம் சேர்ப்பிக்கப்பட்டான்.

அக்குழுவினர் ஹரூனின் உடைகளைக் களைந்து பரிசோதித்தது உடலை மாத்திரம் அல்ல, அவனது உடைகளின் விளிம்புகள், பொத்தான்கள், நூல் இழைகளைக் கூடப் பரிசீலித்தனர். பின்னர் ஹரூனை பழங்காலத்து இல்லமொன்றுக்குள் அவனை அமர்ந்திருக்கும்படி சொன்னார்கள். அன்றைய இரவைக் கழிப்பதற்கு ஹரூனுக்கு குகைபோன்ற ஒரு அறையே வழங்கப்பட்டது. மறுநாள் அதிகாலைப் பொழுதில் பின்லேடன் அவனைக் காணவந்திருந்தார்.

முகங்களை மறைத்திருந்த ஆயுதமேந்திய அராபியர்கள் இருவர் அவருக்குப் பாதுகாப்பு வழங்கினர். மலைச் சிகரங்களில் இறங்கி வருவதற்குப் பயன்படுத்தப்படும் கைத்தடியொன்று அவரது கைகளில் காணப்பட்டது. வழககமாக அணிந்துவரும் மேலாடையுடன் தலையில் தலைப்பாகை கட்டியிருந்த பின்லேடன் சுகதேகியாகக் காணப்பட்டார். சுமார் கால் மணிநேரமாக ஹரூனுடன் கலந்துரையாடிய பின்லேடன், மீண்டும் தன்னைச் சந்திக்க முயற்சிசெய்ய வேண்டாமெனக் கூறினார். அவ்வாறான பயணங்களால் தனக்குப் பாதுகாப்பு இல்லை எனப் பின்லேடன் தெரிவித்துள்ளார். ஆயினும், தனது இவ்விஜயம் பற்றிக் கிராமவாசிகளிடம் கூறவேண்டாமென்று அவர் ஹரூனிடம் கூறியிருக்கவில்லை. அதைக் கருதியே ஹரூன் அவரது அவ்விஜயம் பற்றிப் பூரிப்புடன் அனைவரிடமும் கூறித்திரிகிறான்.

எனவே, பின்லேடன் குணார் பிரதேசத்தில் இருப்பது தெளிவாகத் தெரிந்த பின்னரும், அவனைக் கைது செய்ய ஆப்கானிஸ்தானின் அதிகாரிகளுக்கோ அல்லது அமெரிக்க இராணுவத்திற்கோ இ[illegible]திருப்பதன் காரணம் என்ன?

பின்லேடன், தான் வெளியிடும் தகவல்களை, ஒளிநாடாக்களாகவும் கனணி ஒலித்தட்டுக்களாகவும் மற்றும் கைப்பட வரையப்படும் கடிதங்கள் மூலமாகவும் வெளியிடுவதால், அவரைக் கைதுசெய்வது கடினமாகவே உள்ளது.

இத்தகைய தகவல்கள் கிடைக்கப்பெறும் மார்க்கங்களைப் பின்தொடர்ந்து செல்வதும் இயலாத ஒன்றாகும். ஏனெனில் தகவல்களைக் கொண்டுவருபவரால் தகவல்களைப் பெற்றுக்கொள்பவரை யாரென்று இனங்காண முடியாதுள்ளதேயாகும். தகவல்களைக் கொண்டு வருபவர் அந்தத் தகவலைக் கையளித்தவுடன் மாயமாய் மறைந்துவிடுகிறார். எனவே, மிகச் சூட்சுமமாக இடம்பெறும் இந்த ஜாலவித்தையைக் கண்டறிவது இலேசான காரியமல்ல.

அமெரிக்கர்களால் கையாளப்படும் தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் பின்லேடனின் நடவடிக்கையைக் கண்டறிவது சாத்தியமற்றுள்ளது. ஏனெனில், பின்லேடன், மின் சமிக்ஞை முறைகள் கொண்ட தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதில்லை. குணார் பிரதேசம் முழுவதும் ஆகாயத்திலிருந்து கீழுள்ளவற்றைக் காண முடியாதவாறு, முற்றிலும் காடுகளால் மூடப்பட்டுள்ளதே இதற்கான காரணமாகும்.

**- சரா -**

பாகிஸ்தானியர்களுக்கும், ஆப்கானிஸ்தானியர்களுக்கும் இடையில் இடம்பெறும் போதைவஸ்துப் பரிமாற்றங்களுக்காக குணார் பிரதேசம் முழுவதும் பெருமளவில் வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே தரைவழியூடாக பின்லேடனைத் தேடிச் செல்வது அமெரிக்க இராணுவத்தினருக்கு வழி தவறிச்செல்வதை விட வேறு வழியில்லை.

ஆயினும், இத்தகைய பாதைகள் மூலம், ஊடுருவிச் சென்று திரும்பக் கூடிய திறனை ஆப்கானிஸ்தானியப் பொலீஸார் கொண்டுள்ளனர். ஆனால், அதற்கான அடிப்படை வசதிகள் அவர்களிடம் இல்லை. குணார் பிரதேசப் பொலீஸாரிடம் வானொலி சமிக்ஞைக் கருவிகள் இல்லை. மலைப் பிரதேசங்களில் பிரயாணம் மேற்கொள்ளக் கூடிய வாகனங்களும் அவர்களிடத்தில் இல்லை. தவிரவும், தமது உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதற்கு மாதமொன்றுக்குப் பதினான்கு டொலர்களைச் (சராசரியாக இலங்கைப் பணத்தின் பெறுமானத்தின்படி ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்கள்) சம்பளமாகப் பெறும் பொலீஸாருக்கும் அதற்கான அவசியமும் இல்லை. மேலும் பின்லேடனால், தமது வாழ்க்கைக்கு எவ்விதமான தீங்குகளும் இடம்பெறாமையும், இனிமேல் இடம்பெறும் என குணார் பிரதேசப் பொலீஸார் சிந்திக்காமையுமே பின்லேடன் பாதுகாப்பாக இருப்பதற்கான காரணங்களாகும்.

★

## வலி.மேற்கு, வேலணை பிரதேசசபை செயலாளர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

பிரதேச சபை செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளராகக் கடமை புரிந்து வந்த திருமதி அ.சிவானந்தராசா 01.11.2003 முதல் யாழ்.மாநகர சபைக்கு இடமாற்றப்பட்டிருக்கிறார். நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும் திருமதி பு.சிவலிங்கம் (எழுதுநர் தரம்-I) செயலாளராகப் பதவியுயர்வு பெற்று வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் 01-11-2003 முதல் கடமையேற்கவுள்ளார்.

வேலணை பிரதேச சபையில் செயலாளராகக் கடமையாற்றிய செ.சண்முகராசா முன்னர் கடமை யாற்றிய யாழ் மாநகர சபைக்கு 01.11.2003 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்திற்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் பிரதம எழுதுநராகக் கடமையாற்றிய ஏ. கணேசானந்தராஜா செயலாளராகப் பதவி உயர்வு பெற்று 01.11.2003 முதல் கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார். (ஐ)

## பரிசுத்தினம்

கோப்பாய்,ஒக்.29

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பரிசுத்தினமும் பௌதிக வளங்களின் அங்குரார்ப்பணமும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் சிமகேஸ் வரதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும், வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவனும் கலந்து கொள்வர். (ம-72)

## சிவத் தமிழ்ச் செல்விக்கு சிறப்பு ஆளுநர் விருது

தெல்லிப்பழை,ஒக்.29

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றிய சமய, சமூக, இலக்கியப் பணிக்காக அவருக்கு சிறப்பு ஆளுநர் விருது வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு அண்மையில் வவுனியாவில் நடத்திய தமிழ்த்தின விழாவில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 8 தமிழ், முஸ்லிம் அறிஞர்கள் சிறப்பு ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போதே சமய, சமூக, இலக்கியப் பணிகளுக்காக கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றிய சேவைகளுக்காக அவருக்கு கௌரவ ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

(ம-150)

உதயன்

# அதிகாரப் போட்டிக்கு தீர்வு நீதிமன்றிடம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தனியாகவும், நாடாளுமன்ற செல்வாக்குடன் கூடிய பிரதமர் தனியாகவும் இரு வேறு வழிகளில் செல்வதால் நாட்டின் நிர்வாகம் இழுபறிப்பட்டுப் போய் நிற்கின்றது. பாதுகாப்புத் துறையில் பல்வேறு குழப்பங்கள்.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் யுத்த நிறுத்தத்துக்கு வழி வகுத்து, அந்த யுத்தநிறுத்தத்தை மேற்பார்வை செய்து நிலைநிறுத்த கண்காணிப்புக் குழுவை வரவழைத்தார் பிரதமர்.

அவருக்கோ, அவரது அரசுக்கோ, அமைச்சரவைக்கோ - ஏன் பாதுகாப்பு அமைச்சுக்கோ கூட - முன்னறிவித்தல் தராமல் கண்காணிப்புக்குழுத் தலைவரை பதவி நீக்கும்படி அறிவித்திருக்கிறார் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி.

அதுமட்டுமல்ல, கண்காணிப்புக்குழுத் தலைவரின் வழிகாட்டுதல்களையோ, ஆலோசனைகளையோ ஏற்கத் தேவையில்லை என்று முப்படைத் தளபதிகளுக்கு அறிவித்தும் இருக்கின்றார் ஜனாதிபதி.

அவரது கோரிக்கையும் உத்தரவும் நியாயமானதா, செல்லுபடியானதா என்பது ஒரு புறமிருக்க, ஜனாதிபதி எதிர்பார்ப்பது போல கண்காணிப்புக் குழுவுக்கு மாற்றுத் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட முன்னர் (அத்தகைய மாற்றம் செய்யப்படுமா என்பது உறுதியில்லை) ஏற்படும் பிணக்குகளை யார் தீர்த்து வைப்பது? பணியில் இருக்கும் தற்போதைய தலைவரின் வழிகாட்டுதல்களை முப்படைத் தளபதிகள் ஏற்கக் கூடாது என்றால், இப்போது ஏற்படக் கூடிய பிணக்குகளைத் தடுக்க முடியாமல், அது பெரும் போராக விரிவடைய அனுமதிக்க வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கின்றாரா?

ஜனாதிபதியின் இந்த உத்தரவால் எழுந்துள்ள சிக்கலைத் தீர்க்க முடியாது தடுமாறுகின்றது அரசு.

இதற்கிடையில், நாட்டின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பாக அரசின் பிரதிநிதியான பாதுகாப்பு அமைச்சருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் இடையில் எழுந்துள்ள அதிகாரப் போட்டி உயர் நீதிமன்றம் வரை போயிருக்கின்றது.

தன்னுடைய அதிகாரங்களுக்குள் பாதுகாப்பு அமைச்சர் எல்லை மீறி தலையிடுகின்றார் எனக் கருதும் ஜனாதிபதி, இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தி, முடிவைத் தமக்கு அறிவிக்கும்படி உயர் நீதிமன்றத்தைக் கேட்டிருக்கின்றார்.

நீதித்துறை தொடர்பான விவகாரங்களினால் அண்மைக் காலத்தில் சர்வதேச மட்டத்தில் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் பிரதம நீதியரசர், தாம் உள்ளிட்ட ஐந்து நீதியரசர் குழுவை இந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமித்திருக்கின்றார். நாளைமறுதினம் விசாரணை நடக்கும். இது விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பகிரங்கப் படுத்தப்படமாட்டாது. மூடிய உறையில் தீர்ப்பை ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் அனுப்பி வைக்கும். தீர்ப்பைப் பகிரங்கப்படுத்துவதும், வெளியே தெரியாமல் அமுக்கி விடுவதும் ஜனாதிபதியைப் பொறுத்தது.

பிரதமருடன் ஆலோசனை நடத்தாமல் அபிவிருத்தி லொத்தர் சபையைத் தமது பொறுப்பில் மாற்றுவதற்கு தன்பாட்டில் முடிவெடுத்து அண்மையில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்தவர் ஜனாதிபதி. அவ்விவகாரம் தொடர்பான சட்ட நிலைப்பாட்டை சட்டமா அதிபர் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியிருந்தார். ஆனால், அந்த ஆலோசனை தமது செயற்பாட்டுக்குப் பாதகமாக இருந்ததால் அதனை வெளியே விடாமல் அமுக்கினார் ஜனாதிபதி. அது பகிரங்கப் படுத்தப்படவில்லை.

அதுபோல, இப்போதும் உயர் நீதிமன்றத் தீர்மானம் தனக்குச் சாதகமாக வராவிட்டால் அதை வெளியே விடாமல் ஜனாதிபதி அமுக்கிவிடுவார் என எதிர்பார்க்கலாம்.

எனினும், இந்த விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வழங்கக்கூடிய தீர்ப்பு - உத்தரவு - நாட்டில் அண்மைக்காலமாக தீவிரமடைந்து வரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி - அரசு இடையிலான அதிகாரப் போட்டிக்கு ஒரு முடிவு கட்டுவதாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

பாதுகாப்புத் துறை அதிகாரங்கள் யாருக்கு உள்ளன? அரசின் பிரதிநிதியான பாதுகாப்பு அமைச்சருக்கா? அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கா? இதில் நீதிமன்றம் எடுக்கும் முடிவைப் பொறுத்தே தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் முன்நகர்வும் அமையும் என்பது திண்ணம்.

அதிகாரம் இல்லாத அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சி 'வெறுங்கை முழம் போடுவதற்கு' ஒப்பானதாகும்.

## காலத்தின் பதிவு



போர் தந்த பரிசு ... படம் : பிரேம்

# பிறப்பு, இறப்பு பதிவு விண்ணப்பங்களை பூர்த்திசெய்யும் அலுவலர்களுக்கு மிரட்டல்

## இதனால் பணிகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ். செயலகத்தில் இயங்கும் பிறப்பு, இறப்பு, விவாக, காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் இருவர் சிலரால் வழிமறித்து மிரட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் பிறப்பு, இறப்பு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்யும் பணி முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

பதிவாளர் அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களின் நன்மை கருதி விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து கொடுப்பதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்களே மிரட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையிலேயே இந்த இரு அலுவலர்களும் விண்ணப்பம் நிரப்பும் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இதனால், யாழ். செயலகத்துக்கு வெளியே இத்தகைய விண்ணப்பங்களை நிரப்பிக் கொடுத்துப் பணம் பெறுவோரின் வருமானம் பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து, அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து கொண்டிருந்த அலுவலர்களிடம் சென்ற சிலர் ரகளை புரிந்துள்ளனர். அப்பணியைத் தொடரக் கூடாது என்றும் பயமுறுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அன்றையதினம் பணிமுடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த அலுவலரை வழிமறித்த சிலர் மீண்டும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து பயந்து போய்விட்ட இரு அலுவலர்களும் தமக்குரிய பாதுகாப்பு வழங்கப்படும் வரை விண்ணப்பங்கள் நிரப்பும் பணியைத் தொடரப் போவதில்லை என்று தெரிவித்ததாக யாழ். மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகம் தெரிவித்தார்.

இதனால், விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்யும் பணி இடம்பெறவில்லை. நேற்று விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வந்தவர்கள் செயலகத்துக்கு வெளியே இருந்த இடைத் தரகர்களிடம் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்ததைக் காணமுடிந்தது.(ம-5)

# சாவகச்சேரி இளைஞர் புத்தூரில் எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் புத்தூர்ப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் நேற்றுமுன்தினம் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருதடியைச் சேர்ந்த கணவதிப்பிள்ளை முரளிதரன் (வயது-28) என்னும் இளைஞரே மரணமானவராவார்.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் இவரின் குடும்பத்தினர் ஆவரங்கால் மேற்கில் வசித்து வருவதாகவும், இந்த இளைஞர் அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# பயிற்சியின்போது மயங்கிவீழ்ந்து இராணுவச் சிப்பாய் மரணம்!

## சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி,ஒக்.29

இராணுவப் பயிற்சியில் ஈடுபட்ட வேளையில் மயங்கி வீழ்ந்த சிப்பாய் ஒருவர் மரணமானதாகக் கூறப்படும் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை சாவகச்சேரி அல்லாரை தம்பு தோட்ட முகாமில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ததையடுத்து பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித தலைமையிலான பொலீஸ் குழு அந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தியது.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.பாலகிருஷ்ணன் அந்த இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

சடலத்தை கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலீஸாரைப் பணித்தார்.

அநுராதபுரம் மகாவிலாச்சியைச் சேர்ந்த டிங்கிரி பண்டாகே புஷ்பகுமார (வயது 27) என்னும் சிப்பாயே மரணமானவராவார். (ம-117)

**நாளை**

ஐப்பசி 13
வியாழக்கிழமை
(30.10.2003)
திதி : பஞ்சமி
முற்பகல் 7.56 வரை.
நட்சத்திரம் : மூலம்
முற்பகல் 10.06 வரை
ஸ்கந்த ஷஷ்டி
விரத முடிவு
சுபநேரம்:7.33 - 9.03
ராகுகாலம்:1.33 - 3.03
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மக்கள் மீது அன்பு கொண்டு வாழ்பவனே உண்மையில் வாழ்பவன் ஆவான்!

## உலக வங்கி நிதியுதவியுடன்

# கைத்தொழில் சூழல் பற்றி யாழ். குடாநாட்டில் ஆய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.29

உலக வங்கியின் நிதியுதவியுடன் கைத்தொழில் சூழ்நிலை பற்றிய ஆய்வு ஒன்று குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏராளமானோர் வேலையற்ற நிலையில் உள்ளனர். இவர்களுக்கான வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான பொருத்தமான கைத்தொழில் வளங்களை இனங்காண்பதற்காகவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கல்வியங்காடு, நாவற்குழி வடக்கு, சுழிபுரம் ஆகிய நான்கு இடங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த இடங்களில் உள்ள வளங்களை இனங்கண்டு அவற்றுக்குப் பொருத்தமான கைத்தொழில் நிலையங்களை நிறுவுவதன் மூலம் இங்கு வேலையற்றிருப்போருக்கான வேலைவாய்ப்புக்களை வழங்குவதே இந்த ஆய்வின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் உள்ள தனியார் ஆய்வு நிறுவனம் ஒன்று இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது. (ம-8)

# ரூ. 5 லட்சம் வரை வீடமைப்பு கடன் குடாநாட்டில் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் சொந்தக் காணி உள்ளவர்களுக்கு 10 வருடத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வகையில் 5 லட்சம் ரூபா வரையில் வீடமைப்புக் கடன்களை வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முன்வந்துள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். அலுவலகம் ஊடாக இந்தக் கடனுதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த வருட ஆரம்பமளவில் இந்தக் கடன்கள் வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் சுபாசிலாமணி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வீடமைக்கும் ஒருவருக்கு குறைந்த வட்டி வீதத்தில் 5 லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படும். 10 வருடங்களுக்குள் வட்டியுடன் முழுத் தொகையும் மீளளிப்புச் செய்யப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் போரினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க விரும்புபவர்களுக்கும் புதிதாக வீடுகளை அமைக்க விரும்புபவர்களுக்குமே இந்த கடனுதவி வழங்கப்படவுள்ளது. சொந்தக் காணியின் பெறுமதிக்கேற்ப கடன் வழங்கப்படும். காணியின் பெறுமதியை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மதிப்பீடு செய்வர். (ம-7)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### பெற்றுக்கொள்ளவும்

பொன்னாலை, தொல்புரத்தைச் சேர்ந்த சிவபாக்கியம் சிவசம்பு என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.277283824V) கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் த.சங்கரப்பிள்ளை, 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வந்து பெற்றுக்கொள்ளவும். (24165)

### விற்பனைக்கு

TV, டெக், கைத்தொலைபேசிகள விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கமல், பொற்பதி றோட், கொக்குவில் (தூபியடி). (24154)

நல்ல நிலையிலுள்ள ஒக்ஸ்போட (8ஸ்ரீ Oxford) கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 207, கண்டி வீதி, தபாற்கட்டை சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.- 021-2226821, 077-6156115. (24156)

### இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன்சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (23999)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima, Broiler குஞ்சுகள் அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (24169)

### மணமகள் தேவை

யாழ்இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, B.Sc.Hons. பட்டதாரியும், அரச வங்கியில் மேல்நிலை உத்தியோகத்தராகக் கடமைபுரியும் 6 அடி உயரமுள்ள 29 வயது மணமகனுக்கு தகுந்த, பொருத்தமான, அழகிய, படித்த மணமகள் உடன் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல.2082, C/o உதயன், யாழ்ப்பாணம். (24164)

## பண்டத்தரிப்பில் வெளிநோயாளர் பிரிவு இயங்குகின்றது

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் வாரத்தில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருவதாக சுகாதார சேவைகள் பதில் மாகாணப பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.தா. சிவபாதம் அறிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 16ஆம் திகதி முதல் இவ்வாறு வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். (ஐ)

## விபத்தில் இளைஞர் காயம்

உழவு இயந்திரத்தினால் மோதுண்ட இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மந்துவிலைச் சேர்ந்த ந. கேதீஸ்வரன் (வயது21) என்பவரே காயமடைந்தவராவார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது. (ம-10-117)

## மதில் இடிந்து வீழ்ந்ததில் சிறுமி காயம்

மதில் இடிந்து வீழ்ந்ததில் தலையில் படுகாயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புணாவில் மேற்கைச் சேர்ந்த கந்தசாமி சுலக்சனா (வயது6) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. (ம-10-117)

**பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இங்கு இல்லை:**

# தொழில் பயிற்சித் திட்டங்களை குடாநாட்டில் முன்னெடுக்க வேண்டும்

## ஜி.ரி.இசற். நிறுவன இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.29

கடந்தகாலப் போர்களினால் அழிவடைந்துள்ள வடபகுதியை மீளக் கட்டியெழுப்புவதற்கு போதிய தொழிற் பயிற்சிகளைப் பெற்ற தொழிலாளர்கள் இங்கு இல்லை. இதனால் வடபகுதியில் தொழிற் பயிற்சித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜி.ரி. இசற். நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.நல்லையா.

அண்மையில் யாழ். செயலகத்தில நடைபெற்ற அடுத்த வருடத்துக்கான குடாநாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் தொழிற்பயிற்சிகள் தொடர்பான திட்ட முன்மொழிவு அறிக்கையினைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், அத்தகைய நிறுவனங்கள் யாவும் சுயமாகச் செயற்பட்டு வருவதனால் அந்தத் திட்டங்களில் குறைபாடுகள் ஏற்படவும் சாத்தியங்கள் இருக்கின்றன.

குடாநாட்டைப் பொறுத்தளவில் இங்கு மிகவும் அதிகளவில் கட்டுமானப் பணிகள் செய்யப்படவேண்டியுள்ளது. ஆனால், அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இங்கு இல்லை. தொழிற் பயிற்சிகளைப் பெற்ற தொழிலாளர்களும் முழு விருப்புடன் பணிகளில் ஈடுபடாமல் பின்னடிக்கின்றார்கள்.

இன்று பல இளைஞர்கள் வேலையற்று இருக்கின்றபோதிலும் அவர்கள் எந்தத் தொழிலும் முழுமையாகத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். இங்கு தொழில் ரீதியாக இளைஞர்கள் மத்தியில் தவறான எண்ணம் இருக்கின்றது.

அரசாங்க உத்தியோகம் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களில் உயர்பதவிகள் போன்றவற்றையே கௌரவமான தொழில்கள் என்றும் ஏனைய மனித வலுவின்மூலம் செய்கின்ற தொழில்களை மதிப்புக் குறைந்த தொழில்கள் எனவும் பலர் கருதுகின்றார்கள்.

இது மிகவும் தவறானதாகும் வெளிநாடுகளில் இத்தகைய தொழில்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

தொழிற் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இத்தகைய தட்டுப்பாட்டினால் இங்குள்ள வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன - என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

## பதவியுயர்வுப் பரீட்சையில் 200 பேர் சித்தி

யாழ்ப்பாணம்,ஒக்.29

கனிஷ்ட தொழிலாளர்களைப் பதவியுயர்த்துவதற்காக கடந்த 2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சுமார் 200 பேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் கொழும்பில் உள்ள பொது நிர்வாக முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் பணிமனையில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அந்தந்த திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து இப்பரீட்சையில் இருவர் சித்தியடைந்துள்ளனர். (ஒ-15-139)

உ

## கந்தரோடை அருள்மிகு அருளானந்த பிள்ளையார் கோயில் சூரசங்காரத் திருவிழா விஞ்ஞாபனமும், புதிய சூரன் வெள்ளோட்டமும்

விநாயகர் அடியார்களே!

நாளை (30.10.2003) வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு முதன்முதலாக எமது கோயிலில் சூரசங்கார நிகழ்வு நடைபெற இறைவன் அருள் பாலித்துள்ளதால் அடியார்கள் ஆலயத்துக்கு வருகைதந்து முருகப் பெருமானின் அருளைப் பெற்று உய்யும்வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

இன்று (29.10.2003) புதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு புதிய சூரன் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வுகள் யாவும் பிரம்மஸ்ரீ ப.ஜெயக்குமாரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

*சூரன்போர்த் திருவிழா உபயகாரர்.*

பிரசுர அன்பளிப்பு:
க.விக்கி, கந்தரோடை. (24166) — மலர்விழி ஸ்ரோர்ஸ் (ஸ்கந்தா அருகில்) கந்தரோடை சுன்னாகம். (33-14-21-24)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 11 - 1933

உதிர்வு 14 - 11 - 1988

### திருமதி சரஸ்வதி சோதிப்பெருமாள்

திதி:- 2003-10-29 (ஸ்கந்த பஞ்சமி)

குடும்பத்தின் குலவிளக்காய் பாசத்தின் திருவுருவாய் திகழ்ந்த எம் அன்புத் தாயே! உங்கள் நினைவுகள், காலங்கள் என்றும் பசுமையாக எம் நினைவுகளில் நிலைத்து நிற்கும்
ஓம் சாந்தி!

"சரஸ்வதி மகால்", இணுவில். (24121)

அன்பு உள்ளங்கள்: கணவர். பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள். (34-21-14)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 05 - 03 - 1948

இறப்பு 08 - 11 - 2002

### அமரர் கந்தசாமி மார்க்கண்டு

திதி: பூர்வபக்க சதுர்த்தி (29-10-2003)

பாசத்தின் சுமையோடு எம்மைவிட்டுப் பிரிந்தாலும் என்றும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள அக்கா, அண்ணன்
பாரதி வீதி, அச்சுவேலி. (24134)
வே. லோகேந்திரன் }
வே. கமலேந்திரன் } மருமகன்மார் (21-14-34)

## நெஞ்சகலா மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மைந்தனாக 23 - 03 - 1980



மாவீரனாக 02 - 11 - 2000

### கடற்புலி மேஜர் நிலவன்

### சிவபாலசிங்கம் - வேலவமூர்த்தி

நினைவுகளில் உன் பிரிவு கனவாக
நிஜமாக உள்ளத்தில் வாழ்கின்ற
அன்பிற்கே எடுத்துக் காட்டாக வாழ்ந்த
மகனே! நீ எங்கே?
முல்லைக் கடலின் அலை உன் பெயர் சொல்லி
தினமும் கரையை வந்தடைகின்றது!
உள்ளத்தைக் கனக்க வைத்து
கல்லறையில் உறங்குகின்றாய்!
கன்னித் தமிழ் துயர் தீர்க்க
புறப்பட்ட அண்ணன் சேனையில்
ஆயிரத்தில் ஒருவனாக நீயும்
மாண்ட வரலாறு காலம் சொல்லும்!

எம் செல்வத்தின் 3 ஆம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (30.10.2003) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் 02.11.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நினைவுநாள் நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பொலிகண்டி, வல்வை. (24130) - குடும்பத்தினர். (34-21-14)


## யாழ் நகரில் விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!

1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்

Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப், 52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187

ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.

FUJIFILM

# ஈழத்தமிழர்கள் மீது ஆழ்ந்த அக்கறை இருப்பதாக இலங்கை அரசுக்கு இந்தியா உணர்த்தவேண்டும்

## தமிழக நாளிதழ் 'தினமணி' வலியுறுத்து

ஈழத்துக்கென இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக விடுதலைப் புலிகளின் பதில் வரைபு வெளிவரவுள்ள நிலையில், இந்தியா - இலங்கை கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருப்பதில் அர்த்தம் உள்ளதாகக் கருதவேண்டியுள்ளது.

எது எப்படியாயினும், இலங்கையின் ஒற்றுமை நீடிப்பதில் மட்டுமன்றி ஈழத்தமிழரின் உரிமை வாழ்விலும் ஆழ்ந்த அக்கறை இருப்பதாக கொழும்புக்கு உணர்த்த இந்தியா தயங்கக் கூடாது.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளது இந்திய நாளிதழ் 'தினமணி.'

'ஈழப்பிரச்சினையில் புதிய கட்டம்' என்ற தலைப்பில் அதன் நேற்றுமுன்தின ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் புதுடில்லிக்கு வந்து பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்திய பிறகு வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கை - ஈழப்பிரச்சினையில் எதிர்பாராத - பெரிய - திருப்பத்துக்கான புதிய கட்டத்துக்கு உரிய அடையாளங்களைக் கொண்டிருந்தது.

இப்பேச்சுக்களின்போது ஈழப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமான - அமைதிக்குரிய முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் கருத்துப்பரிமாற்றங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூட்டாட்சி வடிவமைப்பு முறை மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும்' என்று இரு நாடுகளும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்துள்ளன. அத்துடன், பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கைக்குக் கொள்கையளவில் இரு நாடுகளும் இணங்கியுள்ளன.

இது ஒருபுறம் இருக்க, 'ஐக்கிய இலங்கைக்குள் கூட்டாட்சிக் கட்டமைப்பில் பிரச்சினைக்குப் பரிகாரம் காணப்படவேண்டும்' என்ற அம்சத்தை எத்தகைய சந்தர்ப்பத்தில் கூட்டறிக்கை வலியுறுத்துகிறது என்பது கவனிக்கத்தக்க ஒன்று. ஈழத்துக்கென இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவது குறித்த திட்டத்தைப் புலிகளின் பரிசீலனைக்கு ரணிலின் அரசு அனுப்பிவைத்துள்ளது. அதற்கான பதிலை எதிர்வரும் வெள்ளிக்கிழமை புலிகளின் தலைமை அனுப்பிவைக்க இருக்கிறது. இச்சமயத்தில் இக்கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருப்பதில் அர்த்தம் இருப்பதாகக் கருதப்படுகிறது. இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படாத வண்ணம் தீர்வு அமைந்திருப்பது அவசியம் என்பதை இந்தியா நினைவுபடுத்துகிறது. அதே சமயத்தில் கூட்டாட்சிக் கட்டமைப்பு ஆட்சிமுறையும் பிரச்சினையின தீர்வுக்கு முக்கியம் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இத்தருணத்தில் சென்ற ஆண்டு செப்ரெம்பரில் நோர்வே தூதரின் சமரச முயற்சி மூலம் தாய்லாந்தில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே முதல் கட்டப் பேச்சு தொடங்கியபோது ஈழப்பிரச்சினையில் புலிகளின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றம் பிரகடனப்படுத்தப்பட்டது. தனி ஈழக்கோரிக்கைக்குப் பதிலாக பூரண சுயாட்சி உரிமையுடைய தமிழர் மாநிலத்தை ஏற்பதற்குத் தயாராக இருப்பதாக புலிகள் தரப்பு அறிவித்தது. புலிகளின் இந்த மனமாற்றத்தைப் பிரதமர் ரணில் வரவேற்கத் தயங்கவில்லை. இலங்கையின் ஒற்றுமை நீடிப்பது எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு கூட்டாட்சி முறைக்குள் ஈழத்துக்கு சுயாட்சி உரிமை வழங்கப்படுவதும் அவசியம் ஆகும். 'பெடரேஷன்' என்ற ஆங்கில வார்த்தைக்கு மாநிலத்தின் உள்விவகாரங்களில் சுதந்திரமாக இயங்குவதற்கான உரிமையும் உண்டு என்ற விளக்கத்தை 'ஒக்ஸ்போர்ட்' அகராதி தருகிறது.

இடைக்கால கூட்டமைப்புக் குறித்த இலங்கை அரசின் திட்டத்துக்கு புலிகள் தரப்பு அனுப்பிவைக்க இருக்கும் பதிலில் - மாநில சுயாட்சி உரிமைக்கான கோரிக்கைகள் இடம்பெறுவது திண்ணம். அக்கோரிக்கைகள் இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடியவையாக இருக்கும். அப்படியென்றால் தனி ஈழக் கோரிக்கைக்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை நினைவுகூர்வது அவசியமாகிறது.

ஈழத்தமிழருக்கு சமத்துவக் குடியுரிமை, தமிழ் தேசிய இனத்துக்கு மொழி மற்றும் கலாசாரப் பாதுகாப்பு, சுயமரியாதையுடன் கூடிய வாழ்வுரிமை ஆகியவற்றை நிலைநாட்டுவதற்காகவே தனி ஈழக்கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. இக்கோரிக்கையைக் கைவிட புலிகள் முன்வந்திருந்தால் உத்தேச ஈழமாநிலத்துக்கு சுயாட்சி உரிமை வழங்குவதில் ரணிலின் அரசு தாராள சிந்தையுடன் நடந்துகொள்ள வேண்டும். அதைப்போலவே புலிகள் தரப்பும் இதில் நெகிழ்ந்த பாணியில் நடந்துகாட்டி தமது அரசியல் சாதுர்யத்தை நிரூபிக்கவேண்டும். இலங்கையின் ஒற்றுமை நீடிப்பதில் மட்டுமன்றி ஈழத்தமிழரின் உரிமை வாழ்விலும் ஆழ்ந்த அக்கறை இருப்பதாகக் கொழும்புக்கு உணர்த்த இந்தியா தயங்கக்கூடாது. ஏனெனில், இந்த இரண்டுக்கும் பரஸ்பர சம்பந்தம் உண்டு - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னிலங்கைத் தமிழர் சம்பந்தமான புலிகளின் நிலைப்பாடு தெளிவானது!

## மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.29

"வடக்கு - கிழக்குக்கு வெளியே மேற்குக் கரையிலும் மலையகத்திலும் வாழும் தமிழர்கள் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தெளிவான நிலைப்பாடு இருக்கின்றது. தென்னிலங்கை தமிழ் அரசியல் தலைமைகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவே புலிகள் விரும்புகின்றார்கள். தென்னிலங்கைத் தமிழர்களுக்கு நேரடித் தலைமையை வழங்குவதில் புலிகளுக்கு நாட்டமில்லை. தென்னிலங்கைத் தமிழ்க் கட்சிகள் புலிகளை முன்மாதிரியாகக் கொண்டு, தங்களைத் தெரிவுசெய்து ஏற்றுக்கொண்டுள்ள மக்களின் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதே புலிகளின் எண்ணமாகும். இதைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களின்போது தெளிவாக அறிந்துகொள்ளமுடிந்தது"

- இவ்வாறு மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

வன்னியில் தமிழ்ச்செல்வனுடன் மேல்மாகாண மக்கள் முன்னணி தூதுக்குழு நடத்திய பேச்சுக்கள் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் புலிகளுடன் பேச்சு நடத்திய தென்னிலங்கை அரசியல் கட்சிகள் அவ்வப்போது வெளியிட்டுவந்த கருத்துக்கள் மூலமாக ஏற்பட்ட தெளிவற்ற நிலைமை தற்போது நீங்கியுள்ளது.

இறுதித் தீர்வில் தென்னிலங்கை தமிழர்களுக்கும் இடம் இருக்கவேண்டும் என்று கூறுவதுடன், தென்னிலங்கைத் தமிழ்க் கட்சிகளின் கடமை தீர்ந்துவிடாது புலிகளை முன் மாதிரியாகக் கொண்டு தமிழ்மக்களை அணிதிரட்டி ஒன்று சேர்க்கவேண்டும். இறுதித் தீர்வில் இடம் கேட்பதற்கு முன்னர் தென்னிலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எது என்பதும் தீர்மானிக்கப்படவேண்டும். இது தென்னிலங்கைத் தமிழர் அரசியல் தலைமைகளின் கடமையாகும்.

உருவாகவிருக்கும் இடைக்கால நிர்வாகமும், எதிர்காலத்தில் வரவிருக்கும் நிரந்தரத் தீர்வும் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்மக்களுக்கு மாத்திரமல்ல, தென்னிலங்கையில் வாழும் தமிழர்களுக்கும் உத்தரவாதத்தை வழங்குகின்றது என்பது புலிகளின் தெளிவான நிலைப்பாடாகும். புலிகளின் தியாகப் போராட்டத்தால் உருவாகும் இந்த உத்தரவாதத்தை அடிப்படையாகக் கொண்டு தென்னிலங்கை தமிழ்மக்களை அணிதிரட்டுவதும், ஐக்கியப்படுத்துவதும், அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதும் தென்னிலங்கை தமிழ்க்கட்சிகளின் கடமையாகும்.

வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ் மக்களின் இரண்டு பிரதான அரசியல் தளங்கள் மேற்குக்கரையும், மலையகமுமாகும் என்ற எமது கருத்தைப் புலிகள் தற்போது புரிந்து கொண்டுள்ளார்கள்.

அதேபோல், வன்னியில் குடியேறி வாழும் மலையக வம்சாவளி மக்கள், அங்குள்ள மக்களுடன் தமிழர்கள் என்ற பொது அடையாளத்தின் கீழ் இணைந்துவிட்டதை முன்மாதிரியாகக் கொண்டு, கொழும்புத் தலைநகரப் பிரதேசத்திலும், மலையக வம்சாவளி, வடக்கு - கிழக்கு வம்சாவளி என்ற பேதங்களைக் களைந்து 'தமிழர்கள்' என்ற பொது அடையாளத்தின் கீழ் அனைத்துத் தமிழர்களையும் மேல்மாகாண மக்கள் முன்னணி ஒரு பலமிக்க அரசியல் சக்தியாக அணிதிரட்டி வருவதையும் எடுத்துச் சொன்னோம். மலை நாட்டுக்கு வெளியே மேற்கு மாகாணத்தில் களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம் வரையிலான மாவட்டங்களிலும் மற்றும் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் வாழும் சுமார் ஆறு லட்சத்துக்கும் அதிகமான தமிழர்களைப் பற்றி நாம் புலிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்தத் தமிழர்கள் மொழி, தனித்துவம் இழந்து இனமழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத் தைப் புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார் - என்றார் மனோ கணேசன் எம்.பி.

(ஓ)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மகப்பேற்றுப் பிரிவு திறப்பு

கிளிநொச்சி,ஒக்.29

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் மகப்பேற்றுப் பிரிவு நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

காலை 9 மணிக்கு இடம்பெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் பொதுச்சுடரினை வைத்திய அதிகாரி சிதம்பரநாதன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் இரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தினர். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ சுகாதார சேவைகளின் துணைப் பொறுப்பாளர் மணிவண்ணன் ஏற்றிவைத்தார்.

மகப்பேற்று நிலைய மண்டபத்தினை கிளிநொச்சி உதவி அரச அதிபர் பொன். நித்தியானந்தனும் மகப்பேற்று விடுதியினை புனிசெவ்வதிவிடப் பிரதிநிதி பெனி புரானியும் குழந்தைகள் பராமரிப்பு விடுதியினை வைத்திய அதிகாரி சத்தியமூர்த்தியும் திறந்து வைத்தனர். (ஓ-9)



முதியோர் தினவிழாவின் போது மூதாட்டி ஒருவருக்கு காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் உடுபுடைவை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் காரைநகர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பொ. பாலசிங்கம், காரை.வடகிழக்கு கிராம சேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம் ஆகியோரும் உள்ளனர்.

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*

# காதலியை சுட்டுக்கொன்ற காதலன் தன்னைத்தானே சுட்டுக்கொன்றார்!

## மகியங்கனையில் சம்பவம்

பதுளை.ஒக்,29

திருமணத்துக்கு விருப்பம் தெரிவிக்காத தனது காதலியை சுட்டுக் கொலை செய்த காதலன் தன்னையும் அதே துப்பாக்கியால் சுட்டுக் கொண்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மகியங்கனையைச் சேர்ந்த தியகோபல என்ற இடத்தில் காதலியை சுட்டுக்கொலை செய்த காதலன் தனது இருப்பிடமான பிபிலைவேகம என்ற இடத்தில் தன்னைத் தானே சுட்டு இறக்க முயற்சித்தபோதிலும் அது நிறைவேறவில்லை. அவர் ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

மகியங்கனையைச் சேர்ந்த தியகோபல என்ற கிராமத்தில் வசிக்கும் 18 வயது நிரம்பிய எஸ்.எம். பிரேமவதி என்பவரே கொலையுண்டவராவார். இவரது காதலனான எவ்.எச்.எம். குணரட்ண என்ற 20 வயது இளைஞரே தன்னைத்தானே சுட்டுக்கொண்டவராவார்.

இது தொடர்பாக மகியங்கனைப் பொலீஸ் பொறுப்பதிகாரி கயங்க மாரப்பன தீவிர புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

மகியங்கனை மேலதிக மஜிஸ்திரேட் நீதிபதி கமனி ரட்நாயக்க சம்பவ இடத்துக்கு விரைந்து வசாரணைகளை மேற்கொண்டு திட்டமிட்ட கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

கொலையுண்டவரின் காதலனைக் கைதுசெய்யும்படியும் பொலீஸாருககு அவர் உத்தரவிட்டார்.

இதையடுத்து, சந்தேகநபர் பொலீஸ் பாதுகாப்புடன் பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியொன்றையும் மகியங்கனைப் பொலீஸார் சந்தேக நபரின் வீட்டிலிருந்து கைப்பற்றினர். மேலும் கொலையுண்டவருக்கு சிகப்பு மையினால் எழுதப்பட்ட காதல் கடிதங்கள் பலவற்றையும் மகியங்கனைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

கொலையுண்டவரும், சந்தேகநபரும் ஐந்து வருடங்களாக காதல் கொண்டிருந்தனர் என்றும் -

இக்காதலை பெண்ணின் பெற்றோர் விரும்பாமல், வேறொரு இளைஞனுக்கு அப்பெண்ணைத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்ததையடுத்து அப்பெண் தனது காதலனின் விருப்பத்திற்கு மறுப்புத் தெரிவித்தார் என்றும்-

இதன்பின்பே, மேற்படி அனர்த்தம் ஏற்பட்டதெனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# கமநலசேவை நிலையங்களில் விவசாயிகளுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பணாம்,ஒக்.29

விவசாய அமைப்புக்கள் பற்றி விவசாயிகளுக்கு அறிவூட்டும் வகையிலான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 3 ஆம் திகதிமுதல் 11 ஆம் திகதி வரை ஏழு கமநலசேவை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கமநல செயற்பாட்டு நடவடிக்கைகள், விவசாயக் கடன் உதவிகள் பெறுதல், கால்நடை அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனம், நாற்று உற்பத்தி பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கம் அளிப்பதற்கென விவசாயத் திணைக்கள துறைசார் நிபுணர்கள் மற்றும் மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் வருகைதரவுள்ளனர்.

பயிற்சி நடைபெறவுள்ள கமநல சேவை நிலையங்கள் தொடர்பான விவரம் வருமாறு:-

எதிர்வரும் 3 ஆம் திகதி சாவகச்சேரி, கைதடியிலும் -

4 ஆம் திகதி தொல்புரத்திலும், 5 ஆம் திகதி புத்தூர், உரும்பிராயிலும் -

6 ஆம் திகதி புலோலி, அம்பனிலும், 7 ஆம் திகதி உடுவில், கீரிமலையிலும் -

10ஆம் திகதி வேலணை, புங்குடுதீவிலும், 11 ஆம் திகதி நல்லூர் கமநல சேவை நிலையத்திலும் பயிற்சிப்பட்டறைகள் நடைபெறும்.(எ-6)


## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2003
## மாதிரி வினாத்தாள் இல-2

**வினாத்தாள்-I** **நேரம் : 45 நிமிடங்கள்**


● **விடைகள் எழுதுவதற்கான அறிவுறுத்தல்: இவ் வினாத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

★ 1ஆம் 2ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப்பொருத்தமான உரு யாது?

01. காடு-பெரிது-ஓடும்




02. மூடுதல்-பார்த்தல்-இரசித்தல்





03. பின்வரும் அடைப்புக்களில் உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். நிகழ்ச்சிகள் நடக்கின்ற வரிசைக் கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

1. கடிதத்தை முகவரியிட்ட உறையினுள் வைத்து ஒட்டுகிறார்.
2. கடிதத்தை எழுதுகிறார்.
3. தபாற்பெட்டியை நோக்கிச் செல்கிறார்.
4. ஒரு பேனாவும் கடதாசியும் எடுக்கிறார்.
5. கடிதத்தைத் தபாற்பெட்டியினுள் போடுகிறார்.


(1) 2,4,1,3,5 (2) 4,2,1,3,5 (3) 4,1,2,5,3

★ கீழே ஒவ்வொரு வரிசையிலும் வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான படத்தை தெரிவுசெய்க.


04.





05.




06.




07. கீழுள்ள உருக் கோலத்திற்கேற்ப 21 ஆவது உருவாக அமைவது எது?




★கீழ்வரும் சட்டகத்தை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை அளிக்க.


| | | | |
|---|---|---|---|
| கடிதம் | | கல் | புத்தகம் |
| பேனை | றோடி | | பந்து |
| தொப்பி | | பென்சில் | பலூன் |
| இனிப்பு | ஆணி | பூ | |
| | ஊசி | | அட்பின் |

08. கீழிருந்து மூன்றாவது வரிசையில் இடமிருந்து வலமாக நான்காவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) பென்சில் (2) பலூன் (3) பந்து (4) அட்பின்

09. மேலிருந்து நான்காவது வரிசையில் இடமிருந்து வலமாக மூன்றாவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) ஊசி (2) பென்சில் (3) கல் (4) பூ

10. மேலிருந்து மூன்றாவது வரிசையில் வலமிருந்து இடமாக நான்காவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) பந்து (2) தொப்பி (3) பேனை (4) பலூன்


11. கீழுள்ள படத்திலே உங்களுக்கு இந்த அம்புக்குறி வழியாகவும் அம்புக்குறி குறிக்கும் திசை வழியாகவும் பயணம் செய்ய முடியுமாயின P யிலிருந்து Q வுக்கு எத்தனை வித்தியாசமான முறைகளில் செல்லலாம்?





(1) 5 (2) 6
(3) 7 (4) 8

12. கௌசனுக்கு 15kg அரிசி தேவைப்படுகிறது எனில் பின்வருவனவற்றுள் எந்தப் பொதியினை வாங்குதல் பொருத்தமானது?




13. 
படத்தில் காட்டியது போல தரப்பட்ட சதுரத்தை இரு துண்டுகளாக வெட்டி அத்துண்டுகளை அசைத்து ஒரு செவ்வகத்தை அமைத்தால் அதன் வடிவம் எவ்வாறு இருக்கும்?




14. சிறுவர்கள் தொலைக்காட்சியில் கார்ட்டூன் படங்களையே அதிகம் பார்த்து இரசிக்கின்றார்கள். இதற்குக் காரணம்?
(1) கார்ட்டூன் படத்தின் மீதுள்ள விருப்பமாக இருக்கலாம்.
(2) பார்ப்பதற்கு வேறு படங்கள் இல்லாமையினால்.
(3) சிறுவர்களுக்கு வேறு பொழுது போக்கு இல்லாமையினால்.

15. வழமைக்கு மாறாக அதிகமான பிரயாணிகள் பஸ் நிலையத்தில் நிற்கின்றார்கள். இதற்குக் காரணம்?
(1) சுற்றுலாக் காலமாக இருக்கலாம்.
(2) பஸ் நிலையத் திறப்பு விழாவாக இருக்கலாம்.
(3) நீண்ட நேரமாக பஸ் நிலையத்திற்கு பஸ்கள் வராமை.

16. ஏதேனும் வைபவம் ஒன்றின் போது முதலில் வரவேற்புரையும் கடைசியில் நன்றியுரையும் வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம்?
(1) ஒவ்வொரு வைபவத்திலும் அது வழக்கம் என்பதனால்.
(2) பிரதம அதிதிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக.
(3) வைபவத்தை விரைவாக நிறைவு செய்வதற்கு.

17. ஒரு வீட்டில் எப்போதும் இருப்பது?
(1) மனிதர்கள் (2) தளபாடம்
(3) கூரை (4) குடம்

18. ஒரு கடையில் எப்போதும் இருப்பது?
(1) தட்டுக்கள் (2) தராசுகள்
(3) பணம் (4) பொருள்கள்


19. மகள் எப்போதும் தாயிலும்..................குறைந்தவளாக இருப்பாள்.
(1) அறிவு (2) பலம் (3) உயரம் (4) வயது

20. ஓர் ஆணைக் காட்டி மல்லிகா "அவர் எனது கணவரின் மனைவியின் மகளின் சகோதரர்" என்று கூறினாள். மல்லிகாவுக்கும் மேற்படி ஆணுக்கும் இடையிலான தொடர்பு யாது?
(1) தாய்-தந்தை (2) கணவன்-மனைவி
(3) தாய்-மகன் (4) மாமி-மருமகன்

21. உற்பத்தி என்பது?
(1) பயிர்களைப் பயிரிடுதல்.
(2) மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக்குதல்.
(3) பொருட்களை விற்பனை செய்தல்.

22. தொழிற்சாலை என்பது?
(1) பொருட்களை பரிமாறும் இடம்.
(2) தொழிலாளர் வேலை செய்யுமிடம்.
(3) பொருட்களை உற்பத்தி செய்யுமிடம்.

★ கீழ்வரும் எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களைத் தெரிக.

23. 


A,B இல் வரவேண்டிய எண்கள் முறையே
(1) 15,8 (2) 16,8 (3) 8,16 (4) 28,7

24.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0.2 | 0.5 | 0.8 | | | |

(1) 0.10,0.12 (2) 1.1,1.4
(3) 1.0,1.3 (4) 1.2,1.12

★கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்க.

25. தரம் 5இல் படிக்கும் ஜோதிகன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மட்டும் கோயிலுக்குச் செல்வான். இன்று கோயிலுக்குச் சென்றான். கடந்த வெள்ளிக்கிழமை கோயிலுக்குச் சென்ற போது நாள்காட்டியில் அன்று 8ம் திகதி ஆகும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை கோயிலுக்குச் செல்லும் போது அன்று என்ன திகதி?
(1) 15 (2) 20 (3) 22 (4) 29

26. என்னிடம் 25ரூபா இருந்தது. தம்பியிடம் 10ரூபா இருந்தது. அம்மா இன்று இருவருக்கும் சமயணம் தந்த போது தம்பியிடம் உள்ளதன் இருமடங்கு என்னிடம் வந்தது. அம்மா தந்த பணத்தின் பெறுமதி யாது?
(1) 20ரூபா (2) 5ரூபா (3) 15ரூபா (4) 10ரூபா

27. 
இக்கடிகார முகத்தில் நேரம் 7.00மணியைக் காட்டும் போது அதனை முகம் பார்க்கும் தளவாடியில் அவதானிப்பவர் காணும் நேரம் யாது?
(1) 3.00மணி (2) 12.00மணி
(3) 10.00மணி (4) 5.00மணி


28. 

இங்கு தரப்பட்டுள்ள சூரிர்பானப் போத்தலில் உள்ள திரவத்தின் அளவு என்ன அலகில் குறிப்பிடப்பட வேண்டும்.
(1) லீற்றர் (2) மில்லிமீற்றர்
(3) மில்லிலீற்றர் (4) மில்லிகிராம்

29. பின்வரும் வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக் கொண்ட சொற்றொகுதியைத் தெரிவு செய்க.
மாணவர்களின் எதிர்காலம் ஆசிரியர்க
(1) முந்திய காலம், உழைப்பு
(3) வருங்காலம், திறமை


30. என்னிடம் சில மாபிள்கள் உ
தவிர ஏனையவை சிவப்பு நிறம். இ
பச்சை. இரண்டைத்தவிர ஏனையவை
மாபிள்கள் உள்ளன?
(1) 2 (2) 3 (3) 5


31. மனிதனின் அடிப்படைத் தேவைக
தெரிவுசெய்க.
(1) உடை, உணவு, உறையுள்.
(2) உணவு, உடை, உறையுள்.
(3) கல்வி, உணவு, உடை.
(4) நோய், உணவு, மருந்து.


32. 
படத்தில் காட்
டின் வழியே
எடுத்தபின் வி
தின் கீழ்க்

(1) (2) (3)

★ பின்வரும் வினாக்கள் ஒவ்
தரப்பட்டுள்ள வடிவத்திற்குச் சம
எதிரே தரப்பட்டுள்ள நான்கு வ
செய்க.

33. 


34. 


35. 

மேலே தரப்பட்ட நிறை விபரத்தி
பொருள் எது?
(1) (2) (3)

36. மாணவன் ஒருவன் காலையில்
போது அவனது நிழல் ஆனது அ
றது எனின், அவன் எத்திசை நோக்கி
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெ

★பின்வரும் பகுதியை வாசித்து
வினாக்களுக்கு விடையைத் தெ

உங்கள் அனைவரதும் சுகம் அறி
றேன். நான் இங்கு வந்து இப்ே
மாதங்களாகிவிட்டன. தங்குமிட விடுத
எனினும் வீட்டை வீட்டுத் தூர இ
தான். மாலை நேரத்தில் ஏனைய
போனாலும் நான் அதிக நேரம் புத்
செலவிடுகின்றேன்.

37. இக் கடிதத்தை எழுதியவர் இப்போது
(1) ஆம் (2) இல்லை (3) சு

38. இக்கடிதம் அவரது வீட்டிலுள்ள ஒ
(1) ஆம் (2) இல்லை (3) சு

39. இக்கடிதத்தை எழுதியவர் ஓர் த
(1) ஆம் (2) இல்லை (3) ச

40. இக்கடிதத்தை எழுதியவர் கல்வி
தில் வசிப்பவராவார்.
(1) ஆம் (2) இல்லை (3) ச

## வினாத்தா

● கீழே உள்ள பந்தியை வாசித்து
வினாக்களுக்கு விடை எழுதுக.

பூமாதேவியைக் கௌவி மூடி
மெல்லமெல்ல விலகிக்கொண்டிரு
வைரங்களை வாரி இறைத்தது ே
ருந்த விண்மீன்களின் ஒளி குறைய
வானம் செக்கச் சிவந்து பிரகாசி
பொன்மயமான கதிர்களைப் பூமாதே
படரவிடுகிறான். கிழக்கு வான
மத்தியில் தங்கத் தகட்டைப்
தொடங்குகின்றான். "சூரியபகவ
உயிர்களும் அவனை வரவேற்கின்
துணைவன் முகமலர்ந்து வரே

1. மேலே தரப்பட்ட பந்தியில் இயற்
..........................................
2. இக்காட்சி எழுதப்பட்டுள்ள கால
..........................................
3. எதனது பிரகாசம் குறைவதாகக்
..........................................
4. தாமரை மலர்களின் துணைவன்
..........................................
5. பந்தியில் சூரிய பகவானை வ

ஆசிரியர்களின் ஆற்றலில் தங்கியுள்ளது.
ழைப்பு (2) முன்னேற்றம் பலம்
ம (4) அபிவிருத்தி, ஆசை


கள் உள்ளன. அதில் இரண்டைத்
பு நிறம். இரண்டைத் தவிர ஏனையவை
ஏனையவை நீலம். என்னிடம் எத்தனை

(3) 5 (4) 6


. தேவைகளின் ஒழுங்கு முறையைத்


றையுள்.
றையுள்.
டை.
ந்து.


த்தில் காட்டப்பட்டவாறு புள்ளிக் கோட்
வழியே மடித்து வட்டத்துண்டு வெட்டி
த்தபின் விரித்தால் தோன்றும் உருவத்
ள் கீழ்க் கோடிடுக.



ள் ஒவ்வொன்றிலும் முதலாவதாகத்
ற்குச் சமனாக அமையாத வடிவத்தை
நான்கு வடிவங்களிலிருந்தும் தெரிவு







ந விபரத்தின்படி நிறைகூடிய வடிவப்



ாலையில் பாடசாலைக்குச் செல்லும்
ஆனது அவனுக்கு முன்னால் விழுகின்
திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்?
கு (3) தெற்கு (4) மேற்கு

வாசித்து 37 முதல் 40 வரையான
டயைத் தெரிவுசெய்க.

சுகம் அறிய ஆவலோடு காத்திருக்கின்
வந்து இப்போது ஏறக்குறைய மூன்று
தங்குமிட விடுதியில் உணவு பரவாயில்லை.
த் தூர இடத்தில் வாழ்வது கவலை
ல் ஏனைய மாணவர்கள் விளையாடப்
நேரம் புத்தகங்களைப் படிப்பதிலேயே

ர் இப்போது இருப்பது வெளிநாட்டிலாகும்.
ல (3) கூறமுடியாது
லுள்ள ஒருவருக்கே எழுதப்பட்டுள்ளது.
ல (3) கூறமுடியாது
வர் ஓர் ஆண் பிள்ளையாவார்.
ல (3) கூறமுடியாது
வர் கல்விக்காக வீட்டைவிட்டு வேறிடத்

ல (3) கூறமுடியாது

## ாத்தாள்-2

1மணி 15 நிமிடங்கள்

வாசித்து இல. 1 முதல் 20 வரையுள்ள
எழுதுக.

ளவி மூடிக்கொண்டிருந்த காரிருள்
கொண்டிருக்கிறது. உச்சி வானத்தில்
றத்தது போலப் பிரகாசித்துக்கொண்டி
ரி குறையத் தொடங்குகின்றன. கிழக்கு
து பிரகாசிக்கின்றது. கதிரவன் தனது
ளப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப்
கு வானிலே முகிற்கூட்டங்களுக்கு
கட்டைப் போல சூரியன் அசையத்
சூரியபகவானே வருக" எனச் சகல
ரவேற்கின்றன. தாமரை மலர்கள் தம்
ந்து வரவேற்கின்றன.

ல் இயற்கை காட்டும் இன்பக்காட்சி எது?
..................................................
ள்ள காலம் யாது?
..................................................
றவதாகக் கூறப்படுகின்றது?
..................................................
ணைவன் யார்?
..................................................
னே வருக என்பது குறித்து நிற்கும்

குறியீட்டின் பெயரை எழுதுக.
..................................................

6. பாடலில் உள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக.
..................................................

7. பாடலில் சூரியனை எதற்கு உவமித்துக் கூறப்பட்டுள்ளது?
..................................................

★ ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக

8. விண்மீன்கள் ..............................
9. மத்தியில் ..............................

★எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக

10. ஒளி ..............................
11. குறைய ..............................

★ ஒருமைச் சொல்லை எழுதுக.

12. வைரங்களை ..............................
13. விரிகின்றன ..............................

★ பெண்பால் சொல்லை எழுதுக


14. அவனை ..............................
15. துணைவன் ..............................

★கீழ்வரும்ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.

16. SKY .................. 17. LIGHT ..................
18. FLOWERS .................. 19. EAST ..................
20. LOTUS ..................

★சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

21. நரம்புக் கருவி அல்லாதது எது?
(1) வயலின் (2) தம்புரா (3) புல்லாங்குழல் (4) வீணை
22. வானவில்லில் தோன்றாத நிறம் எது?
(1) சிவப்பு (2) மஞ்சள் (3) நீலம் (4) கறுப்பு
23. சரியான நடத்தல் முறையைக் காட்டுவது எது?




24. விளையாட்டு ஊதிகள் செய்யப் பொருத்தமற்றது?
(1) பூவரச இலை (2) குருத்தோலை
(3) துணி (4) பப்பாசிக்குழாய்
25. இலங்கையின் தேசிய விளையாட்டு?
(1) காற்பந்தாட்டம் (2) கரப்பந்தாட்டம்
(3) வலைப்பந்தாட்டம் (4) துடுப்பாட்டம்

★கீழே தரப்பட்ட வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

26. இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?..................................................
27. நததை முடடையின நிறம யாது?..............................
28. பூமிக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது?..............................
29. சந்திரனில் முதலில் காலடி வைத்தவர் யார்?..............................
30. குடிநரில கலககபபடும கிருமி நாசினி எது?..............................


★ பின்வரும் பிரசினங்களை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

31. ஒரு பஸ் வண்டியில் 60 பிரயாணிகளுக்கு ஆசனங்கள் உண்டு. ஒவ்வொரு வலைப்பந்தாட்டக் குழுவிலும் ஏழு விளையாட்டு வீராங்கனைகளும், ஒரு மேலதிக வீராங்கனையும் உள்ளனர். நான்கு வலைப்பந்தாட்டக் குழுக்களும், நான்கு ஆசிரியைகளும் அந்த பஸ் வண்டியில் சென்றனர். பஸ்வண்டியில் எத்தனை ஆசனஙகள மதியாக உளளன?..............................
32. செந்தாளனிடம் | 5 | 3 | 2 | 9 | என எழுதப்பட்ட நான்கு அட்டைகள் இருந்தன. இந்த அட்டைகளைப் பயன்படுத்தி அவன் உருவாக்கக் கூடிய மிகப் பெரிய ஒற்றை எண் யாது?
..................................................
33. காற்பந்தாட்டப் போட்டியானது மு.ப.8.30 மணிக்கு ஆரம்பமாகி 95 நிமிடங்களுக்கு நீடித்தது அந்த ஆட்டம் எத்தனை மணிக்கு முடிவுற்றது? ..............................
34.




இவ்வுருவின் சுற்றளவு யாது?..............................

35.



அருகே உள்ள மாபிளில் உள்ள பூக்களைப போன்று இரண்டு மாபிள்களில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக?..............................

★ பின்வரும் விடைகளைப் பயன்படுத்தி அதன் கீழ் உள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

முள் முருக்கம்பூ, லில்லிப்பூ, வாழைப்பூ, சூரியம்பூ, தாமரைப்பூ


36. வௌவால் விசேடமாக நாடிச் செல்லும் பூ..............................
37. குறிததகாலம இலலாது பூககும பூ..............................
38. சிததிரை மாததில பூககும பூ..............................
39. குளஙகளில அதிகம காணபபடும பூ..............................
40. எலலாக காலஙகளிலும பூககும பூ..............................

★கீழ்வரும் பாடலானது தரம் 4 மாணவர்களால் அழகியல் செயற்பாட்டின் போது பாடப்பட்ட பாடலின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை இட்டு நிரப்புக.

இலங்கை எங்கள் 41. ..............................
இணையில்லாத 42. ..............................
இலங்குகின்ற 43. ..............................
இனிய 44. ..............................
வளம் நிறைந்த 45. ..............................
வான் உயர்ந்த 46. ..............................
அளவிறந்த 47. ..............................
அமைந்த 48 ..............................


★ ஆரம்ப பாடசாலை ஒன்றில் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் தொகையை இந்த அட்டவணை காட்டுகிறது.

| வகுப்பு | மாணவர் தொகை |
|---|---|
| தரம் 1 | 105 |
| தரம் 2 | 120 |
| தரம் 3 | 115 |
| தரம் 4 | 95 |
| தரம் 5 | 105 |




49. அருகே உள்ள நிரல் வரைபில் தரம்1 ஐ நிழற்றியது போல் ஏனைய வகுப்புக்களையும் நிழற்றிக் காட்டுக.
50. தரம் 3, தரம் 4 வகுப்புக்களில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்?..............................
51. ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை உள்ள வகுப்பைவிட ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கை உள்ள வகுப்பில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர்?..............................
52. நாடகக்காட்சி ஒன்றுக்காக தரம் 3 மாணவர்களிடமிருந்து ஒரு வருடம 4 ரூபா வீதம் அறவிடப்பட்டது. அவர்களில் 9 பேர் பணம் செலுத்தவில்லை எனின் அவ்வகுப்பிலிருந்து கிடைக் கும பணம எவவளவு?..............................
53. ஆசிரியர் தின விழாவின் போது மாணவர்களுக்கு பிஸ்கட் பரிமாறப்பட்டது. ஒரு மாணவனுக்கு 2 பிஸ்கட்டுக்கள் வீதம் கொடுப்பதாயின் எத்தனை பிஸ்கட்டுக்கள் கொடுக்கப்பட்டிருக்கும்?
..................................................
54. தரம்2 மாணவர்களை விளையாட்டு ஒன்றிற்காக 5 சம குழுக் களாகப் பிரித்தால் இரு குழுக்களில் எத்தனை மாணவர்கள் இருபபாரகள?..............................
55. தரம்5 இல் படிப்பவர்களில் 58 பேர் ஆண்கள். பெண்களில் 20 பேர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை சித்தியடைந்த பெண்கள் எத்தனை பேர்?..............................

★ கீழே தரப்பட்டுள்ள ஆக்கச் செயற்பாட்டு விளையாட்டுப் பொருளினை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




56. இந்த விளையாட்டு உபகரணத்தின் பெயர் யாது?..............................
57. இந்த உபகரணத்தின் பகுதிகளின் பெயர்களை எழுதுக.
A - ..............................
B - ..............................
C - ..............................
D - ..............................
58. இங்கே B இனால் குறிப்பிடப்பட்ட பொருளில் எத்தனை துளைகள இடவேண்டும?..............................
59. இவ்வுபகரணத்தை இயக்கும்போது ஒரு கையை நூலில் பிடித்து இழுத்தல் வேண்டும். மறுகையைப்பிடிக்க வேண்டிய பகுதியின் ஆங்கில எழுத்தை எழுதுக..............................

★ கீழ்வரும் வினாக்களில் "அ" பகுதிக்குப் பொருத்தமானதை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் ஆங்கில எழுத்தை அடைப்புக்குள் எழுதுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 60. Bank | ( ) | A. Books |
| 61. Market | ( ) | B. Money |
| 62. Hospital | ( ) | C. Medicine |
| 63. Library | ( ) | D. Games |
| 64. Playground | ( ) | E. Fish |

★பின்வரும் சிங்களச் சொற்கள் குறிக்கும் தமிழ்ச் சொற்களை எழுதுக.

66. අඹ - ..............................
67. මේසය - ..............................
68. ගුරුතුමා - ..............................
69. අම්මා - ..............................
70. ගිරවා - ..............................

★ஆங்கிலச் சொல்லை எழுதுக.

71. வானம் .............................. 72. நதி ..............................
73. தொலைபேசி .............................. 74. நிறம் ..............................

★ 'நான் பாடசாலைக்குச் சென்றால்...' என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறுவாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

75. ..................................................
..................................................
76. ..................................................
..................................................
77. ..................................................
..................................................
78. ..................................................
..................................................
79. ..................................................
..................................................
80. ..................................................

தயாரிப்பு : ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்.


# ஒருநாள் போட்டியில் இரட்டைச்சதம் கனவாகவே கழிந்து போகுமா?



சயிட் அன்வர்

இன்று உலகிலே பல கோடி ரசிகர்களைச் சம்பாதித்துள்ள விளையாட்டாகக் கிரிக்கெட் (துடுப்பாட்டம்) அமைந்துள்ளது. வயது வேறுபாடோ அல்லது பால் வேறுபாடோ இன்றி துடுப்பாட்டத்திற்கு ரசிகர்கள் பலர். ஆயினும், துடுப்பாட்டத்தை விமர்சிப்பவர்களும், துடுப்பாட்ட ரசிகர்களை சோம்பேறிகள் என்று கருத்துத் தெரிவிக்கும் எதிரணியினரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவ்வாறான துடுப்பாட்டப் போட்டிகளில் நாளுக்கு நாள் பல புதிய சாதனைகள் படைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அது ரசிகர்களுக்கு விருந்தாகவும் அமைவதுண்டு. அந்த வகையிலே அண்மையில் மிகவும் அற்புதமான சாதனையொன்று டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய குதிரை வீரர் மத்தியூ ஹெய்டனால் நிகழ்த்தப்பட்டது. அதிகூடிய டெஸ்ட் ஓட்டமான 380 ஓட்டங்களை அவர் கடந்தார். 1957இல் மேற்கிந்திய வீரரான ஹரிசோபஸால் நிலைநாட்டப்பட்டு 1993இல் அதே நாட்டு வீரரான பிரையன் லாராவால் முறியடிக்கப்பட்ட சாதனையை வெறும் 9 ஆண்டுகளில் முறியடித்து சாதனை படைத்துள்ளார் ஹைடன். உயரத்தோற்றமும், உடல்வாகும் கொண்ட மத்தியூ, போட்டிகளில் ஆடத்தொடங்கிய காலம் முதலே சிறப்பாக ஆடிவந்ததோடு (டெஸ்ட் சராசரி 59.58) காலப்போக்கில் கிரிக்கெட்டில் சாதனைகள் பல படைப்பார் எனவும் எதிர்பார்க்கப்பட்டு வந்தது. அதனை அவர் துல்லியமாக


பொன்ரிங்

முடித்து மேலும் சாதனைகள் படைக்கப் புறப்பட்டுவிட்டார் என்றே கருதலாம்.

இது இவ்வாறிருக்க ஒருநாள் கிரிக்கெட் (One Day Internationals) போட்டியில் அனைத்து கிரிக்கெட் ரசிகர்களாலும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு விடயமான இரட்டைச்சதம் கனவோடு கழிந்துசெல்கிறது. இது கிரிக்கெட் ரசிகர்களுக்கு பலத்த ஏமாற்றமாகவும், உலகில் ஒருநாள் போட்டிகளில்


மத்தியூ ஹைடன்

விளையாடத் தகுதி பெற்றுள்ள 14 நாடுகளைச் சேர்ந்த வீரர்களுக்கும் அவர்களின் திறனுக்கும் ஏற்பட்ட ஒரு சவாலாக அமைந்துவிட்ட விடயம் எனலாம்.

தற்போது கிரிக்கெட் விளையாட்டில் டெஸ்ட் பந்தயங்களைவிட ஒருநாள் போட்டிகளே கூடிய விறுவிறுப்புக் கொண்டவையாக அமைந்துள்ளன. ரசிகர்களின் கூட்டமும் இதற்குத் தான். இந்நிலையில், இப்போட்டியில் பல சாதனைகள் துடுப்பாட்ட நிலையில் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. 17 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்தார் இலங்கை அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரியா. அதேவேளை 37 பந்துகளில் 100 ஓட்டங்களைக் கடந்தார்


லாரா

பாகிஸ்தானின் சயிட் அவ்றிடி. அதேவேளை, கூடிய ஒருநாள் சதங்களை (35) இதுவரை பெற்றுள்ளவராக இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் விளங்குகிறார். இதுபோன்று 50 பந்துப் பரிமாற்றங்களில் 398 ஓட்டங்களை இலங்கை அணி கென்யாவுக்கு எதிராகப் பெற்றமை ஒருநாள் போட்டியில் அதிகூடிய அணியின் ஓட்டமாக அமைகின்றது. இதுதவிர, இணைப்பு ஆட்டத்தின் மூலம் பெறப்பட்ட ஓட்டங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் விக்கட்டுக்களுக்கு என்று இதுவரை சாதனைகள் படைக்கப்படுவதும் அவை அவ்வப்போது முறியடிக்கப்படுவதும் கிரிக்கெட்டின் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

### சயிட் அன்வரின் முயற்சி

ஒருநாள் போட்டியில் தனிநபர் ஓட்டங்கள் என்னும்போது துடுப்பாட்ட வீரர் சதமடிப்பது ஒரு பெரிய விடயந்தான். அதிலும் 150 ஓட்டங்களை ஒருவர் கடப்பதென்பது எல்லா வீரர்களாலும் சாதித்துவிடக்கூடிய நிகழ்வுமில்லை. இதற்கு சிகரம் வைத்தாற்போல் 1997ஆம் ஆண்டு வைகாசி 21ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் விளையாட்டரங்கில் இரவு - பகல் ஆட்டமாக நடைபெற்றது பாகிஸ்தான் - இந்திய மோதல். இரு அரசியல் எதிரிகள் விளையாட்டில் எதிர்த்து மோதினர். இப்போட்டியில் பாகிஸ்தான் வீரர் சயிட் அன்வர் சதமடித்து, பின் 150 ஓட்டங்களைத் தாண்டி இரட்டைச்சதத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார். அனில் கும்ப்ளேயின் ஓர் ஓவரிலேயே 4 சிக்ஸர்களை அடித்து விரைவாக ஓட்டங்களைக் குவித்தார். 200ஐ தாண்டி விடுவார் என கிரிக்கெட் உலகமே எதிர்பார்த்த வேளை திடீரென தனது 194ஆவது ஓட்டத்துடன் ஆட்டமிழந்து பெவிலியனை நோக்கி சோகத்துடன் திரும்பியபோது, எதிர்பார்ப்பு நிறைவேறவில்லையென ரசிகர்கள் அனைவரும் கலங்கினர். இந்நிலை ஏற்படக் காரணம் அன்வரின் கவனக்குறைவே என விமர்சிக்கப்பட்டது. ஏனெனில் பல பந்துப் பரிமாற்றங்கள் எஞ்சியிருந்தன. பின் இரு நாள்களில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியில் தன்னுடைய துடுப்பில் பட்டுச் சென்ற ஒரு நான்கு ஓட்டங்கள் உட்பட சில ஓட்டங்களை நடுவரின் தீர்ப்பால் தான் இழந்ததாகவும், அத்தோடு தன்னுடைய தப்பான ஆட்டமுமே இந்நிலைக்குக் காரணம் என்றும் அன்வர் கூறியிருந்தார். அந்நடுவர் அந்த ஓட்டங்களை உதிரி(Leg bye) எனப் பிரகடனப்படுத்தாது இருந்திருந்தால் 200 என்ற இலக்கை அவர் தாண்டி இருக்கக்கூடும். எனினும், அன்று அச்சாதனைக்கான வாய்ப்பு நழுவிவிட்டது; ஏமாற்றம்தான்.

### பல வீரர்களின் முயற்சிகள்

இதுபோன்றே காலத்திற்குக் காலம் கிரிக்கெட் வரலாற்றில் பல வீரர்கள் 150 ஓட்டங்களைத் தாண்டி 200 என்ற இலக்கிற்குச் சமீபமாக முன்னேறி ஆட்டமிழந்தும், பந்துப் பரிமாற்றங்கள் முடிவடைந்தமையால் ஏமாற்றத்துடன் பெவிலியன் திரும்பியும் இருக்கிறார்கள்.

### வி.இ.ஹஸ்ரன் றோய்

இந்தியாவின் சகலதுறை ஆட்டக்காரரான கபில்தேவ் 1983ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில் 175 ஓட்டங்களைப் பெற்றார். அதுவே அன்று அதிகூடிய தனிநபர் ஓட்டமாக விளங்கியது. பின் அச்சாதனை மேற்கந்திய வீரரான விவியன் ரிச்சட்ஸால்


ஜெயசூரியா


இலங்கைக்கு எதிரான ஆட்டம் ஒன்றில் (180) முறியடிக்கப்பட்டது. அதன் பின் காலத்துக்குக்காலம் இச்சாதனை பல வீரர்களின் முறியடிப்புகளுக்கு உள்ளானது. தென்னாபிரிக்காவின் ஹரி கேர்ஸ்டன் (188), இந்தியாவின் கங்குலி (183) சச்சின் டெண்டுல்கர் (186 ஆ.இ.) போன்றோர் இரட்டைச் சதத்திற்கு மிக அண்மையில் வந்தார்கள். அதைவிட 150 ஓட்டங்களைத் தாண்டியோரில் இந்தியாவின் ராகுல் ட்ராவிட், மேற்கிந்திய வீரர் பிரையன் லாரா மற்றும் மைக்கல் ஆத்தட்டன், கில்கிறிஸ்ட் என்று பட்டியல் நீண்டு சென்றாலும் இம் முயற்சியில் வெற்றிபெறக்கூடிய நல்ல ஒரு சந்தர்ப்பத்தை அன்வருக்கு அடுத்தபடியாக தவறவிட்டவர் இலங்கையின் அதிரடி வீரர் சனத் ஜெயசூரியா ஆவார்.

2000 ஆம் ஆண்டில் சார்ஜாவில் நடைபெற்ற இந்தியாவிற்கு எதிரான போட்டியில் அற்புதமாக துடுப்பெடுத்தாடிய அவர், இறுதி நிமிடங்களில் தனது பழைய தவறைச் செய்ததனால் பல பந்து வீச்சுக்கள் மிகுதியாக இருந்தபோதும் அவரினால் இரட்டைச் சதத்தை பெறமுடியாமல் போய்விட்டது. 189 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோது மீண்டும் ஒரு முறை ஏமாற்றத்தை தாங்கமுடியாது கிரிக்கெட் ரசிகர்கள் மனதுக்குள் அழுது கொண்டனர். அதுமட்டுமல்ல இது ஜெயசூரியாவின் இரண்டாவது ஏமாற்று நடவடிக்கையாகவும் அமைந்தது. டெஸ்ட் போட்டியில் இந்தியாவிற்கு எதிராக ரொஷான் மஹாநாமவுடன் இணைந்த அவர் லாராவின் 375 என்ற சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்த்த வேளை 340 ஓட்டங்களுடன் மிக இலகுவான பிடியொன்றை அருகில் நின்ற பந்து தடுப்பாளரிடம வழங்கிவிட்டுச் சென்றதையும், ரசிகர்கள் மீண்டும் இவ்வேளை நினைவு கூர்ந்தபோது அவரின்மேல் பாராட்டுக்கள் எழவில்லை. மாறாக ரசிகர்களின் கோபமே மேலோங்கியது. எனவே, இம்முயற்சியில் சில வீரர்கள் பந்துவீச்சு பற்றாக்குறையாலும், சிலர் தம்முடைய கவனக்குறைவாலும் வெற்றிபெறவில்லை என்றே கூற வேண்டும்.

### சாதனை நிலைநாட்ட தடைகள் என்ன?

ஒருநாள் ஆட்டத்தைப் பொறுத்தவரையில் முதல் 15 ஓவர்களும், கடைசி 10 ஓவர்களும் முக்கியமானவை. அதிலும் முதல் 15 ஓவர்களும் தடுப்பு வியூககட்டுப்பாடுகள் கொண்டவை. ஒரு வீரர் ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கி இறுதி வரை நிலைத்து ஆடினால் அவரால் சராசரியாக 120-130 பந்துவீச்சுக்களையே எதிர்கொள்ளமுடியும். உண்மையிலே இவ்வளவு பந்துவீச்சுக்கள் இரட்டைச்சதம் பெறுவதற்கு போதுமானதன்று. ஆனாலும் இந்த எண்ணிக்கை கூட மறுமுனையில் செயற்படும் வீரர்களின் ஆட்டத்திலும் தங்கியுள்ளது. பந்துக்களை தின்னாது, அடித்தாடும் வீரருக்குச் சந்தர்ப்பத்தை வழங்கும் நிலையும் பந்துகள் ஒவ்வொன்றையும் ஓட்டங்களாக மாற்றும் திறனும் பேணப்படவேண்டும். இயல்பாகவே முதல் 15 ஓவர்களுக்குள் துடுப்பெடுத் தாடும் வாய்ப்பு பெறும் வீரருக்கே இரட்டைச் சதம் பெறும் வாய்ப்பு உள்ளதெனலாம். அதிலும் அந்த 15 ஓவரிலும் ஒரு வீரர் தனிநபர் ஓட்டமாக 70 அல்லது 75 ஓட்டங்களைப் பெற்றாலே இச்சாதனை உறுதிப்படும். அப்போதும் பல சிக்கல்கள் ஏற்பட்டு விடுகின்றன. துடுப்பாட்டத்தின் மறுமுனையில் இலக்குகள் ஒழுங்கான இடைவேளைகளில் (Regular Intervel) சரியும் போதோ அல்லது விரைவாக சரியும்போதோ நிலைமைமாறிவிடும். அடித்தாடும் வாய்ப்பு ஏற்பட்டாலும் பொறுமைகாக்கவேண்டிய நிலை வீருக்கு ஏற்படும் அப்படியானால் நிலைத்து நின்று ஆடக்கூடிய இணைப்பாட்டம் தேவை. எப்போதும் துடுப்பாட்ட வீரர் பூரண சுதந்திரத்துடன் (Freedom) ஆடும் நிலையும் காணப்படவேண்டும். அதேவேளை, ஒரு வீரர் 150 ஓட்டங்களுக்கு மேல் தாண்டிவிட்டாலும் பந்து வீச்சுக்களின் பற்றாக்குறை, மறுமுனையில் ஏற்படும் மாற்றங்கள், பதகளிப்பு மற்றும் அனைத்துப் பந்துகளையும் எல்லைக்கோட்டைத் தாண்டி அடிக்கவேண்டும் போன்ற காரணங்களால் பொறுமை இழந்து ஆட்டமிழக்


டெண்டுல்கர்

கவும் நேரிடுகிறது. இது கிரிக் கெட் வரலாற்றில் பலமுறை காணப்பட்ட விடயம் எனலாம்.

இவற்றைவிட கிரிக்கெட் போட்டிகளைக் குழப்பும் காலநிலைச் சீரின்மையும் அதன் காரணமாக போட்டி முடிவை நிர்ணயிக்கும் தற்போதைய முறையான "டக்வேர்த் - லூயிஸ்" விதியும் ஒருநாள் போட்டியில் வீரர்கள் சந்திக்கும் ஒரு வகைச்சவால்கள்தான். இவ்விதியானது போட்டி முடிவை கருத்திற்கொள்கிறதே தவிர வீரர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை என விமர்சிக்கப்படுகின்றது. இவை அனைத்துக்கும் மேலாக நடுவர்களின் சிறப்பான, விமர்சனத்துக்குள்ளாகாத நடுநிலையான தீர்ப்புக்களும் போட்டிகளில் கூடிய செல்வாக்கைச் செலுத்தத் தவறுவதில்லை. இவ்வாறான பல தடைகள் இரட்டைச்சதத்தின் உருவாக்கத்தை பின்நகர்த்திச் செல்கின்றன

### சாதிக்கப்போவோர் யார்?

இச்சாதனையை நிலைநாட்டகூடியவர் ஓர் அதிரடி ஆட்டக்காரராகவும், பொறுமை காப்பவராகவும், பதகளிப்பு அடையாதவராகவும் இருப்


கில்கிறிஸ்ட்

பார் என்பதை மட்டும் இப்போதைக்கு கூறமுடியும். அந்தவகையில் உலகில் தற்போது காணப்படும் சில நட்சத்திர துடுப்பாட்ட வீரர்கள் (Star Batsman) நோக்கப்படவேண்டியவர்களே. இலங்கையின் சனத் ஜெயசூரியா, இந்தியாவின் ஷேவாக், டெண்டுல்கர், பாகிஸ்தானின் சயிட் அவ்றிடி, யுகானா, ஆஸ்ரேலியாவின் கில்கிறிஸ்ட், பொன்டிங், மைக்கல் பெவன், மேற்கு இந்தியாவின் லாரா, சாமுவல், சர்வான், சந்திரபோல், நியூஸிலாந்தின் நேதன் அஸ்ரில், பிளெமிங், இங்கிலாந்தின் மார்க் ரெஸ்கோத்திக், தென்னாபிரிக்காவின் கிப்ஸ், ஹரி கேர்ஸ்டன், கலிஸ், போன்றோர் முக்கியமானவர்கள்.

எனவே, கிரிகெட்டில் பல சாதனைகள் படைக்கப்பட்டபோதிலும் கனவாய் இருந்துவரும் ஒருநாள் போட்டியில் இரட்டைச்சதம் என்ற சாதனையை நிலைநாட்டி ரசிகர்களின் ஏக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவது சமகால வீரர்களா? அல்லது எதிர்காலப் புதுமுகங்களா? இல்லை டெஸ்ட் போட்டியில் சாதனை படைத்த மத்தியூ ஹெய்டனா? மாறாக இது வெறும் கனவாய் கலைந்துவிடப் போகும் எதிர்பார்ப்பா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

★

# புலிகளை எனது விடாமுயற்சியால் தமிழ்நாட்டில் நான் தடைசெய்தேன்

## பெருமை கொள்கிறார் முதலமைச்சர் ஜெயலலிதா

சென்னை,ஒக்29

விடுதலைப் புலிகள் அமைப்பு இங்கு சட்டவிரோதமானது என்று எனது விடாமுயற்சியின் பயனாக அறிவிக்கப்பட்டது.

- இப்படிக் கூறியிருக்கிறார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

'பொடா' சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து அவசர சட்டத்தின் ஊடாக அதை நிறைவேற்றுவதன் மூலம், மத்திய - மாநில மறு ஆய்வுக் குழுக்கள், மாநில அரசுகளால் அமைக்கப்பட்டுள்ள 'பொடா' சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளின் ஆவணங்களைக் கேட்டுப்பெறவும்.

சிறப்பு நீதிமன்றங்களில் செயற்பாடுகளைத் தடுக்கும் விதத்திலும் மேலும் அவற்றின் நடவடிக்கைகளில் தலையிடும் வகையிலும் அவற்றிற்கு சட்டப் பாதுகாப்பு, சட்ட அந்தஸ்து வழங்கவும் மத்திய அரசு உத்தேசித்திருக்கிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ராஜீவ்காந்தி படுகொலைக்குக் காரணமான புலிகள் அமைப்பை கடும் முயற்சி செய்து தடைசெய்தேன். மாநிலத்தில் உள்ள புலி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து தமிழ் தேசிய மீட்புப் படை என்றும், தமிழ்நாடு விடுதலைப் படை என்றும் புதிய அமைப்புகளை உருவாக்கினர்; செயற்பட்டனர்.

இந்த அமைப்புகளையும் தமிழக அரசு கிரிமினல் சட்ட சீர்திருத்தத்தின் கீழ் தடைசெய்தது. இவர்களின் செயற்பாடுகளை நசுக்குவதற்குக் கொண்டுவரப்பட்டதே 'பொடா'. இதனைப் புதிய அவசர சட்டத்தின் மூலமாக மத்திய மறு ஆய்வுக் குழுக்களிடையே இருவேறு முடிவுகள் எடுக்கப்பட்டால் மத்திய ஆய்வுக் குழு எடுக்கும் முடிவு மத்திய அரசைக் கட்டுப்படுத்தும் என்றும் - மாநிலத்தில் இச்சட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் புலனாய்வு வழக்குகளில் - குறிப்பாக ஒரே வழக்கில் மத்திய மாநில மறு ஆய்வுக்குழுவின் முடிவே இறுதியாகும் என்றும் - தெரிவிக்கப்படுகிறது. (ம)

### கோஷ்டி மோதலில் குடும்பஸ்தர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.29

முல்லைத்தீவில், நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

முள்ளியவளை, வற்றாப்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜீவரட்ணம் (வயது37) என்பவரே படுகாயமடைந்து நேற்றுமுன்தினமிரவு அம்புலன்ஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவராவார். (ஒ-9)

### நூலகவார நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ். செங்குந்த இந்துக்கல்லூரியில் நூலக வார நிகழ்ச்சி நேற்று கொண்டாடப்பட்டது.

புனரமைக்கப்பட்ட நூலகத்தை கல்லூரி பழைய மாணவரும், மாவட்ட விளையாட்டு அலுவலருமான க.ஏகாம்பரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்த நூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்களை ஆஸ்திரேலிய பழைய மாணவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ஐ)

# பிரிட்டிஷ் இயக்குநருடன் சேர்ந்து இலங்கையில் தமிழ்த் திரைப்படம்!

## சலனசித்திர இணைப்பாளர்கள் சந்திப்பில் தகவல்

கொழும்பு,ஒக்.29

பிரிட்டிஷ் இயக்குநர் ஒருவருடன் இணைந்து இலங்கையில் தமிழ்த் திரைப்படம் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சலனசித்திர அமைப்பின் மாவட்ட இணைப்பாளர்களது சந்திப்பின்போது அந்த அமைப்பின் ஸ்தாபகர் க.தேவதாசன் இதனைத் தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை இந்துவித்தியாலயத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. திரைக்கலைச் சம்மேளனத்தின் மாவட்ட உறுப்பினர்கள் பலர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை - பிரிட்டிஷ் கூட்டுத் தயாரிப்பில் தமிழ்த்திரைப்படம் எடுக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

பிரிட்டனில் வசிக்கும் இயக்குநர் ஒருவருடன் இணைந்து இலங்கையில் உள்ள இயக்குநர் இந்தத் திரைப்படத்தை இயக்குவார். தொழில்நுடபத்திறன் இல்லாத காரணத்தால் மட்டும் இலங்கையில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பு உத்வேகம் பெறவில்லை. தமிழ்நாட்டிலிருந்து வரும், தமிழ்ப்படங்களின் ஆக்கிரமிப்பும் அதற்குக் காரணமாகும். தமிழ்நாட்டிலிருந்து நல்ல படங்கள் சில வருகின்றன. அதேநேரம், மிகமோசமான படங்களும் வருகின்றன. நல்ல ரசனையை மக்கள் மத்தியில் உருவாக்குவதே சலனசித்திர அமைப்பின் நோக்கமும் குறிக்கோளுமாகும்.

ஆனால், இலங்கையில் தமிழ்த் திரைப்படம் எடுக்க இனவாதம் தடையாக உள்ளது - என்று கூறினார்.

லண்டன் முதலீட்டுடன் நகைச்சுவையுடன் கூடிய குறும்பு முழுநீளத் திரைப்படத் தயாரிப்பு, லண்டனில் தயாரான 'இரகசிய சிநேகம்' என்ற தமிழ்த் திரைப்படத்தின் விநியோகம் மற்றும் பல அம்சத் திட்டங்களை மேற்படி அமைப்பு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த இருக்கிறது.

# சட்ட வரையறை தெரியாத அலுவலர்களே குடாநாட்டில் அதிகம் பணியாற்றுகின்றனர்

## கருத்தரங்கு ஆரம்ப நிகழ்வில் அரச அதிபர் குற்றச்சாட்டு

வலி.மேற்கு,ஒக்.29

"நாட்டில் தொடர்ந்து இடம்பெற்ற யுத்தத்தினால் சட்ட வரையறைகள் தெரியாத உத்தியோகத்தர்களே யாழ். மாவட்டத்தில் கூடுதலாகக் கடமையாற்றுகின்றனர்."

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ். செயலக கேட்போர்கூடத்தில் உத்தியோகத்தர்களுக்கான சட்டம் தொடர்பான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கருத்தரங்கை அரச அதிபர் செ.பத்மநாதன் 512ஆவது படைத்தளபதி பிரிகேடியர் டி.டி.ரி.சில்வா ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

கிராம அலுவலர்கள், பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள, சமூக சேவை அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

அரச அதிபர் தனது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:-

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக, இலங்கை நிர்வாகத்தின் அடித்தளமாகிய கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே தொடர்பு இல்லை. இதனால், இங்கே கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு சட்டத்தின் வரைவிலக்கணம் தெரியாது போய்விட்டது. இவர்களில கிராம அலுவலர்களும் அடங்குகின்றனர்.

காலம் மாறினாலும் சூழ்நிலை மாறினாலும் இவர்கள் மாறவில்லை. தாம் எண்ணுகின்றதை சரி என நினைப்பதைத் தமது அதிகாரத்தின் மூலம் செயற்படுத்துகின்றனர்.

அரச நிர்வாகத்தின் பல பக்கங்ளிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது. உத்தியோகத்தர்களுக்கு சட்ட அறிவு இல்லை. உத்தியோகத்தர்கள் கடமை தவறினால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி செயலகததில் கடமையாற்றுகின்ற அதிகாரிகளுக்குத் தெரியவில்லை.

இதனைக் கடந்த காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

உலர் உணவு நிவாரண முத்திரையில் மோசடியை செய்த கிராம அலுவலர்களுக்கு இடமாற்றம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

பொலீஸ் உத்தியோகத்தர்களாகவும் கடமைபுரிய வேண்டியவர்கள் கிராம அலுவலர்கள்.

ஆனால், பிரித்தானியர்களினால் வீதிகளின் அருகில் நடப்பட்ட மரங்களை வேலிச் சொந்தக்காரர்கள் விற்பனை செய்வதற்கு குடாநாட்டில் கிராம அலுவலர்கள் உதவிபுரிந்துள்ளனர்.

இத்தகைய அதிகாரிகளுக்கு இலங்கையின் சட்டத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். சட்டத்தின் அடிப்படையில் தன்மைகளைப் புரியவைக்கவேண்டும். இதன் மூலமே சிறந்ததொரு நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு பாரபட்சமற்ற சேவையை வழங்கமுடியும் - என்றார்.

சட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த சட்டத்தரணிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த சட்டத்தரணிகள், இலங்கையின் சட்டங்கள் பற்றி விரிவாகத் தெளிவுபடுத்தியதுடன் வினாக்களுக்கும் விடையளித்தனர். (ம-175-86)

# தங்கையுடன் சேஷ்டை புரிந்தவர்களை தட்டிக்கேட்ட தமையன் குத்திக் கொலை!

தனது தங்கையுடன் சேஷ்டை புரிந்த இளைஞர்களைத் தட்டிக் கேட்ட அண்ணன் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞர் தனது தங்கை மற்றும் குடும்பத்தவர்கள் சகிதம் அன்றைய தினம் இரவு கடற்கரைக்குச் சென்றுள்ளார். இளைஞர் குழு பிரஸ்தாப யுவதியுடன் கடற்கரைப் பகுதியில் வைத்துச் சேஷ்டை புரிந்துள்ளது. இதனை அந்த யுவதி, தனது சகோதரனுக்குத் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து அவர் குறிப்பிட்ட இளைஞர் குழுவிடம் இதுபற்றிக் கேட்கச் சென்றபோது இரு தரப்பினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் முற்றியதை அடுத்து குறிப்பிட்ட இளைஞர் குழுவினால் யுவதியின் சகோதரனான பேணார்ட் கொஸ்ரன் (சுதா-வயது 21) கத்தியால் குத்தப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர், அங்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் இரவு8.30 மணியளவில் உயிரிழந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களெனக் கருதப்படும் எஸ்.நந்தன், கே.இரத்தினசிங்கம், கே.பிரபாகரன் ஆகியோர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கத்தியும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.(ம-10-290)




பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'கூலிக்கு வந்தவன்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் ஆதரவில் நடைபெற்றபோது நூல் ஆய்வுரையை சி.சரவணபவன்(சிற்பி) நிகழ்த்துவதை படத்தில் காணலாம். கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி க.குணராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன், நூலாசிரியர் ச.வே.பஞ்சாட்சரம் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம் :சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# தொழில்நுட்பங்களைப் புகுத்துவதன் மூலம் பனை உற்பத்திகளில் சர்வதேச தரம் வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வலியுறுத்து

பனை வள உற்பத்திகளில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்துவதன் மூலம் அவற்றை சர்வதேச தரத்திற்கு உயர்த்திக்கொள்ளவேண்டும். அதற்காக பனைவள ஆராய்ச்சி நிறுவனத்தை உடனடியாக சீரமைக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் நடத்திய பனை தென்னை வளம் தொடர்பான மேம்பாட்டுக் கருத்தரங்கு கடந்த 26ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. வடபிராந்திய முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் தி.சபாரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வின் இறுதியில் தொகுப்புரை ஆற்றியபோதே துணைவேந்தர் சு.மோகனதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரினை தமிழீழ நிர்வாக சேவையின் துணைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் ஏற்றினார்.

தொடர்ந்து இடம்பெற்ற கருத்தரங்கில் வவுனியா வளாக வணிகத் துறைப் பீடாதிபதி பேராசிரியர் நந்தகுமார், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி ச.பாலகுமார், கலாநிதி பி.நவரட்ணம், தென்னை ஆராய்ச்சி உத்தியோகத்தர் குணதிலக, பனை அபிவிருத்திச் சபையின் பரிசோதனை உத்தியோகத்தர் க.குலேந்திரா, பொது முகாமையாளர் எஸ்.கோகுலதாஸன் ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகளைப் படித்தனர்.

நிகழ்வில் பனை தென்னை வள அபிவிருத்திக்கான ஆலோசனைச் சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

கருத்தரங்கில் தொகுப்புரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மேலும் கூறியதாவது:-

உலகிலே 15 கோடி பனைமரங்கள் உள்ளன. அதில் 5 கோடி பனை மரங்கள் தமிழர்கள் வசம் உள்ளன. இலங்கையில் ஒரு கோடி பனை மரங்களும் தமிழ்நாட்டில் 4 கோடி பனை மரங்களும் காணப்படுகின்றன.

பனை, தென்னை வள உற்பத்திகளில் நவீன தொழில்நுட்பம் புகுத்தப்படவேண்டும். அதற்காக ஆராய்ச்சி நிலையம் ஒன்று உடனடியாகச் சீரமைக்கப்படவேண்டும். ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு புதிய ஆராய்ச்சிகளைத் தொடரவேண்டும் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் நடைமுறைக்கிடப்படவேண்டும். இச்செயற்பாடுகளுக்கு யாழ் பல்கலைக்கழகம் உறுதுணையாக இருக்கும்.

மேலும், பனை தென்னை வளம் சார்ந்த நிறுவனங்கள் அடிக்கடி சந்தித்து திட்டங்களைத் தீட்டி - கொள்கைகளை வகுத்து - செயற்படவேண்டும். பனை அபிவிருத்திச் சபை, தென்னை அபிவிருத்திச் சபை, பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக் கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்றன இந்த விடயத்தில் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டும். அதன் மூலம் பனை தென்னை வள அபிவிருத்தி மேலோங்கும். இந்நிறுவனங்களின் பிரதிநிதிகள் இணைந்து இந்த இரு வளங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் ஆலோசனைச் சபை ஒன்றை உருவாக்கவேண்டும். இப்படி பேராசிரியர் சு.மோகனதாஸ் கூறினார். (ம-9)

# தப்பியோடிய இராணுவத்தினரில் 1,570 பேரே கடிதம் ஒப்படைப்பு!

## நேற்றுவரை கால அவகாசம்

இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய்களிடமிருந்து சட்டபூர்வமாக ராஜினாமாக் கடிதங்களை பெற்றுக்கொள்ளும் இராணுவ நடமாடும் சேவை நேற்றுவரை நீடிக்கப்பட்டது.

இதன் முதற்கட்ட வேலைத் திட்டம கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களில் 5,000 பேர் கமபஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடமாடும் சேவை மூலம் இதுவரை 1,570 பேர் சட்டபூர்வமாகத் தமது பதவி விலகும் கடிதங்களை ஒப்படைத்துள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் தப்பிச்சென்றவர்களில் மூன்றில் ஒரு பகுதியினரே சட்டபூர்வமாக விலகியுள்ளனர். இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கை பூரண வெற்றியளிக்காத நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை 28ஆம் திகதி வரை தப்பியோடிய இராணுவத்தினருக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இராணுவ தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமனம் செய்வதில் சிக்கல்

பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் மீண்டும் சிக்கல் தோன்றியுள்ளது.

ஜனாதிபதியால் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் முடிய இன்னும் மூன்று மாதங்கள் மட்டுமே உள்ளன. ஜனவரி முற்பகுதியில் இந்திரா டி சில்வா பதவியில் இருந்து ஓய்வுபெறவேண்டும். ஜனவரி மாதத்துடன் இந்திரா டி சில்வா அறுவது வயதைப் பூர்த்தி செய்கின்றார்.

அறுபது வயதைப் பூர்த்தி செய்த ஒருவரை நிரந்தரமாகப் பொலிஸ் மா அதிபராக நியமிக்க முடியாது. எனவே, ஜனாதிபதியின் நேரடி சிபார்சின் மூலம் பதில் பொலிஸ் மா அதிபராக தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் இந்திரா டி சில்வா தொடர்ந்து பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை உள்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின்படி பொலிஸ் மா அதிபரை சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவே நியமிக்கவேண்டும். ஜனாதிபதியின் கட்சி ஆட்சியில் இருந்தபோது ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவுடனேயே 17ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதன் அடிப்படையில், அரசியல் தலையீடுகள் இன்றி பொலிஸ் ஆணைக்குழு சுதந்திரமாக இயங்க வேண்டும். இதற்கமைய அரசமைப்புச் சபை பொலிஸ் ஆணைக்குழுவின் சிபார்சுக்கு அமைய தகுதியான ஒருவரின் பெயரை ஜனாதிபதிக்கு அனுப்பும்.

ஆனால், ஜனாதிபதியால் தற்போது சிபார்சு செய்யப்பட்ட இந்திரா டி சில்வாவின் பெயரை அரசமைப்புச் சபை ஏற்கனவே நிராகரித்துவிட்டது.

இந்திரா டி சில்வாவை விட வயதில் குறைந்த சேவை மூப்புடைய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நால்வரின் பெயர்களைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது அரசமைப்புச்சபை. இவர்கள் நால்வரில் ஒருவரின் பெயரையே பொலிஸ் மா அதிபர் பதவிக்கு அரசமைப்புச்சபை சிபார்சு செய்து ஜனாதிபதிக்கு அனுப்பும்.

பொலிஸ் ஆணைக்குழுவின் பரிசீலனையில் இருப்பவர்களின் பெயர்ப் பட்டியலில் பதில் பொலிஸ்மா அதிபரின் பெயர் இடம்பெறவில்லை. எனவே, ஜனாதிபதியினால் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள இந்திரா டி சில்வா இப்பதவியில் நீடிப்பது சந்தேகமே என்றும் அந்த அதிகாரி கூறினார்.



உலக ஆசிரியர் தினமான ஒக்ரோபர் 6ஆம் திகதி 80 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் அன்பளிப்புப் பொருள்களை வழங்கிக் கௌரவித்தது. அந்த நிகழ்வை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். (ஐ)

## விஷஜந்துக்களால் தீண்டப்படுவோரினது எண்ணிக்கை தென்மராட்சியில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாம்பு மற்றும் விஷஜந்துக்களால் தீண்டப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக சாவகச்சேரி வைத்தியசாலைப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

2000ஆம் ஆண்டு மே மாதத்தில் இங்கு காணப்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் அநேகமான மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறியிருந்தனர். மக்கள் பாவனையின்றி இருந்த வீடுகளிலும் காணிகளிலும் தற்போது பாம்புகளும் விஷஜந்துக்களும் பெருகிக் காணப்படுகின்றன. மீளக்குடியமர்ந்துவரும் மக்களுக்கு இந்த விஷஜந்துக்களால் பெரும் தொல்லை ஏற்படுகின்றது.

தீபாவளித் தினமான கடந்த வெள்ளிக்கிழமை இரவு மட்டுவில், மிருசுவில், மந்துவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் அங்கு அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன.

கடந்த செப்ரெம்பர் மாத இறுதியிலும் ஒரே இரவில் பாம்பு உட்பட விஷஜந்துக்களால் தீண்டப்பட்ட நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிந்தனர்.

இதேவேளை -

விசர்நாய்க்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கையும் தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10-117)

## வரலாற்றுக்கழக அங்கத்தவருக்கு!

யாழ்ப்பாணம்.ஒக்.29

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக கழக அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கழகம் சம்பந்தமான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் இக் கலந்துரையாடலுக்கு அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். (ஒ-12)

## கந்தஷஷ்டி பட்டிமன்றம்

வடமராட்சி, ஒக்.29

தொண்டமனாறு சந்நிதியான் ஆசிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை கந்தஷஷ்டி உற்சவ காலத்தை ஒட்டி ஆச்சிரம மண்டபத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தலைமையில் பட்டிமன்றத்தை நடத்தி வருகின்றது.

இத்தொடரில் இன்று புதன்கிழமை "நிறைவான மகிழ்ச்சிக்கு, மிகவும் அவசியமானது பணமே அல்லது குணமே என்ற தலைப்பிலும் நாளை வியாழக்கிழமை வள்ளுவன் காட்டிய வாழ்க்கை நெறியை இன்றைய சமூகம் தழுவி நிற்கின்றதா? அல்லது நழுவிச்செல்கின்றதா? என்ற தலைப்பிலும் பட்டி மன்றம் நடைபெறவுள்ளது.

அத்துடன் இத்தினங்களில் பட்டிமன்றத்தின் பின்னர் கே.சத்தியதாசன குழுவினரின் வில்லுப்பாட்டும் இடம்பெறும். (ஒ-10-173)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது சங்கத்தின் அங்கத்தவரும், யா.மா. சபை நலன்புரிச்சங்கம், சி.க.உ.கூ. சங்கம் என்பவற்றின் அங்கத்தவரும் சிரேஷ்ட குடும்பநல உதவியாளருமாகிய

**திருமதி லயனல் சத்தியபாமா**

அவர்கள் 30.07.2003ஆம் திகதியன்று யாழ். நீதிவான் திரு. R.T.விக்னராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் செய்தமையையிட்டு அவர்களைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் பல பதவிகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

சுகாதாரப் பகுதி
நலன்புரிச்சங்க அங்கத்தவர்களும்,
சு.வை. அதிகாரியும்,
யா.மா.சபை, யாழ்ப்பாணம்.

(24171) (26-21-15-19)



சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்

**கேள்வி அறிவித்தல்**
**வாகனங்கள் திருத்தம்**

இதே பத்திரிகையில் 21.10.2003ஆம் திகதி வெளிவந்த கேள்வி அறிவித்தல் தொடர்பாக,

பின்வருமாறு கால எல்லை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

கேள்விப் படிவம் பெறும் திகதி: 13.11.2003 பி.ப. 3.00 மணிவரை
கேள்வி ஏற்றல் திகதி: 14.11.2003 மு.ப. 10.00 மணிக்கு முன்பாக.

வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி-31006) (24-15-21-19)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் (2003/2004)**

கலைப்பீட (இராமநாதன் நுண்கலைக்கழகம் உட்பட), விவசாயபீட மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டின் (2003/2004) விரிவுரைகள் 01.12.2003இல் ஆரம்பமாகும்.

முதலாம், 2ஆம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு விரிவுரைகள் பற்றி பின்னர் அறியத்தரப்படும்.

- பதிவாளர்.

(C-31008) (34-21-15-19)



**NATURAL HEALTH LINE**

**சித்த மருத்துவர்களின் சேவைகள்**

- ★ இயற்கை மூலிகை சிகிச்சை முறைகள்
- ★ ஆயுர்வேத சித்த மருத்துவ சிகிச்சை
- ★ பஞ்சகர்ம சிகிச்சை முறைகள்
- ★ மற்றும் மருத்துவ ஆலோசனைகள் என்பன

நோயாளர் தங்குமிட வசதியுடன்
31.10.2003 வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படுகின்றது.

சிகிச்சை நேரம்:
தினசரி காலை 8 மணிமுதல்
இரவு 9 மணிவரை.

262, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

நிர்வாகி,
NATURAL HEALTH LINE
(நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலை)

(26-15-19-21) (24173)



**C.Dஇல்**
**குன்னக்குடி வயலின் இசை**

தீபாவளியன்று நல்லூரில் நடைபெற்ற குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசைக்கச்சேரி C.D., கசற் பெற்றுக்கொள்ளலாம்.

**மகா மினி**
958/47, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

(24170)



**காணி விற்பனைக்கு**

இல.65, கச்சேரி நல்லூர் வீதியில் 1¾பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**க. பரராஜசிங்கம்**
இல.65, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.011 2599211
0777 674920

(24178) (26-15-19-21)



**வீடும், காரும் விற்பனைக்கு**

சுதுமலை தெற்கு, குருந்தடிப் பிள்ளையார் கோவிலடியில் (அண்ணாமலைப் பாரியார் சந்திக்கு அண்மையில்) மேல்மாடியுடன் கூடிய (1¾ பரப்பில் அமைந்த) வீடும், பாவனையில் உள்ள பச்சைநிற Morris Minor காரும் உடன் விற்பனைக்குண்டு.

மேற்படி வீடு வாடகைக்கும் கொடுக்கப்படும்.

தொடர்பு:- அருண் மாஸ்ரர்
077-6110781

(24175) (35-15-19-21)



**வாழ்த்துகின்றோம்**



எமது கல்வி நிறுவன இயக்குநரும் தொழில்நுட்பக்கல்லூரி பகுதிநேர விரிவுரையாளரும் பிரபல ஆங்கில ஆசானுமான

**த.தனேந்திரன்** B.Com.(Hons)

அவர்கள் இன்று மணவாழ்வில் இருமனங்கள் இணையும் இந்நன்னாளில் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
**மணி கல்வி நிறுவனம்.**

(24168) (26-15-19-21)



**FESTIVAL OF CAROLS - 2003**

The 52nd Annual Festival of Carols by the youth of the North will be held on Saturday 1st November 2003 at 10.00a.m. at Abels Auditorium, Technical Institute, Jaffna College, Vaddukoddai.

Admission by Programme Rs. 10/= each.

**Principal**
**Jaffna College, Vaddukoddai.**



**பனிப்புலம் அம்பாள் ஆலய இராஜகோபுர திருப்பணி!**

பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதான வாசலில் ஐந்து தளங்களைக் கொண்ட, பஞ்சாங்க வேலைகள் நிறைந்த இராஜகோபுரம் அமைப்பதற்கு அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது.

இத்திருப்பணி வேலைகளை நிறைவுசெய்ய சுமார் ஒருகோடி ரூபாவிற்கு மேல் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருப்பணி வேலைகளை இனிதே நிறைவுசெய்ய **திரு. இராசையா பாலசுப்பிரமணியம்** தலைமையில் ஒன்பது பேர் கொண்ட *"இராஜகோபுர திருப்பணிக்குழு"* ஒன்று விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கேட்பவர்களுக்கு "நல்லனவெல்லாம் தரும்" புகழ்கொண்ட பனிப்புலத்து இந்த அம்பிகையின் இராஜகோபுரத் திருப்பணிக்கு பண உதவி, பொருள் உதவி செய்ய நல்லெண்ணம் கொள்ளும் அன்பர்கள் தங்கள் நல்லெண்ணக் கருத்துக்களை திருப்பணிக்குழுத் தலைவரின் முகவரியில் தொடர்புகொண்டு தெரிவிக்கவும். அன்பளிக்கும் நிதி, பொருள் உதவிகளையும் அவரிடமே அன்பளித்து அதற்குரிய பற்றுச்சீட்டையும் - அம்பிகையின் விபூதிப் பிரசாதத்தையும் பெற்றேகுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

மேற்படி இராஜகோபுர திருப்பணிக்குழுவால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மானிப்பாய் இலங்கை வங்கி கிளை சேமிப்புக் **கணக்கு இல.18146** அல்லது **நடைமுறைக்கணக்கு இல.P 2869** ஆகிய கணக்குகளுக்கு நிதி உதவிகளை அனுப்பியும் இந்த இராஜகோபுரத் திருப்பணியில் பங்கேற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:

(1) வெளிநாடுகளில் இத்திருப்பணிக்கு நிதி திரட்டுவதற்கு திருப்பணிக்குழு உறுப்பினர்களாகிய கனடாவில் வசிக்கும் *திரு. கணபதிப்பிள்ளை கனகரத்தினம்,* நோர்வேயில் வசிக்கும் *திரு. இராசையா சிவபாதம்* ஆகிய இருவரையும் நியமித்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறியப்படுத்த விரும்புகின்றோம்.

(2) இத்திருப்பணி சார்பில் இலங்கையில் எவ்விடத்திலும் நிதி திரட்டுவதற்கு வேறு எவரையும் நியமிக்கவில்லை என்பதையும் அறியத்தருகின்றோம்.

இராஜகோபுர திருப்பணிக்குழுத் தலைவரின் முகவரி:
**திரு.இராசையா பாலசுப்பிரமணியம்**
(புதிய அபிராமி ரெக்ஸ்ரைல் உரிமையாளர்),
பனிப்புலம், பண்டத்தரிப்பு.

பனிப்புலம்
அம்பாள் இராஜகோபுர
திருப்பணிக் குழுவினர்.

(24172) (34-15-19-21)

# வன்னியின் புராதன வரலாறு கூறும் சான்றுகள் பல வெளிப்படுகின்றன

அண்மைக் காலங்களில் வன்னியின் பல பகுதிகளிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் தொல்பொருள் சான்றுகள் ஈழத்தின் வரலாற்றில் பெரும் தாக்கத்தைப் புரியக்கூடியனவாகக் காணப்படுகின்றன.

அக்கராயன் ஸ்கந்தபுரம் 271 ஆம் இலக்கக் காணி இடைக்காட்டைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவருடையது காணியில் இருந்து நாகத்தின் சிலையும் 9 அங்குல உயரமுடைய முழுப்படியான பெண் தெய்வச சிலையும் எடுக்கப்பட்டு 1993ஆம் ஆண்டளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டன. அந்த அம்மன் சிலையை ஒத்த உடைந்த சிலையின் பாகங்கள் அக்கராயன் பகுதியை அண்டிய கொன்றையன் கட்டு (கொண்டையின் காடு) பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த இடைச்சிமோட்டை (ஆரியம் பொந்துவிற்கு அருகில்) பகுதிகளில் எடுக்கபட்டுள்ளன.

ஸ்கந்தபுரம் 2ஆம் வாய்க்கால் பகுதியில் அளவெட்டியைச் சேர்ந்த காசிப்பிள்ளை அவர்களின் காணியில் பூசனி நடுவதற்காகக குழி வெட்டப்பட்டபொழுது தலைப்பாகம் அற்ற பெண் தெய்வச் சிலை ஒன்று வெளிப்பட்டு, என்னால் சேகரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேசத்தினுள் அடங்கிய ஆனைவிழுந்தான் என்ற இடத்தில் புதிதாக குளக்கட்டிற்கு மண், வெட்டி எடுக்கப்பட்டபொழுது 35இற்கும் மேற்பட்ட அம்மன் சிலைகளும் 2 ஆண் தெய்வச் சிலைகளும் ஐந்துதலை நாகத்தின் சிலைகளும் ஆடு அல்லது நாய் எனக் கருதக்கூடிய சிலையும் சில வட்டில்களும் வெளிப்பட்டன. சில உடைந்தும் சில முழுப்படியும் கிடைத்துள்ளன. நிலமட்டத்தில் இருந்து 1½ அடி ஆழத்தில் இவை இருந்திருக்கின்றன. கைவிடப்பட்ட நிலையில் வெள்ளப்பெருக்கினால் மூடப்பட்டிருக்கலாம் அல்லது தெய்வச சிலைகள் மனித கை, கால் படாத இடங்களில் குழிகளில் இடப்பட்டிருக்கலாம்.

அச்சிலைகளில் 2 கொம்புகள் உடைய ஆண் சிலை ஒன்றும் தாடியுடன் கூடிய சிலை ஒன்றும் காணப்படுகின்றது. இச்சிலைகளை நாம் பார்க்கும்பொழுது சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் எமக்கு ஞாபகம் ஊட்டுகின்றன. நாகத்தின் சிலையில் பின்வரும் குறியீடு காணப்படுகின்றது. அது எழுத்தா குறியீடா என அறியமுடியாதிருக்கின்றது. இவற்றின் காலத்தை C14 காலக் கணிப்புக்கு உட்படுத்தும் பொழுதுதான் கூற முடியும்.

### நடுகற்கள்

நடுகல் என்பது இறந்த வீரன் அல்லது தலைவன் நினைவாக நடப்படும் கற்களே நடுகற்கள் ஆகும். அக்கராயன் பிரதேசம் பூநகரிப் பிரதேசத்தில் மண்ணுக்குக் கீழே மருந்துக்கும் கருங்கற்களைக் காணமுடியாது. ஸ்கந்தபுரம் 41ஆம் இலக்க வயற்காணியில் நடுகல் ஒன்று காணப்படுகின்றது. நிலத்தில் இருந்து 2½ அடி உயரத்திற்கு ஓர் அடிநீள அகலம் கொண்டதாக இருக்கின்றது.

உருத்திரபுரம் 10ஆம் வாய்க்காலில் புத்தூரைச் சேர்ந்த செ.இராசையா என்பவரின் காணியில் நடுகல் ஒன்று காணப்படுகின்றது. அக்கல்லிலே எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றை உரிய முறையில் பிரதி எடுத்தால் வாசிக்க முடியும்.

இன்னொரு நடுகல் ஆனைவிழுந்தான் பகுதியில் இருக்கின்றது. மேலே கூறப்பட்ட பெண் தெய்வச் சிலைகள் காணப்பட்ட இடத்தில் இருந்து 2½மைல் தூரத்தில் அக்கராயன், ஜெயபுரம் வீதிக்கு அண்மையில் இருக்கின்றது.

குமரையன்தாழ்வு முக்கொம்பன் பகுதியிலே மூன்று நடுகற்கள் காணப்பட்டன. அவற்றை உடைத்து எடுத்து விட்டார்கள்.

### ஈமத்தாழி

ஈமத்தாழி என்பது இறந்தவர்களினது எலும்புகளை இட்டு அடக்கம் செய்யும் பானையாகும். ஏற்கனவே பூநகரி வெட்டுக்காட்டிலும் குஞ்சுபரந்தனிலும் இப்பானைகள் முழுப்படி எடுக்கப்பட்டுள்ளன. அக்கராயனை அண்டிய குமரையன்தாழ்வு என்ற இடத்தில் ஈமத்தாழி ஒன்று இருப்பதாக அறிந்து அங்கு சென்றிருந்தேன். கிடங்கிலே பானையைத் தாட்டு சதுரமாகச் செங்கட்டிகளை அடுக்கி மேலே கருங்கல்லை வைத்திருக்கிறார்கள். அப்பானையை எடுத்து வீட்டில் வைத்திருந்த சில நாள்களின் பின்னர் வீட்டுக்காரருக்கு காய்ச்சல் வந்ததாகவும் பானையை உடைத்தெறிந்ததாகவும் கூறினர். உடைக்கப்பட்ட பானைத் துண்டங்களையும் அநாதரவாகக் கிடந்த செங்கட்டிகளையும், கருங்கல்லையும் பார்வை இடக்கூடியதாக இருந்தது. இத்தகைய சவ அடக்க முறை பற்றி பேராசிரியர் கந்தையா சிற்றம்பலம் அவர்கள் தமது நூலிலே பின்வருமாறு கூறுகின்றார்.

கு.மேகநாதன்,
ஆசிரியர்,
இந்துக் கல்லூரி, கிளிநொச்சி.

பானையில் இறந்தவர்களின் உடல் அல்லது உடற்பாகங்கள் அல்லது எலும்புகளை இட்டு குழிதோண்டி தாட்டு சதுரமாக செங்கட்டிகளை அடுக்கிக் கட்டி குழியின் வாயை கருங்கல்லினால் மூடிவிடுவது இது தமிழ்நாட்டின் ஆதிஸ்ச நல்லூர் என்ற இடத்தில் காணப்பட்டதாகவும் கி.மு. காலத்திற்கு முற்பட்டதெனவும் கூறியுள்ளார்.

### தொழில்நுட்ப அறிவு


இப்பிரதேசத்தில் ஆதியில் பல சிறுகுளங்கள் காணப்பட்டபொழுதிலும் தரைகீழ் நீரையும் பயன்படுத்தியுள்ளனர். ஒரு கிணற்றினை எல்லா இடத்திலும் வெட்டமுடியாது. நீர் ஊற்று உள்ள இடத்தை அறிந்துதான் வெட்டியுள்ளனர். பூநகரி, கிராஞ்சியிலும் யாழ். குடாநாட்டில் வல்லிபுரத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணீர் முறிப்புக் குளத்திற்கு அண்மையிலும் 2000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கிணறுகள் மணற்பாங்கான இடத்தில் இருந்ததினால் தூர்ந்துபோகும் தன்மை கொண்டவை. எனவே, இவற்றிக்கு மண்ணிலே சுடுமண் வளையங்கள் செய்து கட்டியுள்ளனர். கிராஞ்சிக்கிணறு இப்பவும் அப்படியே இருக்கின்றது. 'O' Positive Group இரத்தம் உள்ள ஒருவர் பச்சைத் தென்னம் ஈர்க்கை இரண்டு கட்டைவிரல்களுக்கும் ஆட்காட்டி விரல்களுக்கும் இடையில் தொய்வாக வைத்துக்கொண்டு போகும் பொழுது நீர் ஊற்று உள்ள இடத்திலே அந்த ஈர்க்கு தானாகச் சுற்றும். இதேமுறையை 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் நம்மவர் அறிந்திருக்கிறார்கள். ஏனெனில், இதே முறையைப் பின்பற்றி அண்மையில் தண்ணீர்முறிப்புக் குளத்திற்கு அண்மையில் 1983இல் இடம்பெயர்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் அங்கு சென்று புதிதாக ஒரு கிணற்றை வெட்டியபொழுது நிலமட்டத்திற்கு கீழே 4 அடி ஆழத்தில் சுடு மண் கிணறு வெளிப்பட்டது. இத்தகைய ஒரு தொழில்நுட்ப முறையை 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் நம்மவர் அறிந்துவைத்துள்ளனர் என்பதை அறிந்து நாம் பெருமைப்படவேண்டும்.

### ஓவியம்

அண்மையில் பூநகரி மண்ணித்தலைக்குச் சென்றபொழுது யாழ்.பல்கலைக்கழக ஆய்வுக்குழுவினரால் வெட்டப்பட்ட ஒரு குழியைக் கண்ணுற்றோம். எம்முடன் வந்த எமது கல்லூரியின் 10ஆம் வகுப்பு மாணவர்கள் அக்குழியின் அருகில் வெட்டி உடைக்கப்பட்ட அநாதரவாகக் கிடந்த 2 கற்களை எடுத்து உற்று நோக்கினர். ஒன்றிலே யானையின் முகம் வரையப்பட்டுள்ளது. இன்னொன்றில் சித்திரம் கீறப்பட்டுள்ளது. யாழ்குடாநாட்டில் காணப்படும் சுண்ணாம்புக் கல்லின் ஒரு பக்கத்திற்கு சுதையைப் பூசி அதற்கு மேலே யானை முகத்தை வரைந்துள்ளனர். கண், காது ஆகியவற்றிற்கு சிப்பிகளை உடைத்துச் செருகியுள்ளனர்.

தட்டையான கல்லிலே சித்திரம் வரையப்பட்டுள்ளது. புராதன காலத்தில் கோடுகள் வரைவதற்கு மனித இரத்தம், மிருகங்களின் இரத்தம், முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவற்றைப் பயன்படுத்தினர். அத்தகைய முறையிலே இச்சித்திரம் வரையப்பட்டுள்ளது எனக் கருத இடமுண்டு.

தொடரும் தொல்பொருள் ஆய்வுகள் மேலும் புதிய தகவல்களைத் தந்து எமது வரலாற்றுக்கு மெருகூட்டும் என நம்புகின்றோம். ★


பெண் தெய்வ சிலைகள்

# தொலைந்த பரிசுப்பணம் மீண்டும் கிடைத்தது! ஊழியரின் நேர்மைக்கு டெண்டுல்கர் பாராட்டு!!

தாம் தொலைத்துவிட்ட 35,000 ரூபா பணத்தைக் கண்டெடுத்துக் கொண்டுவந்த ஹோட்டல் ஊழியர் ஒருவரின் நேர்மையை இந்திய கிரிக்கெட் நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் குவாலியர் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுடனான ஒருநாள் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இதற்காக குவாலியர் மாவட்ட கிரிக்கெட் சங்கம், டெண்டுல்கருக்கு 35,000 இந்திய ரூபா பரிசு வழங்கியது.

வீரர்களின் உடைமாற்றும் அறையில் நடந்த ஆரவாரத்தில் டெண்டுல்கர் பரிசுப்பணத்தைத் தொலைத்து விட்டார்.

அதன்பின், வீரர்கள் தங்கியிருந்த 'சென்றல் பார்க்' ஹோட்டலின் வெளிக்கள உணவு உபசரிப்புக்குப் பொறுப்பான சோஹான் சிங் பிஸ்ட், வீரர்களின் அறையிலிருந்த உபகரணங்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்த போது 'சிறப்பாட்டக்காரருக்கு' என அடையாளமிடப்பட்ட கடித உறையொன்றைக் கண்டார்.

உடனே அதை எடுத்துக்கொண்டு டெண்டுல்கர் தங்கியிருந்த ஹோட்டலின் 207 ஆம் அறைக்கு ஓடினார்.

சோஹன் சிங்கின் நேர்மையைப் பாராட்டி அவருக்கு பண வெகுமதியொன்றை அளிக்க முன்வந்தார் டெண்டுல்கர். ஆனால், சோஹன் சிங் அதைப் பணிவாக நிராகரித்து விட்டார்.

எனினும், ஹோட்டலிலுள்ள குறிப்புப் புத்தகத்தில் ஊழியரின் நேர்மையைப் பாராட்டி நன்சான்றளித்தார் டெண்டுல்கர்.

"இந்திய அணியின் மற்றொரு வீரரான முரளி கார்த்திக்கின் பணப்பையும் காணாமற்போது. எனினும், சிறிது நேரத்தில அது மீளக்கிடைத்தது" என ஹோட்டலின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# ஆபிரிக்கா-ஆசிய விளையாட்டு விழா: டென்னிஸில் இலங்கைக்கு வெண்கலம்

இந்தியாவில் நடைபெறும் ஆபிரிக்க - ஆசிய விளையாட்டு விழாவில் குழுக்களுக்கிடையிலான டென்னிஸ் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

இலங்கை வீரர்களான ஹார்ஷா கொடமான்ன, ரொஹான் டி சில்வா ஆகியோர் இப்பதக்கத்தை வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா தங்கப் பதங்கத்தையும் நைஜீரியா வெண்கலப்பதக்கத்தையும் வென்றன.

ஹைதராபத் நகரில் நடைபெறும் இவ்விழாவில் குழுக்களுக்கான டென்னிஸ் போட்டியில் இலங்கை அணி அரையிறுதியில் நைஜீரியாவிடம் 4:2 என்ற விகிதத்தல் தோல்வியுற்றது.

குழுநிலை ஒற்றையர் போட்டியில் ஹார்ஸா கொடமான்னவை நைஜீரியாவின் அப்துல் மூவின் பாபலோலா 6:4, 6:2, என்ற விகிதத்தில் தோற்கடித்தார்.

மற்றோர் ஒற்றையர் போட்டியில் இலங்கை வீரர் ரொஹான் டி சில்வாவை நைஜீரிய வீரர் சண்டேகுமு 6:3,6:2 என்ற விகிதத்தில் வென்றார்.

எனினும், இரட்டையர் போட்டியில் இலங்கையின் ரொஹான் டி சில்வா - ஹார்ஷா கொடமான்ன இருவரும் நைஜீரியாவின் சண்டேகுமு - ரொட்டிமி ஜெகேட் ஜோடியை 4:6, 6:3, 6:4 என்ற விகிதத்தில் வென்றனர்.

மற்றோர் அரையிறுதிப் போட்டியில் பிலிப்பைன்ஸ் அணியை இந்திய அணி 3:0 என்ற விகிதத்தில் வென்றது.

இறுதிப் போட்டியில் நைஜீரியாவை இந்தியா 3:0 என்ற விகிதத்தில் வென்று தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

மகளிர் குழுக்களிடையிலான டென்னிஸ் போட்டியிலும் இந்தியா தங்கப் பதங்கத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட இந்திய - பாகிஸ்தான் ஆண்கள் அணிகளுக்கிடையிலான ஹொக்கி போட்டியில் இந்திய அணி 4:2 என்ற விகிதத்தில் வெற்றி பெற்றது.

அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி மலேஷியாவுடன் மோதவுள்ளது

### மெய்வன்மைப் போட்டிகள் ஆரம்பம்

இவ்விழாவின் மெய்வன்மைப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. இப்போட்டிகளில் இலங்கையைச் சேர்ந்த 11 மெய்வல்லுநர்கள் பங்குபற்றுகின்றனர்.

இப்போட்டிகளின் நான்காவது நாளான நேற்றுமுன்தினம்வரை சீனா 10 தங்கப்பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களைப் பெற்று முன்னணியில் இருந்தது.

## இன்றைய நிகழ்வு

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் போட்டியில் இன்று காலை 6.30 மணிக்கு யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ். மத்திய கல்லூரி 'பி' அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாடவுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் இன்று மாலை 5 மணிககு யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி மோதவுள்ளது. (ம-8)

# இரு போட்டிகளிலாவது விளையாடுவேன்; இந்திய அணித் தலைவர் கூறுகின்றார்!

இந்தியாவில நடந்துவரும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் கடைசி இரண்டு போட்டிகளிலாவது விளையாடுவேன் என்று இந்திய அணித் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

தொடையில் ஏற்பட்ட கட்டி ஒன்றுக்காக இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலிக்கு அடுத்தடுத்து சத்திரசிகிச்சை நடந்தன கொல்கத்தா மருத்துவமனையில் ஓய்வுஎடுத்து வந்த கங்குலி, 3 நாள்களுக்கு முன்பு வீடு திரும்பினார். காயம் காரணமாகத் தற்போது நடந்துவரும் முததரப்பு கிரிக்கெட்டில் கலந்துகொளளாத கங்குலி கடைசி 2 போட்டியில் ஆடவேண்டும் என்ற நோக்கில் உள்ளார்.

இதுகுறித்து அவர் கொல்கத்தாவில் நிருபர்களிடம் கூறுகையில் -

"மருத்துவர்கள் என்னைப் பத்து நாள்கள் ஓய்வு எடுக்கவேண்டும் என்று கூறிவிட்டார்கள். எனவே, இந்தியாவுக்கான அடுத்த 2 போட்டிகளிலும் கலந்துகொள்வது முடியாத காரியம். முடிந்தால் நவம்பர் 12ஆம் திகதி இந்திய அணிக்குத் திரும்புவேன் - என்றார்.

நவம்பர் 12 மற்றும் 15ஆம் திகதிகளில் பெங்களூர், ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இந்தியா மோதவுள்ளது. இறுதிப் போட்டி கொல்கத்தாவில் நவம்பர் 18ஆம் திகதி நடக்கவிருக்கிறது.

ஏற்கனவே, நியூஸிலாந்துக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியிலும் கங்குலி ஆடவில்லை. இதுவரை 233 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ள கங்குலி, 8897 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். கங்குலி அணியில் இடம்பிடிக்காத காரணத்தினால் விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார்.

கங்குலி அணிக்குத் திரும்பும் பட்சத்தில் பார்த்தீவ் நீக்கப்படும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது. உலகக் கிண்ணத் தொடரில் நிராகரிக்கப்பட்ட லக்ஷ்மன் ஆஸ்திரேலியாவுக்கு எதிராகச் சதம் அடித்த காரணத்தினால் அவர் தொடர்ந்து அணியில் நீடிப்பது உறுதியாகிவிட்டது.

(ம)

# விளையாட்டு

# பிரேஸில் திரைப்படத்தில் உதைபந்து வீரர் ரொனால்டோ

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் தங்கப்பாதணி விருதை வென்ற பிரேஸில் உதைபந்து வீரர் ரொனால்டோ (27) பிரேஸில் திரைப்படத்தில் வெற்றிகரமான உதைபந்துவீரராக நடிக்கிறார்.

எதிர்வரும் நவம்பரில் கியூரிடியாவில் நடைபெறும் 2006 தென் அமெரிக்க உலகக் கிண்ண தகுதிச் சுற்று ஆட்டத்தில் பிரேஸிலும், உருகுவேயும் விளையாடவுள்ளன.

இந்த ஆட்டத்தின் போது இத்திரைப்படத்தின் தொடக்கக் காட்சிகள் படம் பிடிக்கப்படவுள்ளன.

'எ சமர் ஷோ' என்று பெயரிடப்பட்டுள்ள இத்திரைப்படம் அடுத்த ஜனவரியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நிலவு.Com இன்

# தமிழ் கணினி -2003

## மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

இடம்: யாழ். பல்கலைகழக நூலக கேட்போர் கூடம்
காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

- ★தமிழ் மென்பொருள்கள்
- ★கற்றலுக்கான தமிழ் CDக்கள்
- ★தமிழ் மூலம் புத்தகங்கள்
- ★மென்பொருள் மற்றும் GAME CDக்கள்
- ★கணினி மூலம் ஜாதகம்
- ★'கம்ப்யூட்டர் Info' மாதாந்த மின்னிதழ்
- ★இன்னும் இன்னும்.....

அனுமதி 10/=

(C/31010) (29)

அனுசரணை:

கம்பியூட்டர் Info | IT Island NIIT

ஊடக அனுசரணை: உதயன்



## நாட்டின் முதல்தர உருக்கிலான எரிபொருள் களஞ்சிய தாங்கிகளின் உற்பத்தியாளர்

3,000 கலன்கள்
5,000 கலன்கள்
10,000 கலன்கள்

அல்லது:

பெற்றோலியக் கூட்டுத்தாபன நியமங்களின்படி வேண்டிய கொள்ளளவுகளில்...

- பாவனைக்கால உத்தரவாதம்
- லியோட் தகைமைபெற்ற வெல்டர்கள் மற்றும் பொறியியலாளர்கள்
- உருக்கு, துருப்பிடிக்காத உருக்கிலான வேலை, குழாய்த்தொடுப்புகள், கழிவுநீர் குழாயமைப்பு முதலியன

முன்னோடியை அழையுங்கள்!

முதல் பத்து வாடிக்கையாளர்களுக்கும் மோபைல் தொலைபேசி ஒன்று அல்லது 22 கரட் தங்க நாணயம் ஒன்று...

V Com Heavy Engineers (Pvt) Ltd
21, Deal Place, Colombo - 03.
Tel No : 2564685/6, 074 712257.
Fax : 074 - 712253/6.
E-mail : vcom@vinet.lk
Hot Line: 0777 684711 - Ms. Melanie


## ரமழான் சிந்தனை



நோன்பென்பது பசித்திருப்பதும் தாகித்திருப்பதும் மட்டுடல்ல, உள்ளத்தையும், உடல் உறுப்புக்களையும் பாவச் செயல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதுமாகும். அப்போழுது தான் நோன்பின் முறுமையான பயனை அடைய முடியும்.

நோன்பு நோற்பவர் வீண் வார்த்தைகள் பேசக் கூடாது. தாக்கம் புரியக்கூடாது. எவரேனும் ஏசினால் அல்லது சண்டைக்கு இழுத்தால் நான் நோன்பாளி என்று கூறி ஒதுங்கிவிட வேண்டுமென்று நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். பொய் பேசுதல், கோள் சொல்லுதல், பரிகாசம் செய்தல், அரட்டையடித்தல் போன்றவற்றிலிருந்தும் நோன்பாளி விலகிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வருட நோன்பின் மூலம் முஸ்லிம் பெறும் பயிற்சி ஏனைய பதினொரு மாதங்களிலும் அவன் மனிதப் புனிதனாக வாழ வழிவகுக்கிறது.

*(நன்றி: மக்கள்பணிமனை)*

# 3,250 முல்லை விவசாயிகளுக்கு உணவு விவசாய நிறுவனம் உதவி

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைதீவு மாவட்ட விவசாயிகளுக்கு உணவு விவசாய நிறுவனம் உதவியளித்து வருகின்றது.

நெற்செய்கையில் ஈடுபடும் 2300 விவசாயிகளுக்கும் 500 உழுந்துச் செய்தியாளர்களுக்கும் 300 மரக்கறிச் செய்கையாளர்களுக்கும் 100சோளச் செய்கையாளர்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

920 ஹெக்டெயரில் நெற்செய்கை மேற்கொள்ளுவதற்கென விதைபொருட்கள் அடிக்கட்டுப்பசளைகள் விவசாய உபகரணங்கள் என்பன அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உணவு விவசாய நிறுவன முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் வேல்நாயகம் இராஜநாயகம் தெரிவித்தார்.

முல்லைதீவு மாவட்டத்திலுள்ள தண்டுவான், குமிழமுனை, ஒட்டுசுட்டுவான் முள்ளியவளை, மாங்குளம், துணுக்காய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3250 விவசாயிகளே நன்மை பெற்றுவருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 241.25 தொன் யூரியா பசளையும் கிடைத்துள்ளன.

உழுந்து 2500 கிலோ, சோளம் 400கிலோ, மரக்கறி விதைகள் 1050 கிலோ ஆகியன 950 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. உதவி இணைப்பாளர் எஸ்.ஹரிராம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

(ம-214)


NLIIT
புதிய கணனி வகுப்புகள்
ஆரம்பம் 01-11-2003 (சனிக்கிழமை)
NORTH LANKA
பிரதான வீதி, சங்கானை. | பிரதான வீதி, மாளிப்பாய். | பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(24184) (32-12-13)


## ஆண்டொன்று சென்றாலும் ஆறுமோ எம்மனது..!

தோற்றம்
20
04
1970



மறைவு
09
11
2002

திதி:- 29-10-2003

### அமரர் அழகர்சாமி சிவகுமார் (சிவா)

ஈண்டுநீர் எம்மோடு இணைந்தே இருந்ததுவும்
இன்பக்கதை பலபேசி இசைந்தே வாழ்ந்ததுவும்
பூண்டுபல சேவையினைப் புவிக்கே தந்ததுவும்
பூரிப்போ டுமைத்தாங்கும் புன்னகையும் மறந்தே
மாண்டனையோ சிவகுமரா மனமுடைந்து அரற்றுகின்றோம்
மண்ணதனில் உம்மோடு மகிழ்ந்திருந்த நினைவலைகள்
ஆண்டொன்று சென்றாலும் ஆறுமோ எம்சிவாவே!
அரனவனின் தாளின்கீழ் அடைந்திடுவீர் சாந்தி!!

*30. கலட்டிஅம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (24181) (32-12-13) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(நடராசா)

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை வேலாயுதபிள்ளை 26.10.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் தர்மராணி, தையல்நாயகி, தர்மராஜா (லண்டன்), தர்மநாயகி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற முருகானந்தன் மற்றும் செல்வநாயகம் இந்திராதேவி (லண்டன்), விபுலானந்தன் ஆகியோரின் மாமனாரும் அச்சுதராஜா சுதர்சினி (கணக்குப் பதிவுநர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்); சுதர்சன (லண்டன்), சுபாசினி (லண்டன்), வினோஜா, அனந்தினி (லண்டன்), மதுஷா, விபூஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2003) புதன்கிழமை முற்பகல் பதினொரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*C.C.T.M. பாடசாலை ஒழுங்கை,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (24186) (29-12-13-32)

தகவல்:
குடும்பத்தினர்
ராணி (மகள்).

# 245 தமிழர்கள் கைதாகி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

வருமாறு:-

காணாமற்போனோர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் செய்யப்பட்ட 327 முறைப்பாடுகள் குறித்து விசாரிக்குமாறு பணிக்கப்பட்டோம்.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் காணாமற்போன 281 பேர் குறித்து எம்மால் விசாரிக்க முடிந்தது. 35 பேர் சம்பந்தமாக எங்களால் தொடர்புகளை மேற்கொள்ள முடியவில்லை. மேலும் 9 பேர் தொடர்பாக எமது அழைப்பாணைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை.

நாம் விசாரித்த 281 பேரில் 256 பேர் தமிழர்கள். எஞ்சிய 25 பேரும் முஸ்லிம்கள்.

256 தமிழர்களில் இருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 245 பேர் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு பின்னர் காணாமற்போயுள்ளனர். மற்றொருவர் கடற்படையால் கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமற்போனார். காணாமற்போன மற்றைய ஐவர் குறித்தும் தடயம் ஏதும் இல்லை. எஞ்சிய மூவரும் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் அதிர்ஷ்டவசமாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காணாமற்போன இருபத்தியைந்து முஸ்லிம்களும் விடுதலைப் புலிகளால் கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமற்போயினர்.

எங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் அரச பாதுகாப்புப் படையினரால் கொண்டு செல்லப்பட்ட 248 தமிழர்களும், புலிகளால் கொண்டு செல்லப்பட்ட 25 முஸ்லிம்களும் அதன் பின்னர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காணாமற்போயிருக்கலாம்.

ஆனால், நாடு முழுவதிலும் இடம்பெற்ற இனப்படுகொலைகள், காணாமற் போதல், அரசியல் வன்முறைகள ஆகியவற்றை முற்றாக விளக்கும் ஒரு மாதிரி அளவீடாக இதனைக் கொள்ள முடியாது.

இவ்வாறு வடக்கில் காணாமற்போனோரில் 84 வீதத்தினர் முப்பது வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள். 66 வீதமானோர் திருமணமாகாதவர்கள்.

காணாமற்போனோரின் உறவினர்களிடமிருந்து இந்த விசாரணைகளின போது முழு ஒத்துழைப்புக் கிடைத்தது. ஆனால், சாட்சியமளிக்க வேண்டிய மற்றைய தரப்புகளிடமிருந்து அத்தகைய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

இராணுவத்[தினரைப்] பொறுத்த விடயங்களில் சம்பந்தப்பட்ட திகதிகள், முகாம் அமைந்திருந்த இடங்கள், தொடர்புபட்டவர்கள் எனக் கருதப்படும் இராணுவத்தினரை உள்ளூரில் அழைக்கும் நீண்ட மற்றும் குறுகிய பெயர்கள் போன்றவற்றையும் குறிப்பிட்டு, அவர்கள் தற்போதுள்ள இடங்களை வெளிப்படுத்தினால் அவர்களை நாம் நேரான முடியும் எனத் தெரிவித்தே ய.

ஆ[னா]ல், உத்தியோகப்பற்றற்ற விசாரணைகள் மூலம் - தற்போது பணியில் இருக்கும் இரு இராணுவத்தினரதும் மற்றும் தற்போது சிறையில் இருக்கும் ஒருவரினதும் உண்மையான பெயர் விவரங்களையே எம்மால் பெற முடிந்தது.

அவர்களின் சாட்சியங்களை எங்களால் பதிவு செய்ய முடிந்தது.

ஆனால், மிக முக்கியமான சாட்சி[கள்] பலரோடும் தொடர்பு கொள்ள எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்டோர் குறித்து நாம் தெரிவித்த தகவல்கள், சேவையில் உள்ள அத்தகையோரை அடையாளம் காண்பதற்குப் போதுமானவையல்ல என்று தெரிவித்தே அவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டது. ஆள்கள் காணாமற்போனதற்குக் காரணமாக இருந்த அத்தகைய சிலருக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அவர்களே ஒப்புக்கொள்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாளம் காணமுடியாமல் போனதற்கு நியாயமான காரணங்கள் ஏதும் இருப்பதாக எமக்குத் தோன்றவில்லை.

எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட 37 இராணுவத்தினரின் பட்டியலில் ஒருவரைக்கூட இராணுவத்தினரால் அடையாளம் காணமுடியாமல் போயிருக்கின்றது. இதற்கு இராணுவத்தின் திறமையின்மை, அலட்சியம் அல்லது அசிரத்தை, ஒத்துழைப்பு வழங்கினால் பழி சுமத்துகின்ற சாட்சியங்கள் அம்பலமாகிவிடும் என்ற அச்சம் காரணமான பின்னடிப்பு போன்றவையே அடிப்படை எனக் கருத வேண்டியுள்ளது.

இராணுவத்தில் தொடர்ந்து சேவையாற்றும் - நாம் சந்தித்த - இருவரும் கூட, எங்களுக்குப் பயனுள்ள தகவல்களைத் தரவில்லை. சம்பந்தப்பட்ட காலத்துக்குரிய ஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் அழிந்துவிட்டன என்றனர் அவர்கள்.

அவர்களில் ஒருவர் கேணல் துமிந்த கெப்பிற்றிவலன. காணாமற்போன பல சம்பவங்களோடு இவரது பெயரே தொடர்புபட்டது. அத்தகைய சம்பவங்களில் இவரது சம்பந்தம் குறித்து முறைப்பாட்டாளர்கள் மிகத் தெளிவான நினைவாற்றலோடு சாட்சியமளித்தனர். ஆனால், இவரோ அப்படித் தமக்கு ஏதும் நினைவில் இல்லை என்று கூறிவிட்டார்.

புலிகளின் விடயத்தில் பாதிப்புற்றோரில் ஒருவரை மட்டுமே அடையாளம் காட்டினர். அவரை சாட்சியமளிக்க வருமாறு நாம் அழைத்தபோது அவர் அதை ஏற்றுக்கொண்டு வந்தார். அவரும்

தமக்கு ஏதும் நினைவில் இல்லை என்றார். எனினும், ஆவணங்களைப் பரிசோதித்த பின்னர் தகவல் தருவதாகத் தெரிவித்தார். அவருக்குப் பல நினைவூட்டல்கள் அனுப்பியும் பதிலேதும் கிடைக்கவில்லை.

நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதப் போக்கில் பொலீஸாரும், ஆயுதப்படையினரும் ஈடுபட்டனர் என நாம குற்றம் காண்கின்றோம். குறிப்பாக முஸ்லிம்களை இலக்கு வைத்து நடந்ததற்காக புலிகள் மீது குற்றம் காணகிறோம் -

சட்டவிதிகளை மீறியதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என சிபாரிசு செய்கிறோம்:-

☆ தடுப்புக்காவல் தொடர்பான விதிகளையும் ஏனைய சட்டவிதிகளையும் பேணாமை பாரதூரமான குற்றம். சம்பந்தப்பட்டோருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ அவர்களுக்கு எதிராக மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கவேண்டும். அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கத்தவறிய மேலதிகாரிகளுக்குஎதிராகவும், ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டும்

☆ இதற்கான தண்டனை கடுமையானதாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு அந்த விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக விவரங்கள பின்னர் 'உதயனில்' பிரசுரமாகும்.

THE ROYAL COLLEGE OF JAFFNA

தமிழ் ஆசிரியர் உடன் தேவை (ஆண்டு 11வரை). அனுபவம் குறைந்தது 5வருடம். சம்பளம் மணித்தியாலம் 30/= to 60/=. தொடர்பு: தலைமை ஆசிரியர், 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (24182) (29)

தேவை

(1) மில்வேலையில் அனுபவம் உள்ளவர்.

(2) பழக விரும்புபவர்.

தொடர்பு:

பிருந்தா மில்ஸ்

N-18, றக்கா றோட், யாழ்ப்பாணம்.

Tele. - 5745 (24187) (29)

நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த



திருமலை

தினசரி காட்சிகள் : 11.00 3.00 7.00 10.00 (பு.நே.)

ஆசனங்களை பின்வரும் இடங்களில் பதிவுசெய்யலாம்.

ரட்ணம்ஸ் பாட்டா 49, கஸ்தூரியார் வீதி, யாழ். T.P.: 021-222 2917. | நாகம்ஸ் பாட்டா சுன்னாகம் 060 221 2779.

(C/29960)(17)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய

சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த

பாலாவின் பிதாமகன்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளலாம்.

(C-29904) (30)

லிபேட்டி அச்சுவேலி

சேரன், ரதி, மணிவண்ணன் நடித்த

சொல்ல மறந்த கதை

காட்சி நேரம்: 3.00, 7.00. (தினசரி)

வெள்ளி முதல் விஜயின் பகவதி

(C/30851)

# அரிசி ஆலை நீராவி உலை வெடித்தது தொழிலாளி, அவரது மகள் பரிதாப மரணம்!

## நிந்தவூரில் சம்பவம்; வேறு நான்கு தொழிலாளர்கள் படுகாயம்

நிந்தவூர்,ஒக்.29

நிந்தவூர் 22ஆம் பிரிவு பிரதான வீதியிலுள்ள தனியார் அரிசி ஆலை ஒன்றில் நெல் அவிக்கும் நீராவி உலை வெடித்துச் சிதறியதால் ஆலையின் கூலித் தொழிலாளி ஒருவரும் அவரது ஆறுமாத பெண் குழந்தையும் கொல்லப்பட்டனர். மேலும் நான்கு தொழிலாளர்கள் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுக் காலை 8.15 மணியளவில் நிந்தவூரை பெரும் பரபரப்பிலாழ்த்திய இந்த அனர்த்தத்தில் மட்டக்களப்பு கரவெட்டியைச் சேர்ந்த இசாந்த குமார் என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையும் அவரது ஆறு மாதக் குழந்தையான தர்சிகாவுமே இறந்துள்ளனர்.

காயமடைந்த தொழிலாளர்கள் காரைதீவு விசேட அதிரடிப்படையினராலும், பொதுமக்களாலும் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டுசெல்லப்பட்டனர்.

அரிசி ஆலைத் தொழிலாளர்களான என்.நிமலன் (சித்தாண்டி, மாவடிவேம்பு), புண்ணியமூர்த்தி (கரவெட்டி, நாவற்காடு), குமரகுரு (உன்னிச்சை), எம்.நவாஸ் (நிந்தவூர்) ஆகியோருக்கு நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைகள் அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரிசி ஆலையின் நீராவி உலை பொருத்தப்பட்டிருந்த கட்டடப்பகுதியும், அருகிலுள்ள சுவர்களும் இடிந்து நொறுங்கிக் காணப்பட்டன.

சம்மாந்துறைப் பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

குழந்தைக்குப் பால் வாங்குவதற்குப் பணம் இல்லாத நிலையில், கணவனிடம் பணம் பெற குழந்தையுடன் அரிசி ஆலைக்கு வீட்டிலிருந்து வந்ததாகவும், வந்த இடத்தில் கணவரையும், குழந்தையையும் பறிகொடுத்து விட்டதாகவும் சாந்தகுமாரின் மனைவி அழுது புலம்பியவாறு தெரிவித்தார்.

# எலிசெய்த வேலையால் புத்தளத்தில் பரபரப்பு

புத்தளம்,ஒக்.29

நேற்றுக்காலை புத்தளம் நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நகர மத்தியிலுள்ள 'வயம்ப அபிவிருத்தி வங்கி' கொள்ளையிடப்பட்டுவிட்டது என பரவிய வதந்தியே இதற்கான காரணமாகும்.

அங்கு சென்று விசாரித்தபோது, உண்மை தெரியவந்தது பாதுகாப்பிற்காகப் பொருத்தப்பட்டிருந்த வங்கியின் 'மின்சார அலாரம்' (அபாய மணி) திடீரென அதிகாலையில் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இதன் மற்றோர் அலாரம் பொலீஸ் நிலையத்திலும் உள்ளது. அந்த அலாரமும் ஒலிக்கத் தொடங்கவே பொலீஸார் அவ்விடத்துக்கு விரைந்தனர். ஆயினும் கொள்ளை எதுவும் நடைபெறவில்லை.

வங்கி முகாமையாளரிடம் இது பற்றி வினவியபோது மின்சார அலாரம் மீது எலியொன்று பாய்ந்ததால் அது அலறியுள்ளது. இதுதான் பரபரப்புக்குக் காரணம் என்று கூறினார்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த நபருக்கு ரூ. 4,000 அபராதம்

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த குற்றச்சாட்டில் அச்சுவேலி பொலீஸாரால் ஆஜர்செய்யப்பட்ட நபரொருவருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் 4000 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். மணலும் பறிமுதல் செய்யப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் லொறியில் மணல் ஏற்றி வந்தவேளை கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட தர்மலிங்கம் சிவகுமார் என்ற நபருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-150)

நிரஞ்சனாஸ் சங்கானை

ஜீவா, ஸ்ரீதேவி நடித்த

தித்திக்குதே

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

காலை முதல் எங்க வீட்டு பிள்ளை

M.G.R. (இருவேடம்), சரோஜா தேவி.

## வர்த்தக நிலையங்களில் நேற்று திடீர் சோதனை

சாவகச்சேரி சந்தையில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் நேற்று திடீர் சோதனை நடத்தினர்.

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு வர்த்தகர்களின் முன்னாலேயே அழிக்கப்பட்டன.யாழ். பிராந்திய உணவு மருந்து பரிசோதகர் அமகாதேவன், சாவகச்சேரி நகர பொதுசுகாதார பரிசோதகர்களான க.கண்ணன், எஸ்.மணிவண்ணன் ஆகியோர் பரிசோதனைகளில் ஈடுபட்டனர். (ம-117)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நடராசா

சண்டிலிப்பாய், மண்டுமண்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 27.10.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணவேணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஸ்ணராசா மற்றும் இரஞ்சினிதேவி, பகீரதன், சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகமுத்து கந்தையா - செல்லம்மா ஆகியோரின அன்பு மகனும் மார்க்கண்டு, ஞானம்மா, சரஸ்வதி, இராசேந்திரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கிருஸ்ணவேணி (மனைவி)
பகீரதன், சுதாகரன் (மகன்மார்)

மாவடி,
வட்டுக்கோட்டை. (24190) (29-12-18)

## சிவசிதம்பரம் அன்னமுத்து

மூளாயைப் பிறப்பிடமாகவும் மாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசிதம்பரம் அன்னமுத்து நேற்று (28.10.2003) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசிதம்பரத்தின் அன்பு மனைவியும் சி.குகனேசன், கே.மீனாம்பாள், சி.சிவலோகநாதன், சி.இராஜேஸ்வரி, சி.புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கு.தனலட்சுமி, வ.கேதீஸ்வரநாதன், சி.ஞானாம்பிகை, த.சிவனேசன் காலஞ்சென்ற பா.தில்லைசசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாவடிச்சந்தி,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை. (C/31018) (36-29-12-18)

அறிவித்தல்

01.11.2003 இலிருந்து Department of English, Psalm Institute of Engineering and Technology இனால் நடத்தப்படும் தேசிய ஆங்கில டிப்ளோமாவிற்கான கட்டணம் ரூபா 1000/= ஆக அதிகரிக்கப்படுகிறது.

தேசிய ஆங்கில டிப்ளோமா

நாடு தழுவிய பொது பரீட்சை MAY 2004

வீட்டிலிருந்து யாரும் இலகுவாக கற்கக்கூடியதான 24 புத்தகங்கள் கொண்ட பாடநெறிக்கான மொத்தக் கட்டணம் 500/= (31.10.2003 வரை விண்ணப்பிப்பவர்களுக்கு)

பாடநெறிகள்:

1. NDET: ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா

2. NDEW: வேலை செய்வோருக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா

3. NDEC: பொதுவான தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா

சுய விவரங்கள் தெரிவுசெய்யும் பாடநெறி அடங்கிய விண்ணப்பம் மற்றும் ரூபா 500/= இற்கான காசுக் கட்டளையினை அனுப்பவேண்டிய முகவரி:

Psalm Institute of Engineering and Technology
22-1/3, Galle Road, Dehiwala.

காசுக் கட்டளை "PSALMS TECHNOLOGIES" என்ற பெயருக்கு "DEHIWALA" தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுக்க வேண்டும். (C/31011)(29-12-18) -DIRECTOR.

# முஸ்லிம் பிரதிநிதிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில தினங்கள் பொறுத்திருக்கவேண்டும்.

*கேள்வி:* 31ஆம் திகதி நோர்வேயிடம் வரைவு கொடுத்தவுடன் அதன விவரத்தை வெளியிடுவீர்களா?

*பதில்:* 31ஆம் திகதி மாலை நோர்வேயிடம் வரைவைக் கையளிக்கவிருக்கின்றோம். மறுநாள் காலை ஊடகங்களுக்கு வெளியிடவிருக்கின்றோம்.

*கேள்வி:* தமிழ் மற்றும் மலையகக் கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளீர்கள். முஸ்லிம்தரப்புடன் ஏன் பேசவில்லை?

*பதில்:* முஸ்லிம் தரப்போடு பேசவேண்டிய தேவைப்பாடு நிச்சயம் இருக்கிறது. இடைக்கால சபை வரைவை கையளித்தபின் அவர்களோடு பல விடயங்கள் குறித்துப் பேசவேண்டியுள்ளது. அவர்களது பிரதிநிதித்துவம் சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராய வேண்டியுள்ளது. எமது திட்ட வரைவைக் கையளித்தபின் விரைவில் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவோம்.

*கேள்வி:* வரைவில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் அளித்துள்ளீர்களா?

*பதில்:* நிச்சயமாக தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழ்கின்ற அனைத்து சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவமும அவர்களது அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய விடயங்களும் வரைவில் உள்ளன என நம்புகின்றோம்.

*கேள்வி:* போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின் கருத்து என்ன?

*பதில்:* தற்போது இது சம்பந்தமாக நோர்வே தரப்போடு நாம் கருத்துக்களை பரிமாறிக்கொண்டிருக்கின்றோம். எனவே இது சம்பந்தமாக உடனடியாக கருத்துக்கூறுவது பொருத்தமில்லை. எனக் கருதுகிறேன் ஊடகங்களின் செய்திகளை மட்டும் வைத்துக் கொண்டு இதற்கு கருத்துச்சொல்வது சமாதான சூழலை ஒரு நெருக்கடி நிலைக்கு தள்ளிவிடும் என்ற காரணத்தால் இதுபற்றி தற்சமயம் கருத்து ஏதும் சொல்ல நாம் விரும்பவில்லை.

*கேள்வி:* ஒரு தரப்பின் கோரிக்கையின் பேரில் கண்காணிப்புக் குழுவின் கட்டமைப்பில் மாற்றம் செய்ய முடியுமா?

*பதில்:* இது சம்பந்தமான கருத்துக்களுக்கு விடைதருவதற்கு இன்னும் காலம் தேவையாக இருக்கிறது.

*கேள்வி:* வரைவு கையளித்தவுடன் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்று கருதுகிறீர்களா?

*பதில்:* இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக இருதரப்பும் நேரடியாகப் பேசி முடிவு எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த வகையில் அது சாத்தியப்படும் என்றே நம்புகின்றேன்.

*கேள்வி:* இந்தப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* பேச்சை எப்போது ஆரம்பிப்பது என்பது எங்கள் கைகளில் இல்லை. அனுசரணையாளர் தரப்பு இருக்கின்றது. இலங்கை அரசுத் தரப்பு உள்ளது. அத்தரப்புகளின் நிலைப்பாடுகள் மற்றும் கருத்துக்களுக்கு அமையவே திகதி, காலம், இடம் நிர்ணயிக்கப்படலாம். எங்களைப் பொறுத்த வரையில் எப்பொழுதுமே நாம் தயாராகவிருக்கின்றோம்.

*கேள்வி:* தமிழ் மலையகக்கட்சிகளுடன் வரைவு பற்றிப் பேசுவது போன்று சிங்கள கட்சிகளுடனும் நீங்கள் பேசவிருக்கிறீர்கள் என்று வெளியாகும் செய்திகள் குறித்து...?

*பதில்:* நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இலங்கை அரசுடன் தான் எங்கள் அரசியல் உரிமைகள் தொடர்பாக பேசுகின்ற நடைமுறையே இப்போது உள்ளது. தெற்கில் இருந்து அமைச்சர்களை அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவது தேவையற்றது என்று தான் கருதுகின்றேன்.

சிங்களக் கட்சிகளுடன் பேசுவது குறித்து நாம் இன்னமும் சிந்திக்கவில்லை.

சிங்கள மக்களின் அமைப்புக்கள மத்தியில் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

*கேள்வி:* அரசு - புலிகள் பேச்சு ஆரம்பிக்கும் போது புலிகளின் பேச்சுக் குழுவுக்கு நீங்களே தலைமை தாங்கி செல்வீர்களா?

*பதில்:* இதுபற்றி எமது தலைமைப்பீடம்தான் முடிவுசெய்யும். தற்போதுள்ள சூழலில் எமது தலைமைப் பேச்சாளர் உடல் நலக்குறைவாக இருக்கிறார். அவரின் உடல் நிலை தேறுமாக இருந்தால், தொடர்ச்சியாக பழைய நிலைமை பேணப்படும். அப்போதைய சூழ்நிலையில் நிலைமைகளைப் பொறுத்து தலைமைப்பீடம் இது குறித்து உரிய முடிவை எடுக்கும்.

# கண்காணிப்புக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாது. எனவே, இதுவிடயத்தில் ஜனாதிபதியின் உத்தரவு முழு அளவில் பின்பற்றப்படும். அதில் இரண்டு கருத்துக்கே இடமில்லை" - என்று கூறியதன் மூலம் ஜனாதிபதியின் தீர்மானத்தை நியாயப்படுத்துகிறார் ஜெனரல் பலகல்ல.

"எனினும், ஜனாதிபதியின் பணிப்பு கண்காணிப்புக் குழுத் தலைவர் என்ற தனி ஆளுக்கு எதிரானதே தவிர, கண்காணிப்புக் குழுவுக்கு எதிரானதல்ல" என்றும் ஜெனரல் பலகல்ல விளக்கமளிக்கின்றார்.

"எனவே, கண்காணிப்புக் குழுத் தலைவருடனான தொடர்புகளைத் தவிர்த்து, கண்காணிப்புக் குழுவின் ஏனைய அதிகாரிகளுடன் படையினர் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயற்பட்டு வருவார்கள்" என்றார் அவர்.

"பொதுவாக ஒரு சந்தர்ப்பங்களைத் தவிர, கண்காணிப்புக் குழுத் தலைவருடன் தொடர்புகொள்ள வேண்டிய தேவை படையினருக்கு ஏற்படவில்லை; ஏற்படுவதில்லை. பெரும்பாலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே அவருடன் தொடர்புகொள்ள வேண்டியவராக இருக்கின்றார்.

"படையினரைப் பொறுத்தவரை பிரதேசங்கள், பிராந்தியங்களில் உள்ள தளபதிகள் அந்தந்தப் பிரதேச கண்காணிப்புக் குழுவினருடன் மட்டுமே தொடர்புகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்; தொடர்புகொள்கின்றார்கள். அந்தச் செயற்பாடு தங்கு தடையின்றித் தொடரும். அதன் மூலம் பிரச்சினைகள் அந்தந்த மட்டங்களில் தீர்க்கப்படுவது தொடர்ந்து இடம்பெறும். அதில் தடை ஏதும் ஏற்படாது!" - என்றார் ஜெனரல் பலகல்ல.

கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக நிரப்பப்படாமல் இருந்த கூட்டுப் படைகளின் தலைமை அலுவலர் பதவியை இராணுவத் தளபதியான ஜெனரல் பலகல்ல நேற்றுமுன்தினம் ஏற்றுக்கொண்டார்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் தொடர்பான ஜனாதிபதியின் உத்தரவை படைத்தளபதிகள் எவ்வாறு கையாளப் போகின்றீர்கள் என்ற சந்தேகம் நிலவிய சூழலில், முப்படைத் தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் மேலேயுள்ள, தலைமை அலுவலர் பொறுப்பில் இருக்கும் ஜெனரல் பலகல்ல தெரிவித்த கருத்து முக்கியமானதாக அமைகின்றது. இதே கருத்தையே ஏனைய தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் பின்பற்றுவர் என எதிர்பார்க்கலாம்.

# பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சர் ஒரு அறிக்கை தயாரித்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின பணிப்பின் பேரில் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன திருகோணமலைக்குச் சென்று படை அதிகாரிகளையும் சந்தித்து விசாரணை நடத்தியிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சரின் இந்த அறிக்கையை அடுத்து கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரச்சினை தொடர்பாக அரசு ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

# அரசு-புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் நீடித்தன. அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கனும் புலிகள் சார்பில் பேச்சில் கலந்து கொண்டார்.

அமைச்சர் தொண்டமான் மேலும் கூறியதாவது:-

பிரச்சினைகளைத் தீர்க்க யோசனைகளை முன்வைக்கும் உரிமை புலிகளுக்குத்தான் உண்டு. எமது பிரச்சினையை நாம் தீர்த்துக்கொள்வோம். இடைக்கால நிர்வாக வரைவு குறித்து நாம் யோசனை தெரிவிக்கவேண்டியதில்லை. நாம் ஆதரவைத்தான் தெரிவிக்கமுடியும்.

எங்களை ஒரு கட்சியாக விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கிறார்கள். மலையக மக்களை நாம் பிரதிநிதித்து வப்படுத்துகின்றோம். சிறுபான்மையினர் என்ற வகையில் எமது ஆதரவும் இருக்க வேண்டும் என்று புலிகள் விரும்புகிறார்கள். அது நியாயமானது - என்றார்.

கொழும்பில் இருந்து ஏ-9 பாதையூடாக கிளிநொச்சிக்கு நேற்றுக்காலை அமைச்சர் தொண்டமான் குழுவினர் வந்தனர்.

அநுராதபுரத்தில் இருந்து விமானப படை வீரர்களின் பாதுகாப்புடன் ஓமந்தைக்கு வந்த தொண்டமான் குழுவினருடன் சீருடை அணிந்த, ஆயுததாரிகளான விமானப்படையினரை கிளிநொச்சிவரை விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை. இதனால், அவர்கள் திரும்பிச்சென்றனர்.

சிவில் உடையில் அவருடன் வந்த பொலீஸார் மட்டும் கிளிநொச்சி வர அனுமதிக்கப்பட்டனர்.

தொண்டமானுடன் இ.தொ.கா. பிரதித் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி, 'பிரதி' கைத்தொழில் அமைச்சர் எம்.முத்து சிவலிங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இன்றைய அரசியல் நிலை, இடைக்கால வரைவு ஆகியன குறித்து இப்பேச்சில் ஆராயப்பட்டது. பேச்சு முடிந்ததும் அமைச்சர் குழு உடன் கொழும்பு திரும்பியது.


வாழ்த்துகிறது

"விஜேய்" இன் தீபாவளி வாழ்த்துக்கள்!!

யாழ். மண்ணில், நல்லூரில் நடைபெற்ற டாக்டர் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின்

"இசைமழை"

அழகிய வர்ண அட்டையுடன் கசற், சீடி (CD) விற்பனைக்கு உண்டு.

விஜேய் றெக்கோடிங் சென்றர்.
539, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
கிளை: ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.
(241.85/32-12-19)


# 'பொடா' சட்டத்தைத் திருத்த இந்திய ஜனாதிபதி ஒப்புதல்

இந்தியாவில் 'பொடா' சட்ட மறு ஆய்வுக் குழுவுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் அவசர சட்டம் குறித்த அறிவிப்பை இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் நேற்றிரவு வெளியிட்டார். 'பொடோ' சட்டத்தை தவறாகப் பயன்படுத்தும் மாநில அரசுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் இதன்மூலம் மறு ஆய்வுக் குழுவுக்கு கிட்டும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது இந்த அவசரச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது அரசியல் பழிவாங்கல்களுக்கு 'பொடா' சட்டத்தை பயன்படுத்துவதாக விமர்சகர்கள் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

# வயோதிபர் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து அங்கு மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

நகர் புறத்தில் இராணுவத்தினரும் பொலீஸாரும் கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மூதூர் இறங்குதுறையில் கடற்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பதால் தமிழ்மக்கள் நகருக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மூதூர் தெற்கு, மூதூர் கிழக்கு, கிளிவெட்டி ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்துகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. தமிழ்மக்கள் நடமாட்டம் முற்றாகக் காணப்படவில்லை.

போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், பொருள்களின் விலைகளும் பலமடங்கு அதிகரித்துள்ளன.

குழந்தைகளுக்கான பால்மா மற்றும் மருந்து வகைகள் ஆகியவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மூதூர் - திருமலை படகுசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும், தமிழ் மக்கள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர். தமிழ் பிரதேசங்களில் இருந்து நோயாளர்கள் கிளிவெட்டி ஊடாகவே திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

# முஸ்லிம் காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

31 ஆம் திகதி இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான பதில் வரைவு ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், அதனையடுத்து அவ்வறிக்கை சம்பந்தமாக ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை புலிகள் ஏற்பாடு செய்துள்ளதாகவும் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார். சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படக் கூடிய சூழல் ஏற்பட்டு விடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையில் வெளியாகிய ஒரு ஆங்கில வார இதழில் விடுதலைப் புலிகளின் அறிக்கையிலுள்ள பல விடயங்கள் வெளியாகியுள்ள விடயம் குறித்து அமைச்சர் ஹக்கீம் அங்கு பிரஸ்தாபித்த போது தன்னால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியாது என்று அவர் கூறினார்.

முஸ்லிம் சமூகம் தனித்தரப்பாக பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்காது போனால் சமாதானப் பேச்சு அர்த்தமற்றதாகிவிடும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வலியுறுத்திக் கூறினார். முஸ்லிம்கள் பற்றி இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என சொல்ஹெய்ம் பதிலளித்தார்.

எவ்வாறெனினும், புலிகளின் பதில் வரைவு கையளிக்கப்பட்ட பின்னரே முஸ்லிம் தனித்தரப்பு பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும் என்று சொல்ஹெய்ம் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் தங்களது நிலைப்பாட்டினை அவருக்குத் தெளிவாக எடுத்துக் கூறினர்.

யுத்தநிறுத்தத்தின் பின்னர் கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைகள் திருப்திகரமாகவில்லை என்றும் கூறப்பட்டது. முஸ்லிம் பிரதேசங்கள் தற்போது அடிக்கடி அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன என்றும் -

இந்த நிலையை நீடிப்பதற்கு புலிகளின் தலைமை அனுமதிக்கக் கூடாதென்றும் - அது பற்றிய வேண்டுகோளை நோர்வே அரசாங்கமே அவர்களுக்கு விடுக்கவேண்டும் என்றும் - தூதுக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவது பற்றி உறுதிசெய்யப்பட்டிருந்த அரசாங்கத்தின் முந்திய வரைவில் மாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் விடயம் பற்றியும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு பதிலளித்த சொல்ஹெய்ம், நோர்வே அரசு வரைவில் மாற்றம் செய்வதற்கு உடந்தையாக இருக்கவில்லை என்று கூறினார். முஸ்லிம்கள் பேச்சுக்களில் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதற்கு முடிவு எடுக்கப்பட்டால் தாம் அதற்கு தடையாக இருக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சுக்களில் முஸ்லிம் மக்கள் நம்பிக்கையிழந்துவரும் ஒரு சூழல் உருவாகிவருகிறது என்றும் அது பற்றி புலிகளின் தலைமைத்துவத்தின் கவனத்துக்கு கொண்டுவரவேண்டிய பொறுப்பு நோர்வே அரசாங்கத்துக்கு உண்டு என்றும் தூதுக்குழுவினர் வலியுறுத்தினர். முஸ்லிம் காங்கிரஸ் புலிகளுடன் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் பற்றிக் குறிப்பிட்ட சொல்ஹெய்ம் அவ்வாறான சந்திப்பொன்றை ஏற்படுத்தித்தர தம்மால் முடியும் என்றும் உறுதியளித்தார்.


எமது மனமுவந்த வாழ்த்துக்கள்



எமது நண்பனும் மணி கல்வி நிறுவன இயக்குநரும் பிரபல ஆங்கில ஆசிரியருமான

த. தனேந்திரன் அவர்கள்

இன்று இல்லறவாழ்வில் இனிதே இணைவதையிட்டு, அவர்களை வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆசிரிய நண்பர்கள், சங்கர், கபால்

(74167) (12-18)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.